# மக்கள் கரமும் மன்னன் சிரமும்

அண்ணாதுரை

பரிமளம் பதிப்பகம்,
காஞ்சிபுரம்-3.

முதற்பதிப்பு—1968

அல்லி அச்சகத்தில், அச்சிடப்பட்டது.

# கருத்துரை


மக்கள் கரம், மன்னன் சிரத்தையும் கொய்திடும் வலிவு பெற்றது.

அது ஏர் பிடிக்கும், துலாக்கோல் பிடிக்கும், கூப்பும், தழுவும், வரி செலுத்தும், வணக்கம் கூறும்—ஆனால் தாங்கொணாத கொடுமை செய்து, உரிமையைப் பறித்திடக் கொடுங்கோலன் கிளம்பினால், அந்தக்கரம், அவன் சிரம் அறுக்கும்.

சார்லஸ் மன்னன் சம்பவம், இதைக் காட்டும் பயங்கரப் பாடம்.

பாராள்வோர் எப்போதும் நினைவில் வைத்திருக்கவேண்டிய பாடம்.

'திராவிடநாடு' இதழில் தொடர் கட்டுரையாக வெளிவந்த அந்தக்காதை இங்கு தரப்படுகிறது.



# மக்கள் கரமும் மன்னன் சிரமும்

மக்கள்—எவ்வளவுதான் ஆராய்ச்சியுடன் பொருள் அறிய முயன்றாலும், எளிதிலே முழுப் பொருளும் புலனாகாத வகையிலே உள்ளதொரு ஒப்பற்ற சொல்-ஒவ்வொரு கோணத்திலிருந்து பார்க்கும்போதும் ஒவ்வொரு வகையான பொருள்! ஒரு நோக்குடன் காணும்போது கிடைக்கும் பொருள், பிறிதோர்நோக்குடன் காணும் போது கிடைப்பதில்லை. கையில் ஊமையராகத் தோன்றுவர் சில சமயம்; கண்ணில் ஊமையரோ எண்றெண்ணம் பிறக்கும் வேறோர் வேளையில்! ஏதுமறியாதார் என்றுரைக்கத் தோன்றும் சில சமயம் — எதையும் துருவிப் பார்த்தறியும் திறன் மிக்கவராகக் காட்சி அளிப்பார் வேறு சமயத்தில். பசி தீர உண்பதும் உறங்குவதுமே அறிவர் என்று கூறத் தோன்றும் சில சமயம் —உயிர் வெல்லமல்ல என்றுரைத்துக் கிளம்பும் இலட்சியப் பொறி, சில சமயம் கண்களில் கிளம்பும். எளிதல்ல, இதன் பொருள் அறிதல்! அறியாதிருத்தலே பேராபத்து! மக்கள் என்ற சொல்லின் பொருளிலே உள்ள ஆழமும் செறிவும், ஒருவருக்கும் முழுவதும் புலனாகாதது மட்டுமல்ல, அந்தப் பொருள், வளர்ந்தவண்ணமுமிருக்கிறது. நாட்டின் நிலைமைகளுக்கேற்ப, காலத்தின் தன்மைக்கேற்ப, இதன் பொருள் வளருகிறது; மிளிருகிறது. அதேபோல இந்தப்

பொருள், நாட்டு நிலைமையையும் காலத்தின் போக்கையும் மாற்றிவிடவும் செய்கிறது. மின்னும் வாளுக்கும், பாயும் அம்புக்கும், வீசும் வேலுக்கும், எறியும் ஈட்டிக்கும் இன்னின்ன முறையிலே பயனாகும்போது இன்னின்ன விதமான விளைவுகள் ஏற்படும், என்று போர்முறை வல்லார் கூறிடல் காண்கிறோம்—ஆனால், மக்கள்பற்றி இது போல, மதத்துறையினராயினும், ஆட்சிமன்றத் துறையினராயினும், வகுத்துக் கூறிட இயலுவதில்லை. தத்தமது அறிவுத் திறனுக்கு ஏற்றபடியும், எண்ணத்துக்குத் தக்கவாறும், பொருள் கொள்வர்; அவர் கொண்ட பொருள் குறையுடையதாகவும், தவறுடையதாகவும் இருந்திடும் போது, எதிர்பாராத நிகழ்ச்சிகள் வெடிக்கின்றன, எவருடைய ஆற்றலையும் அழித்தொழிக்கும் 'வலிவு' கிளம்புகிறது. ஆழமான பொருள்! ஆபத்தான விளைவுகளைத் தரத்தக்க ஆற்றலை உள்ளடக்கிய சொல்! பொருள் அறிதல் எளிது என்றெண்ணி, தனக்குத்தோன்றிய பொருளை முழுப்பொருள் என்று நம்பிக்கொண்டு, அதற்கேற்ற வண்ணம்செயல்பட முனைபவர், இறுதியில் பெரும் கஷ்டமடைகின்றனர்; வரலாறு எடுத்துக்காட்டும் உண்மை இது. பல மன்னர்கள் தம் முடியை இழந்துள்ளனர்; ஒரு மன்னன், தன் சிரத்தையே இழந்தான்! அவன் செய்த ஓரே தவறு, மக்கள் என்ற சொல்லின் பொருளை, தவறாகப் புரிந்துகொண்டதுதான்! அந்தத் தவறுக்காக, முதலாம் சார்லஸ் என்ற பிரிட்டிஷ் மன்னன், தன் தலையை இழந்தான். மக்கள் என்ற சொல்லின் பொருளை, அறிவதற்கு முழு ஆற்றலைப் பயன்படுத்த வேண்டும்—எப்போதும் விழிப்புடன் இருந்து, பொருள் வளர்கிறதா, மாறுகிறதா, என்பதைக் கவனித்தவண்ணம் இருக்கவேண்டும் என்ற பாடத்தைத் தரும் பயங்கரமான சம்பவம், சார்லஸ் மன்னன் கதை.

தூங்கும் புலி! என்று உவமை கூறுவர் மக்களுக்கு. குருடன் அதன் மீது இடறினால், கொல்லப்படுகிறான். அதுபோலவே கருத்துக் குருடர்களாக உள்ள ஆட்சியாளர்கள், 'தாமுண்டு தம் வாழ்வு உண்டு' என்று உழன்று கொண்டிருக்கும் மக்களைத் தூங்கும்புலி என்று அறியாது மிதித்தால், சீறி எழும் மக்கள், புரட்சி நடாத்தி, பொல்லாங்கைப் பொசுக்குகின்றனர். இது புரியக்கூடியதே! தூங்கும் புலி, என்பதைக் காணமுடியாத குருடனல்ல; விழி பழுதாகாதான், பல முறை மிதித்தும், புலி எழவுமில்லை, எழுந்தாலும் சீறிப் பாய்வதில்லை, பதுங்கிக்கொள்கிறது, அல்லது அவன் பாதத்தில், குச்சுநாய்க் குட்டி போலக் கிடக்கிறது; என்றால், அவனும், அவன் 'பாடம்' பெற்ற அவன் போன்றரும், புலி நம்மை ஏதும் செய்யாது என்று எண்ணிக்கொள்வர்.

ஆனால், மக்கள் தூங்கும் புலியாக மட்டுமல்ல—கல்லுருவில் உள்ள புலிபோலவே, சில சமயம் இருந்திருக்கின்றனர். அதே மக்கள் வேறோர் சமயம், தூங்கும் புலி எழுந்ததுபோல அல்ல, கல்லுருவில் இருந்த புலி, உயிர் பெற்றெழுந்து சீறிப் போரிடுவதுபோலச் செய்திருக்கின்றனர்.

முதலாம் சார்லஸ் மன்னன், மக்களை, கல்லுருவில் இருக்கும் புலி என்று எண்ணியே, காரியமாற்றினான்—சிரம் இழந்தான்.

பொதுவாகவே, மக்களின் இயல்பு அறிதல் எளிதல்ல; அதிலும் பிரிட்டிஷ் மக்களின் இயல்போ, மேலும் அதிகமான விசித்திரம் நிரம்பியது.

அவர்கள், 'பொதிசுமக்கும் மாடு' போலவும் இருந்திருக்கிறார்கள்! பாயும் புலியாகவும் மாறி இருக்கிறார்கள்! அரசனின் அடிபணிந்து வந்திருக்கிறார்கள்! அரசனின்

தலையை வெட்டி வீழ்த்தியுமிருக்கிறார்கள்! அரசனுக்காக என்று வீராவேச முழக்கமிட்டுக்கொண்டு களம் புகுந்துமிருக்கிறார்கள், அரசனை விரட்டி அடித்துமிருக்கிறார்கள்; கேட்ட வரிகளை எல்லாம் கொட்டிக் கொடுத்துமிருக்கிறார்கள்; வரிபோடும் அதிகாரம் உனக்கு ஏது என்றும் கேட்டிருக்கிறார்கள்.

இவ்வளவுக்கும், பிரான்சுக்காரருக்கு உள்ளது போன்ற கொதிப்புள்ளம் பிரிட்டிஷாருக்குக் கிடையாது; எளிதிலே, சூடு ஏறுவதில்லை!

முதலாம் சார்லஸ் மன்னர், ஏமாந்ததில் ஆச்சரியம் அதிகமில்லை; அவன் பிரிட்டிஷ் மக்களின் இயல்பை உணராததுதான் ஆச்சரியமானது.

ட்யூடர் பரம்பரை மன்னர்கள் காலத்துக்குப் பிறகு பட்டமேறிய முதலாம் ஜேம்சின் குமாரன், சார்லஸ். தன் ஆட்சிக்கு உட்பட்டிருந்த மக்கள், ட்யூடர் காலத்திலே, எப்படி நடந்துகொண்டார்களோ, அதனை அவர்கள் இயல்பு என்று எண்ணிக்கொண்டான்; அதனால் தன் ஆட்சி முறைக்கு எதிர்ப்புக் கிளம்பக் காரணமே இல்லை என்று நம்பினான்—தூக்குமரம் நாட்டப்பட்டபோதுகூட, அந்த நம்பிக்கை அவன் உள்ளத்தில் ஊசலாடிக் கொண்டிருந்தது.

மக்கள் கொதிப்பரோ என்பது பற்றிக் கவலையற்று ஆண்டான், எட்டாம்என்ரி—எதிர்த்தவர்களை, பிரபுக்களாயினும் கொன்றான்— மக்கள் சீறி எழவில்லை...வெறுப்புணர்ச்சி வெளிப்படவில்லை.

பதினாறு ஆண்டுகள் காதரைன் அரசியுடன் வாழ்ந்து வந்தான்—ஓர் நாள் அவன் பணிப்பெண் ஒருவள் மீது மையல்கொண்டான்—ஆன்பொலின் மனைவி ஆக்கப்பட்டாள். காதரைன் விலக்கி வைக்கப்பட்டாள்.

ஐரோப்பிய அரச குடும்பங்கள் கொதித்தன, என்ரி, அஞ்சவில்லை! போப்பாண்டவர் சாபமிடக் கிளம்பினர், அவருடைய 'கத்தோலிக்க' மார்க்கமே என் அரசில் கூடாது என்று உத்திரவு பிறப்பித்தான்—இந்தத் திடுக்கிடும் நிகழ்ச்சிகளைக் கண்ட பிரிட்டிஷ் மக்கள், உரத்த குரலில்கூடக் கண்டிக்கவில்லை.

காதரைன், ஆன்பொலின், ஜேன்சைமூர், ஆன், காதரைன் ஆவர்டு, காதரைன்பார்!

ஆறு மனைவிகள்—ஒருவர்பின் ஒருவராக!! யார் கேட்டார்கள்? யாருக்கும் தோன்றவில்லை! காலில் விழுந்தழுதாள் முதல் மனைவி காதரைன்; கருணை காட்டவில்லை! கண்டனம் பிறந்ததா? இல்லை! ஆசைக்கினியவள் என்று கூறி ஆன்பொலீனை திருமணம் செய்துகொண்டான். பிறகு அவள் வழுக்கி விழுந்தாள் என்று கூறிச் சிரம் கொய்தான்— யார் சீறி எழுந்தனர்? மக்கள் வாளா இருந்தனர்! மடாலயங்களைக் கலைத்தான், மக்கள் எழவில்லை! மனம்போன போக்கில் நடந்தான், மக்கள் அனுமதித்தனர்!!

ட்யூடர் பரம்பரை, மக்கள் உரிமையை மதித்து நடந்தார்கள் என்றோ, அடக்கு முறையை ஏவாமலிருந்தார்களென்றோ, கூறுவதற்கில்லை.

எனினும், பிரிட்டிஷ் மக்கள், விவசாயத்தை வள்மாக்குவதிலும், வியாபாரத்தைச் செழிப்புறச் செய்வதிலும் வீரத்தைப் பெருக்கிக்கொள்வதிலும், அறிவுத் துறையிலே நாட்டம் செலுத்துவதிலும், ஈடுபட்டிருந்தனர்—உரிமை பறிக்கப்படுவது பற்றியோ, மன்னர்கள் எதேச்சாதிகாரம் குறித்தோ கவலை எடுத்துக்கொள்ளவில்லை.

சார்லஸ் மன்னன், பிரிட்டிஷ் மக்கள், என்ன காரணத்தினுல், ட்யூடர் போக்கைக் கண்டிக்காமலிருந்தனர்

என்று எண்ணிப் பார்க்கவில்லை. பிரிட்டிஷ் மக்களின் இயல்பு அது, ஆள்வோரின் அடிதொழுவதுதான் அவர்கள் சுபாவம் என்று முடிவுசெய்தான். தவருன முடிவு! ஆபத்தான விளைவு!!

ட்யூடர் காலத்தில், பிரிட்டிஷ் மக்கள், ஆற்றல் மிக்கவர்கள் ஆளுகிருர்கள், முறையும் நெறியும் சில சமயம் கோணலாகி இருந்தாலும், நாட்டின் வளமும் கீர்த்தியும் பெருகுவதிலே திறன் படைத்திருக்கிருர்கள்; நாம் இப்போது உரிமைகளைப்பற்றி அதிகமாகக் கவலைகொண்டிருக்கத் தேவையில்லை; கடல் கடந்த நாடுகளிலே செல்வம் கிடைக்கிறது; தொல்வளம் பெருகினல் வாழ்விலே இன்ப சாதனங்கள் பெறக்கிடக்கிறது, இவைகளைக் கவனிப்போம், என்ற போக்கில் இருந்தனர். எப்போதும் இதே போக்குத்தான் இருக்கும், என்று எண்ணியது, சார்லஸின் தவறு மட்டுமல்ல; அவன் தோன்றிய ஸ்டூவர்ட்டு பரம்பரை செய்த தவறுமாகும்.

சார்லஸ் மன்னன், நாட்டைத் தன் களி நடனக் காடாக்கிக்கொள்ள எண்ணினவனல்ல! தன் போக போக்கியத்துக்காக மக்களின் சொத்துக்களைச் சூறையாடினவனல்ல! பிரன்ச்சு நாட்டுமன்னர்கள் அமைத்துக்கொண்டிருந்தது போன்ற கோலாகலமான கொலுமண்டபம் நிறுவிக்கொண்டு, அங்குகாமக்குரங்குகளைஉலவவிட்டுக் கொண்டிருந்த ஊலுத்தன் அல்ல! கற்றறியா மூடனுமல்ல! வெறிபிடித்தலைந்த வீணனுமல்ல!

ஏழைகளின் இரத்தத்தை உறிஞ்சிக் கொழுக்கும் பிரபுக்களைப் பராக்குக்காரர்களாகக் கொண்டு, அழகிகளைக் கண்டால் மனதை அலையவிட்டு ஆபாசமான கேளிக்கைகளில் ஆழ்ந்து கிடந்த மன்னர்கள் உண்டு.

நகருக்குத் தீ மூட்டிவிட்டு, அந்த நர்த்தனத்துக்கு ஏற்ற நாதம் எழுப்பிய நீரோ உண்டு.

சார்லஸ் மன்னன், இத்தகைய கெடுமதி கொண்டவனல்ல; கொடுமை செய்வதிலே களிப்புக் கொண்டவனுமல்ல. நேசத்துக்குரியவன்; நண்பர்களுக்கு இனியன்; நாட்டு மக்களை வேட்டைக்கு உரிய மிருகமென்று எண்ணிடும் பேயனல்ல!

தனிப்பட்ட மனிதன் என்ற முறையில், சார்லஸ் மன்னனிடம் வெறுக்கத்தக்க குணம் ஏதும் தலைவிரித்தாடவில்லை.

கடைசி வரையில் அவன் கொண்டிருந்த ஒரே பெருந்தவறான குணம், மக்களை உணராதது; அதன் பலனாக மன்னன் என்ற நிலைமையின் பொருளை அறியாமற் போனதுதான்.

கண்கள், கமலம்! குரல், குயில்! ஆடை, பட்டு! அலங்காரம், அமோகம்! பன்னீரில்தான் குளித்தெழுவாள்! எனினும் அந்த அணங்குக்குத் தொழு நோய்! என்பதுபோல, சார்லஸ் மன்னன் இருந்தான்.

ஆபத்தான ஒரு தத்துவத்திலே அவன் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தான்; அதை மக்கள் ஏற்கமாட்டார்கள் என்று அறியாமல், பன்னிப் பன்னிக் கூறிவந்தான்; மக்கள் அந்தத் தத்துவத்தை எதிர்க்க எதிர்க்க, முரட்டுப்பிடிவாதமாக அதனைக் கட்டிக் காத்துக் கொண்டிருந்தான், முடிகூட அல்ல, முடிதரித்த தலையே போயிற்று!

மன்னன்—ஆண்டவனுடைய அருள் பெற்றவன்.

தேவப்பிரசாதமாக மன்னனுக்கு அரசு கிடைக்கிறது.

எனவே, மக்களுக்கு எதை எப்படிச் செய்தல்வேண்டும் என்று அறியும் அறிவும், செய்யும் ஆற்றலும், உரிமையும், மன்னனுக்கு மகேசனால் தரப்படுகிறது.

மன்னன் தன் நடவடிக்கைகளுக்கான கணக்கை ஒப்படைக்கவேண்டியது, ஆண்டவனிடம்தான்.

மன்னனுடைய அதிகாரத்தை மட்டுப்படுத்தவோ, கட்டுப்படுத்தவோ, நீக்கவோ, ஆண்டவனுக்குத்தான் உரிமை—ஆற்றல்.

மக்களை ஆட்சி செய்யும் மகத்தான உரிமையை மகேசன் அளித்திருப்பதால், மக்கள் மன்னன் செய்வதை, மகேசன் ஆணைப்படி நடப்பதாக எண்ணி ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஆண்டவனின் அருளாலே அரச பதவி கிடைத்திருப்பதால், அரசனுடைய செயலைக் குறை கூறுவது, ஆண்டவனுடைய ஏற்பாட்டைக் குறை கூறுவதாகும்.

மன்னன், மக்களின் நலனுக்குக் கேடு சூழத்தக்க காரியம் செய்யமாட்டான், ஏனெனில், அப்படிப்பட்ட நடத்தைக்காரனை ஆண்டவன் அரசனாக்கி இருக்கமாட்டார்.

மக்கள், மன்னனுடைய எந்தச் செயலாவது கேடு தருவது எனக் கருதினாலும், எதிர்ப்பது, கடவுளை எதிர்ப்பதாகும்.

மக்களுக்குப் பரிகாரம் தேவை என்றால், ஆண்டவனிடம் முறையிட்டுக் கொள்ளவேண்டும்.

மக்களுடைய கோரிக்கை நியாயமானதாக இருந்தால் அரசனை அதனைச் செய்யும்படி ஆண்டவனே அருள் பாலிப்பார், அக்ரமம் செய்யும் அரசனை ஆண்டவன் தண்டிப்பார்!

அரண்மனையில் இருக்கும் அரசன், ஆலயத்தில் இருக்கும் ஆண்டவனுடைய பிரதிநிதி!

இந்தத் தத்துவம்தான், சார்லஸ் மன்னனின் தலையைப் பறித்தது!

இந்தத் தத்துவத்தைத் தந்து சென்றவர், சார்லசின் தந்தை ஜேம்ஸ்!! தந்தை மகர்க்காற்றும் உதவி இந்த வகையில் அமைந்தது.

ஜேம்ஸ் மன்னன், இந்த 'தேவன் அருள்' தத்து வத்தைப் பெரிதும் வலியுறுத்தி வந்தார்.

"அக்ரமக்காரன்!"—என்று ஒரு மன்னன் பெயர் எடுத்தால், மக்கள், ஒன்று அவனைக் கொன்றுபோடக் கிளம்புவர்; அல்லது இவன் ஒழியட்டும், நல்ல காலம் விடியட்டும் என்று பொறுத்துக்கொண்டு கிடப்பர்.

மன்னன், சித்த சுவாதீனமற்றவன் என்றால், "என்ன செய்வது! நமக்கு இப்போது வாய்த்த மன்னன் இப்படி இருக்கிறான்; இவன் மகன் பட்டத்துக்கு வந்தால் இந்தக் குறை நீங்கும்" என்று பேசி, மன அமைதி அடைவர்.

குடிலர்கள் கெடுக்கிறார்கள், அதனால்தான் மன்னன் கொடுமை புரிகிறான், என்றால், கெடுமதியாளரைத் தொலைத்திட வழி என்ன என்று எண்ணுவர்; தொலைத் திட முயற்சிப்பர்.

போக போக்கியத்தில் மூழ்கிக் கிடந்தால், வெறுப்பு மட்டுமே தோன்றும் அரசனிடம்.

மதியற்றவனாக இருந்தால், ஏளனம் செய்வர் மன் னனை.

கொடுமையாளனாக இருந்தால், மன்னனிடம் பயப் படுவர்.

சார்லஸ் மன்னன், கெடுமதி கொண்டவனல்ல, கொடுமைக்காரனல்ல சுபாவத்தில், எனினும் அவன் கொண்டிருந்த தத்துவத்தின் காரணமாக, மக்கள் வெறுப்பு, பயம், ஏளனம், காட்டினர்; சார்லசிடம் மட்டு மல்ல, அரசபதவி மீதே!

அரசன் எப்படியும் இருப்பான், ஏதும் செய்வான், ஆண்டவனிடம் முறையிட்டுக்கொள்வதன்றி, மக்களுக்கு வேறு வழி கிடையாது, என்றல்லவா, சார்லஸ் கூறுகிருன்? இதை ஏற்றுக்கொண்டால் இப்போது மட்டுமல்ல, இனி வருங்காலமெல்லாம், மக்கள் அவதிக்கு ஆளாகிக்கிடக்க வேண்டும், வாயில்லாப் பூச்சிகளாக இருக்கவேண்டும்! மக்களின் உரிமை, என்ன ஆவது? என்று எண்ணினர்— அந்த எண்ணம், மக்களைப் புலியாக்கி விட்டது.

உரிமை!! அந்தச் சொல்பற்றி, ட்யூடர் காலத்தில் அதிகமான கவலை கொள்ளாதிருந்த மக்கள், ஸ்டூவர்ட்டு மன்னர்கள் பேசிவந்த 'ஆண்டவன் அருள்' தத்துவத்தால், மன்னன் உரிமை இது என்ருல், மக்களின் உரிமை என்ன, என்று எண்ணலாயினர். எண்ணியபோது, மக்களுக்கு, முன்ளுள் நினைவுகள், முந்திய வரலாற்றுச் சம்பவங்கள், தம் மூதாதையர், போரிட்டுப் பெற்ற உரிமைகள், அந்த உரிமைகளின் காரணமாக, மன்னன் மக்களின் மூலமே அதிகாரம் பெறுகிருன், ஆகையால், மக்களின் ஆதரவு பெற்றே அரசாள வேண்டும் என்ற உண்மை, இவ்வளவும் தோன்றலாயின! தோன்றியதும், நமது உரிமையையல்லவா, சார்லஸ் பறிக்கிருன்— அதைக்கடவுள் கட்டளை என்று வேறு கதைக்கிருனே, இந்த அக்கரமத்தை அழித்தாக வேண்டுமே, என்று துடிக்கலாயினர்! இந்தத் துடிப்பைக் காண, உரிமை வேட்கையும் அதைப்பெறப் போரிடும் ஆற்றலும் கொண்ட வீரர் சிலர் முன்வந்தனர்! முடிதரித்த தலை, மண்ணில் வீழ்ந்தது.

"ஏசுநாதருக்கு ஒரு ஜான் இருந்தார்—எனக்கு ஒரு ஜார்ஜ் இருக்கிருர்— இதில் என்ன தவறு" என்று ஆணவமாகப் பேசினவன் சார்லசின் தந்தை.

ஊராரின் வெறுப்புக்கு ஆளான ஜார்ஜ்வில்லியர்ஸ் என்ற வாலிபனை, ஜேம்ஸ் மன்னன் அதிகாரமளித்து ஆதரித்தான்—ஜார்ஜ்வில்லியர்ஸ், பக்கிங்காம் கோமகன் எனும் செல்வ நிலைக்கு உயருமளவுக்கு. இதை மக்கள், வெறுத்தபோதுதான், ஜேம்ஸ், நானே நாடாளும் அரசன், எனக்கு யாரிடம் நம்பிக்கையும் பற்றுதலும் இருக்கிறதோ, அவர்களை அதிகாரத்தில் அமர்த்துவேன், நீங்கள் யார் அதைக் குறைகூற! என்று கேட்டான்!

இதை ஒரு தத்துவமாக்கி, ஏசுநாதர், யார் தமக்குச் சீடராகும் தகுதி உடையார் என்பதை அறிந்து ஜான் என்பவரைச் சீடனாகக் கொண்டதுபோல, நான் ஜியார்ஜ் என்பவரைக் கொண்டிருக்கிறேன்—எப்படி ஏசுநாதரை யாருமே அதற்காகக் குறை கூறலாகாதோ. அதேபோல, என்னையும் குறைகூறக் கூடாது! இரண்டும் பாபம், என்று எடுத்துரைத்தான்.

ஏசு, ஜேம்ஸ்! தேவன், மன்னன்!

பரலோகத்துக்கு ஏசு! இகத்துக்கு ஜேம்ஸ்!!

இந்தத் தத்துவத்தை மக்கள் உட்கொள்ள மறுத்தனர் —ஜேம்ஸ் திணித்தே தீருவது என்று வேலைசெய்தான்.

மன்னரின் அதிகாரம் மக்களால் கட்டுப்படுத்த முடியாதது—ஆண்டவன் அரசனைப் படைப்பிக்கிறார், அவரே அரசனைக் கட்டுப்படுத்த முடியும், என்ற விபரீத தத்துவத்தை விளக்க ஜேம்ஸ் மூன்று ஏடுகள் கூடத் தீட்டினான்.

இந்த ஏடுகளை விவாதத்துக்கு வைக்கவில்லை-விஷயமறியாத மக்கள் உண்மையை உணர்ந்து கொள்ளட்டும் என்பதற்காகத் தீட்டினான்!

நிரம்ப அறிவு முதிர்ச்சி உள்ளவன் என்ற எண்ணம் இந்த மன்னனுக்கு! மக்களுக்கு அறிவு ஊட்டும் ஆசா

னுகத் தன்னை ஆக்கிக் கொண்டான், தன் 'செல்லமான' தத்துவத்தை மகனுக்கும் ஊட்டினுன்.

மக்களுக்கும் சரி, மாதாகோயில் பூஜாரிக்கும் சரி, யாருக்கும் அடங்காதே! நீ அரசன்! ஆண்டவனுல் அரசனுக்கப்பட்டவன்! உனக்குள்ள அதிகாரம் அளவற்றது, எவராலும் கட்டுப்படுத்த முடியாதது—என்று கூறிக்கூறி, சார்லசின் இளம் உள்ளத்தில், இந்த நஞ்சை நன்ருகப் புகுத்தி இரத்தத்தையே கெடுக்குமாறு செய்து விட்டான். அவன் கண்டானு, அந்த நஞ்சு, மக்களை அல்ல, மன்னனையே கொல்லும் என்பதை. அவன் காலத்திலே, பிரிட்டனில் பரவிய, 'புகையிலை' வழக்கத்தால், மக்களுடைய உடல்வளம் கெடும், என்று புத்திகூற ஒரு ஏடு தீட்டிய இந்த மன்னன், மகனின் உயிரை வாங்கக் கூடிய ஒரு தத்துவத்தை ஊட்டிவிட்டுச் சென்ருன்.

ஒய்யார நடை உடை பாவனைகொண்ட ஜார்ஜ்வில்லியர்சையும், ஜேம்ஸ் தன் மகனுக்குத் தந்து சென்ருன்.

தத்துவம் ஒரு நஞ்சாக அமைந்தது—ஜார்ஜ்வில்லியர்ஸ், நச்சரவமாகவே அமைந்தான். இரண்டையும் சார்லஸ் மிக விரும்பிப் பாராட்டினுன்-இரண்டும் மக்களை ஆத்திரமடையச் செய்தன.

ஆண்டுக்கு ஆயிரம் பவுன் சம்பளத்தில், மன்னனின் படுக்கை அறைக் காரியத்தைக் கவனிக்கும் அதிகாரியாக 1614ம் ஆண்டு நியமிக்கப்பட்ட ஜார்ஜ்வில்லியர்ஸ், மிகவேகமாக ஜேம்ஸ் மன்னனுடைய ஆதரவைப் பெற்று, பல பதவிகளையும் பட்டங்களையும் பெற்று, 1617ம் ஆண்டிலே எண்பதாயிரம் பவுன் பெறுமான மூன்று நிலத்துக்குப் பிரபுவானுன்! அரச தயவு கிடைத்த மூன்ருமாண்டு அவனுக்கு ஆண்டொன்றுக்குப் பதினைந்தாயிரம் வருமானம் கிடைக்கலாயிற்று. இத்துடன்

திற்கவில்லை! பரம்பரைப் பிரபுக்கள் பாழடைந்த மாளிகை யிலே அமர்ந்த வண்ணம் பழங்காலப் பெருமைகளை எண்ணிக் கொட்டாவிவிட்டுக் கொண்டிருந்தனர். ஜார்ஜ்வில்லியர்ஸ் சிட்டெனக் கிளம்பினான், வல்லூறு போல, பதவிகளைக் கொத்தித்தின்று கொழுத்திடலானான். ஜேம்ஸ் மன்னன் ஜார்ஜ்வில்லியர்சிடம் வைத்திருந்த நம்பிக்கையும் பரிவும் இளம் சார்லசுக்குத் தெரிந்தது—வில்லியர்ஸ், தன் செல்வாக்கை வளரச் செய்ததுடன், அதனை நீடிக்கச் செய்வதற்காக, இளவரசனுடைய இதயத்தையும் வென்றான்—சார்லஸ், ஜேம்ஸ் காட்டியதைவிட அதிகமான ஆதரவு காட்டி, வில்லியர்சைத் தன் இணைபிரியா நண்பனுக்கிக் கொண்டான்.

பக்கிங்காம் கோமகனுகிவிட்டான், ஜார்ஜ்வில்லியர்ஸ்—பட்டத்தரசன் அவன் வார்த்தையைத் தட்டி நடப்பதில்லை. எனவே அரசனைச் சுற்றி இருந்த பிரபுக்களும் அதிகாரிகளும், பங்கிங்காமுடைய தயவுக்காகக் காத்துக்கிடந்தனர். தன் செல்வாக்கின் அளவை நன்கு அறிந்த பக்கிங்காம், பெரும்பொருள் திரட்டுவதிலும் பிரபுக்களை அடிமைப்படுத்துவதிலும் திருப்தி அடையவில்லை—மாளிகை மாடப்புருக்களுக்குக் கண்ணி வைப்பான், மகிழ்வான்—அரண்மனை மயில்களையே பிடித்து வைத்துக் கொஞ்சிடும் ஆணழகனுனான்! அவன் சொல், மன்னனுடைய சொல்லுக்குச் சமம்! அவன் பரிவாரம், மன்னருக்கு உள்ளது போன்றது! ஆணவம், அரசனும் கொள்ள அஞ்சும் அளவுக்கு இருந்தது. பக்கிங்காமின் அட்டகாசம் இங்கிலாந்தில் மட்டுமல்ல, பிரான்சிலும், ஸ்பெயினிலும் கூடப் பேசப்பட்டது-கண்டிக்கப்பட்டது. எனினும், மன்னன், அவனைத் தன் தோழனுகக் கொண்டான்—மக்கள் வெறுத்தனர், எனினும் மன்னன் சட்டைசெய்ய மறுத்தான்.

எந்தப் பதவி தேவையானாலும், மன்னனுடைய ஆதரவு கிட்டினால்மட்டும் போதாது— பக்கிங்காம் தலை அசைக்க வேண்டும்—அவன் சிரமோ, காணிக்கைபெருமல் அசையாது. நீதிமன்றத் தீர்ப்புகளை மாற்றுவான், வியாபாரக் கோட்டங்களை ஆக்குவான், அழிப்பான், மாளிகையிலிருப்போரைச் சிறைக்குள் தள்ளுவான். சிறையிலிருப்போரைச் சீமானுக்குவான். எதுவும் செய்வான், எவரும் அவன் பாதையில் குறுக்கிடக் கூடாது! தன் உறவினர்களுக்கு உயர் பதவி! பெரிய பிரபுக்களின் குடும்பத்தாருடன், மணவினை மூலமாக உறவு! பக்கிங்காம், முடிதரியா மன்னன் போலாகிவிட்டான். தன் விருப்பத்துக்கு மாருக நடப்பவர் யாராகு லும், அவர்கள் மீது பகை கக்குவான்.

ஸ்பெயின் அரச குடும்பத்தார் அவனுடைய அட்டகாசத்தைக் கேலி செய்தனர்—பக்கிங்காம், ஸ்பெயின்மீது, போர் தொடுக்கும்படி பிரிட்டனை எழுப்பமுடிந்தது.

பிரன்ச்சு நாட்டு இராணி ஆன், இவன் மையலில் வீழக்கண்டு, பிரன்ச்சு அரசர் தடுத்தார்—பிரிட்டனுக்கும் பிரான்சுக்கும் போர் மூண்டது! பிரன்ச்சு அரசகுடும்பத்தாருடன் தனக்கு ஏற்பட்ட பகையின் காரணமாக, பக்கிங்காம், சார்லஸ் திருமணம் செய்துகொண்டிருந்த பிரான்ச்சு அரசகுமாரி ஹெனிரிடாவுக்கும் மன்னனுக்கும் மனக்கசப்பு மூட்டிவிட்டான்—பக்கிங்காம் இருந்த வரையில், அரசி அழுது கிடந்தாள். அவ்வளவு பலமான பிடி இருந்தது பக்கிங்காமுக்கு.

மூன்று பேரரசுகளாகத்திகழ்ந்த பிரிட்டன், பிரான்ஸ், ஸ்பெயின், ஆகிய இடங்களில், மன்னர்களை ஆட்டிப் படைத்தவர்கள், முறையே பக்கிங்காம், ரிஷ்லு, ஒலிஸ்வாரி, என்பவர்கள். இதிலே ரிஷ்லு ஆற்றல் மிக்க

வஞ்சக விளங்கினேன் — அந்த அளவுக்கு ஆற்றலற்று விளங்கினவன், பக்கிங்காம்.

அவனுடைய பெருமைக்கு ஏற்ற அளவுக்குப் படை திரட்டப்படும் —அவனுடைய முரட்டுக் குணத்தின் விளைவாகப் போர் மூளும்—வெற்றி மட்டும் கிட்டாது!

அவன் கேட்டால், கப்பற்படை அமைக்கப்படும்—கலங்களில் தங்கநிறப் படுதாக்கள் அழகளிக்கும்—வெற்றி மட்டும் கிடையாது!

போரிலும் சரி, நிர்வாக முறையிலும் சரி, பக்கிங்காம் திறமையைக் காட்டியதில்லை. மக்கள் ஆச்சரியப்படத்தக்க வெற்றிகள் ஏதும் பெற்றுனில்லை, அவன் அடைந்த ஓரே வெற்றி, மன்னனிடம் கொண்டிருந்த மகத்தான செல்வாக்கு! மக்க்ள் எங்ஙனம் சகித்துக் கொள்வர்.

எலிசபெத் இராணியாரின் காலத்தில், பிரிட்டிஷ் கொடி, எங்கும் கெம்பீரமாகப் பறந்தது. 1588-ல் இங்கிலாந்தை அழித்தொழிக்கும் நோக்குடன் கிளம்பிய ஸ்பெயின் நாட்டுப் பெருங் கப்பற்படையைச் சின்னபின்னமாக்கி, பிரிட்டன் வெற்றிக்கொடி நாட்டிற்று! ஐரோப்பிய நாடுகள் அனைத்தும், பிரிட்டனுடைய வல்லமையை வியந்தன. அப்படிப்பட்ட பிரிட்டன், பக்கிங்காம் காலத்தில், லாரோகேல் கோட்டையைக் காப்பாற்ற பிரான்சுடன் தொடுத்த கடற்போரிலே, கேவலமாகத் தோற்றது! கடலிலே பிரிட்டிஷாரின் பிணங்கள் மிதந்தன! கலங்கள் சுக்கு நூறாகிக் கடலடி சென்றன! போர்த் தளபதி பக்கிங்காம்!!

ஒரு நாட்டு மக்களின் வெறுப்பைக் கிளறக்கூடிய குணமும், செயலும் எவை எவையோ, அவை யாவும் நெளிந்தன பக்கிங்காமிடம். எனினும், ஜேம்ஸ் மன்னன்

செல்லப்பிள்ளை என்றான், சார்லஸ் மன்னன், இணைபிரியாத் தோழன் என்றான், மக்கள் எவ்வளவு மனக்கொதிப்படைந்திருப்பர்!

ஜேம்ஸ் மன்னன் காலத்திலேயே இந்த வெறுப்பை மக்கள் காட்டினர்; மன்னன் புருவத்தை நெறித்தான் — புன்னகையுடன் கூட அல்ல, பதிலளித்தது. "ஏசுவுக்கு ஒரு ஜான், எனக்கு ஒரு ஜார்ஜ்" என்று ஆணவமாய் பேசினான்.

பிரிட்டிஷ் மக்கள், மன்னராட்சிமுறை, மக்களின் உரிமைத்தனத்துக்கு ஊறு தேடுவது, முரணானது என்று எண்ணிக்கொண்டு, விவாதம் நடத்தி வந்தவர்களல்ல. உள்ளூர, மக்களுக்கு, மன்னராட்சி முறை ஒரு தேவையான ஏற்பாடு என்ற எண்ணம் பலமாக இருந்து வந்தது. ஆனால் அவர்கள் உள்ளத்திலே மற்றோர் எண்ணம் உறங்கிக் கிடந்தது — மன்னராட்சி முறை தேவைதான், அதனை ஏற்படுத்தியதும் மக்கள்தான் — என்பது அந்த எண்ணம். மக்கள் விரும்பி, மன்னனை ஆளச்சொல்கிறார்கள்—எனவே, மூல உரிமை மக்களுடையது — ஆற்றலுக்காகவோ, அறிவுக்காகவோ, இவை அற்றவனாக இருப்பினும் பரம்பரைக்காகவோ, மன்னன் என்றோர் சின்னப் பொருள் இருக்கட்டும் என்று மக்கள் ஒரு ஏற்பாடு செய்தனர்—மக்கள், மன்னனுக்கு அதிகாரமளித்தனர். எனவே, மன்னன் தனக்குக் கிடைத்துள்ள பெரும்பதவி, மக்களிடமிருந்து கிடைத்தது என்ற உணர்வுடன் நடந்துகொள்ளவேண்டும். பதவியைப் பறித்துவிடும் உரிமை மக்களுக்கு இருக்கிறது என்ற அச்சம் கொண்டவனாக இருக்கவேண்டும், பெரும்பதவி தந்ததற்கு நன்றியறிதலுடன் நடந்துகொள்வதுடன், மேலும் மேலும் மக்களுடைய அன்பைப் பெறுவதற்கு முயற்சிக்கவேண்டும், மக்களின் நலனைக் காக்கவேண்டும்—இதுவே

மன்னன் கடமை என்று மக்கள் எண்ணினர். இந்த எண்ணம், வெளிப்படையான பேச்சாக, அடிக்கடி கிளம்புவதில்லை—தூங்கும் புலியாக இருந்துவந்தது. மன்னன், உரிமைகளின் இருப்பிடம்மட்டுமல்ல, கடமையின் இருப்பிடம், என்றனர் மக்கள்!

ஜேம்ஸ், இதை அறவே மறுத்தான்—சார்லசும் அவ்விதமே.

மன்னன் பெறும் அதிகாரம் ஆண்டவனுல் அளிக்கப்படுவது என்ற தத்துவம் பேசிய ஜேம்ஸ், மக்களுக்கு மன்னன் சில உரிமைகளை அளிக்கிறன், ஆனுல் அளிக்கும் கரமே அதனைத் திரும்பப் பறித்துக்கொள்ளவும் கூடும், என்று வாதாடினுன். சார்லஸ் இந்த முறைக்காகப் போராடினுன்.

நீதி மன்றங்கள், ஏற்கனவே அமுலில் உள்ள சட்டங்களின் துணைகொண்டு வழக்குகளிலே தீர்ப்பளிப்பதா, அல்லது அரசாள்வோனின் விருப்பமறிந்தும், அரசாள்வோனின் ஆதிக்கத்துக்கு உகந்த விதமாகவும் தீர்ப்பளிப்பதா, என்பதே கூட ஒரு பிரச்னையாக்கப்பட்டுவிட்டது.

மக்கள், சட்டத்துக்கு உட்பட்டவர்கள்; அதுபோலவே ஆட்சியிலுள்ளவர்களும் சட்டத்துக்குப் பொதுவாக உட்படவேண்டும், அதுதான் நல்லாட்சியின் இலட்சணம் என்று மக்கள் நீண்ட நாட்களாகக் கருதி வந்தனர். இதைக்கூட ஜேம்ஸ் மதிக்க மறுத்தான்.

கோக் எனும் வழக்கு மன்றத் தலைவர், ஜேம்சின் கருத்தை மறுத்தார்—உடனே அவரை வேலையினின்றும் நீக்கிவிட்டான் மன்னன்.

'நட்சத்திர மண்டலம்' என்ற பெயர் படைத்த அரச நீதிமன்றத்திலே, அரசன் ஆணையைக் குலைக்கும் செயல் புரிந்ததாக, கோக் மீது குற்றம் சாட்டப்பட்டது.

"அரசனுடைய ஆணை மகத்தானது; அதனைக் குறித்துப் பேசிட வழக்கறிஞர்கள் அருகரல்லர்! ஆண்டவனுடைய செயலைக் குறித்து மறுத்துரைப்பது நாத்திகம்! நல்ல கிருஸ்தவர்கள் ஆண்டவனுடைய கருத்தை அவர் வாக்கான வேதத்தின் மூலம் அறிந்துகொள்வர்; அது போலவே மன்னன் இதனைச் செய்யலாம், இதனைச் செய்தல் கூடாது என்று மக்கள் கூறுவது கூடாது, மன்னனுடைய கருத்தைக் காட்டும் சட்டத்தைக் கொண்டு மக்கள் ஒழுகவேண்டும்" என்று இதுபோது, ஜேம்ஸ், நட்சத்திர மண்டபத்தில் வெளிப்படையாகவே பேசினன் —இதே முறையை, சார்லசும் கையாண்டான். மக்கள் மிரண்டனர்! ஆண்டவன் அரசன்—என்று ஒரு பயங்கரமான தொடர்பு ஏற்படுத்திக்கொண்டால், எவ்வளவு கொடுமைகளையும் செய்துவிட்டு, 'எல்லாம் அவன் சித்தம்' என்று கூறிவிடலாமே; மன்னர்கள் இத்தகைய கொள்கையை நிலைநாட்டிவிட்டால், பிறகு, அரசு முறையிலே, நீதி நேர்மை ஒழுங்கு ஏது? மக்களுக்கு. உரிமை தான் ஏது என்று எண்ணினர், அச்சமடைந்தனர்.

சார்லஸ் மன்னன், மக்களின் மனதை மருட்டிய இந்தக் கொள்கையை மிகுந்த நம்பிக்கையுடன், கூசாமல் குளறுமல், தெளிவாகத் தைரியமாக, பள்ளிப் பிள்ளைகளுக்கு ஆசான் கூறுவதுபோலவும், சீடருக்குக் குரு கூறுவது போலவும், எடுத்துரைக்கக் கண்ட மக்கள், "அதேது, பித்தம் போலாகிவிட்டது. இந்தக் கொள்கை— இது அரண்மனையிலே குடிபுகுந்துவிட்டால். நாடு, காடு தானுகும்" என்று எண்ணினர்: எனவே, எப்பாடுபட்டேனும் இந்தக் கேடான கொள்கையை ஒழித்தாக வேண்டும், என்று உறுதி பூண்டனர்.

உல்லாச வாழ்க்கையைத் தேடி அலைந்து ஊர்க்குடி கெடுக்கும் பக்கிங்காம் போன்றவர்களை அதிகாரத்தில்

மன்னர் அமர்த்திக்கொள்வுடன். ஆண்டவனுக்குச் சமமானவன் அரசன். ஆகவே, ஆகுமா இந்த அக்ரமம் என்று கேட்கக்கூடாது; கேட்பது நாத்திகத்துக்கு ஒப்பாகும்; அறமறிந்துரைப்பார் ஒருவர், அரசன் ஆணைக்குக் குந்தகம் விளைகிறது என்று அவரை விரட்டுவான் மன்னன், இதென்ன அக்ரமம் என்று கேட்கலாகாது; வெளிநாடுகளின் பகையைக் காரணமற்றுக் கிளப்புவான் மன்னன், ஏன் என்று கேட்கக்கூடாது. ஏளனம் ஏற்படும் விதமான தோல்வி நேரிடும், ஐயோ! என்று ஆயாசப் படக்கூடாது, ஏனெனில் இவை அரச காரியங்கள், அரசனே ஆண்டவனின் அருள் பெற்றவன்!

இந்தத் தத்துவத்தைத் தகர்த்தெறிந்தாலன்றி, தன்மானம் நிலைக்காது, உடைமை, உரிமை எதுவும் இருக்காது, என்பதை எண்ணும்போதே,மக்கள்கொதிப்படைந்தனர். அவர்கள், மக்களின் உரிமைகளைக்காக்க ஏற்பட்ட சட்டங்களைக் காட்டினால், மன்னன், அது என் இஷ்டத்தால் இருக்கும் ஏடுகள், விரும்பினால், மாற்றிவிட முடியும் என்கிறான், மக்களின் உரிமைகளை மன்னனுக்கு எடுத்துரைக்கவும், மன்னனுடைய கடமைகளை அவனுக்கு நினைவுபடுத்தவும், மன்னனுடைய செயல்களை மக்கள் ஏற்றுக்கொள்கிறார்களா என்பதை எடுத்துக்கூறவும், மன்னன் இன்னின்ன காரியமாற்ற வேண்டும் என்று அறிவிக்கவும், ஆற்றல் பெற்ற (பார்லிமெண்ட்) மாமன்றம், இருப்பதைக் கூறினால், "மாமன்றமா! நான் அழைத்தால் கூடும்—கை அசைத்தால் கலையும்" என்றுரைக்கிறான். மக்களுக்கு வேறு பாதுகாப்பளிக்கும் சாதனம் என்ன? என்று எண்ணலாயினர்! மக்கள் கரமும் மன்னன் சிரமும்—என்ற தொடர் மொழிமீது, எண்ணம் பாய்ந்தது. மன்னன், விளக்க முரைத்துவிட்டால். மக்கள் தமது நிலை அறிந்து பணிந்து கிடப்பர், என்று

எண்ணிக் கொண்டான்; மக்களோ, தமது திறத்தைக் காட்டி உரிமையை நிலை நாட்டிக் கொள்ள வேண்டிய கட்டத்தை நோக்கி விரைந்தனர். பனிப்பாறை உருகுவது போல, மக்களின் எண்ணம், இந்த வகையிலே மாறிக்கொண்டிருந்தது. அரண்மனைக்குள்ளே இருந்தவர்களால் இந்த மாறுதலை உணர முடியவில்லை.

மக்கள், பக்கிங்காமின் கொடுமைகளைப் பேசலாயினர்.

வீடுகளிலும் கடைவீதிகளிலும், பாசறைகளிலும், பார்லிமெண்டிலும், இந்தக்கண்டனக் குரல் கிளம்பிற்று.

அவன் இருக்குமட்டும் அரசன் அக்ரமம் செய்தபடிதான் இருப்பான் என்றனர் பலர். ஒரு சிலர் "அவன் இருக்குமட்டுந்தானு! அவன் போனுல் வேறு ஒருவன்! அக்ரமம் அழியாது. அது அழிய வேண்டுமானுல்,அரசன் கொண்டுள்ள பயங்கரமான கொள்கை அழிய வேண்டும்" என்று எடுத்துக் கூறினர். நெடுங்காலமாகத் தங்கள் உரிமைகளைப்பற்றி எண்ணிப் பார்க்காமல், நடப்பது நடக்கட்டும் நமது வேலையை நாம் கவனிப்போம் என்ற போக்கிலே இருந்து வந்த மக்கள், மற்ற வேலைகளைப் பிறகு கவனிப்போம், இந்த விவகாரம் முதலில் தீர்க்கப் பட்டாக வேண்டும்—பாம்பைத் தடிகொண்டு அடித்துக் கொல்வதற்காக, எந்த நேரமும் தடியும் கையுமாகத் திரிந்துகொண்டிருப்பதைவிட, ஒரு பலமான முயற்சி செய்து, புற்றினை அழித்திடுவது நல்லது; இல்லை, அது கூடப் போதாது, நச்சரவம் குடிகொள்ளும் புற்றுகளுக்கு இடமளிக்கும். கள்ளிகாளான் நிரம்பிய இடத்தையே சரிப்படுத்தியாக வேண்டும் என்று தீர்மானித்தனர்.

மக்களின் பொது வாழ்வு, ஓரளவு செம்மையாகவே இருந்தது; தாங்கமுடியாத வரிப்பளு அவர்கள் மீது விழ

வில்லை; தரித்திரர்கள் இருக்கத்தான் செய்தனர், எனினும் தொழில் வளர்ந்து, பெரும்பாலோருக்கு வசதி தந்தது! வெளிநாட்டு வியாபாரம், பல புதுச் செல்வவான்களை உண்டாக்கி வைத்தது; பலநாடுகளுடன் ஏற்பட்ட தொடர்பு, பொது அறிவை வளமாக்கி வந்தது, புதிய கருத்துக்கள் மலருவதற்கான மனப் பக்குவம், இருந்தது, எனவே உரிமைக் கிளர்ச்சிக்குத் தேவையான உள்ளப் பாங்கு இருந்தது, தளராது உழைக்கும் தன்மையும். தன்னலம் மறுக்கும் பண்பும், எடுத்ததை முடிக்கும் ஆற்றலும், மக்கள் பணியை மேலானதெனக் கொள்ளும் மாண்பும் கொண்டவர். பலர், மாமன்ற உறுப்பினர்களாகி இருந்தனர். மனம் அமைந்துவிட்டது!

தந்தை மகனுக்குத் தந்துவிட்டுப்போனவைகளிலே, மற்றுமொன்று உண்டு—அது, மற்றவைகளை வெளியே கிளறிவிடக் கூடியதாக அமைந்தது. அதுதான் பண முடை!

வரவை மீறிய செலவினாலும், புதிய போர்களுக்காக ஏற்படும் செலவினாலும், ஜேம்ஸ் திண்டாட நேரிட்டது. முதல் மூன்றாண்டுகளிலே மட்டும் ஆண்டொன்றுக்கு முப்பத்து ஐயாயிரம் பவுன் நிர்வாகச் செலவு! கடனோ ஏராளம்.

மற்றச் சமயங்களிலே மாமன்றத்தைப்பற்றிக் கவலைப் படாதமன்னன், பணமுடை ஏற்பட்டதும், மாமன்றத் தைக் கூட்டி, பணத்துக்கு வழிவகை கூறுமாறு கேட்க வேண்டியதாயிற்று, இதுதான் வாய்ப்பு என்று கண்ட மாமன்றம், மன்னன் கேட்கும் தொகையைத்தர இசை வதற்கு முன்பு, ஆட்சி முறையிலே உள்ள கறைகளைப் போக்கவும், மேற்கொண்டு கறை ஏற்படாதிருக்கவும், வழி வகை கண்டாக வேண்டுமென்று வலியுறுத்தலாயினர்.

மக்களின் உரிமை மதிக்கப்படாமலிருப்பது பற்றிய கண்டனமும், மன்னன் மனம்போன போக்கிலே நடப்பது பற்றிய சீற்றமும், குடிகெடுப்போருடன் குலவுவது பற்றிய ஏளனமும், மாமன்றத்தினர் வெளியிட்டனர். மன்னன் சீறினான். மாமன்றத்தார் மருண்டுவிடவில்லை. மரியாதை தவறாமல், ஆனால் உறுதி குறையாமல், மாமன்றத்தார் அரசனிடம் ஆட்சி முறையின் குறைபாடுகளைக் குறித்துக் கூறிவந்தனர்.

மன்னனுடைய சொந்த நிலங்களிலிருந்து கிடைக்கும் வருமானம், அவன் வசூலித்துக்கொண்டு வந்த பல்வேறு வரிகள் எல்லாம், நிர்வாகத் திறமைக் குறைவு காரணமாகத் தேய்ந்தன. கடன், 735,000 பவுனாகிவிட்டது. கிடைக்கும் வருமானத்தை, மன்னனைச் சூழ நின்று துதி பாடும் சுகபோகிகள் தின்று தீர்த்தார்கள்; எனவே ஜேம்ஸ், பணமுடையால் பாதிக்கப்பட்டான்; மாமன்றம் நிலைமையைத் திறம்படப் பயன்படுத்திக்கொண்டது

அரசியல், மத இயல் எனும் இரு துறைகளிலும் மன்னன் கொண்டிருந்த போக்கை மாற்றிக்கொண்டாக வேண்டும், என்று வலியுறுத்தப்பட்டது,

மன்னன் சார்பில், சாலிஸ் பரிபிரபு, கடன் தீர்க்க ஆறு இலட்சம் பவுன் தேவை என்றும் வரித்தொகையை இரண்டு இலட்சம் பவுன் அதிகமாக்க வேண்டுமென்றும், மாமன்றத்தாரிடம் கேட்டார். மறுத்தனர்; ஜேம்ஸ் கோபம் கொண்டான்; தத்துவ நோய் கொண்டவனல்லவா. உடனே மாமன்றத்தாரை வரவழைத்து, மன்னனுடைய அதிகாரம் எப்படிப்பட்டது, அதன் மகிமை எத்தகையது, அதைக் கட்டுப்படுத்த முயல்வது எவ்வகையான குற்றம் என்பதை எல்லாம் விளக்கினான். விளக்கினதாக மன்னன் எண்ணிக்கொண்டான், மிரட்டல் என்று மாமன்றம் கருதிற்று; பணியவில்லை.

பல முறை சமரச ஏற்பாடுகள் பேசப்பட்டன; ஒவ்வொரு முறையும் மாமன்றத்தின் குரலிலே உறுதி வளர்ந்தது. மன்னன் எக்காரணம்கொண்டும் மதத்துறையிலே மக்களுக்குப் பிடிக்காத மாறுதல்களைச் செய்யக்கூடாது என்றும், எந்த அதிகாரியை நியமித்தாலும் மாமன்றத்தாரைக் கலந்துகொள்ள வேண்டுமென்றும் கூறினர், மாமன்றத்தாரின் குரலிலே உறுதியும் வளர்ந்தது, அவர்களின் அறிவுப்புகளின் வகையும் வளரலாயிற்று.

ஐந்துமுறை மாமன்றம் கூட்டப்பட்டது, கசப்புவளர இது உதவிற்றே தவிர, பலன் ஏதும் ஏற்படவில்லை மன்னனுடைய போக்கை நாடு அறிய, இந்த மாமன்றக் கூட்டங்கள் பயன்பட்டன. மக்களின் உரிமைகளைக் காக்க அமைக்கப்பட்ட மாமன்றத்தை மன்னன் அலட்சியப்படுத்துவதுண்டு, மக்கள் கொதிப்படைந்தனர்; அவர்கள், போர்க்கோலம் பூண்டு கிளம்புவதை மகனுக்குக் காட்சியாக்கி வைத்தான் ஜேம்ஸ்.

மாமன்றம் பணம் திரட்டித் தர மறுத்தால் என்ன மன்னன் கேட்டால் மக்கள் தரத்தானே வேண்டும்? மாமன்றத்தின் தயவு ஏன்? என்று எண்ணினன் ஜேம்ஸ். உடனே, புதிய வரிகள். கட்டாயக் கடன்கள், இனாம்கள், என்று வகை வகையாக முறைகளை வகுத்து, மக்களிடம் பணம் பறிக்கத் தொடங்கினன், மன்னன், எந்த அளவுக்குச் செல்லத் துணிந்து விட்டான் என்பதை மட்டுமல்ல, மன்னராட்சி முறை எவ்வளவு தூரம் கேடு உண்டாக்க முடியும் என்பதை இந்தச் சம்பவங்கள் விளக்கமாயின, மன்னனைத் திருத்துவது என்ற சாதாரண நோக்கம், மன்னராட்சி முறையையே திருத்தியாகவேண்டும் என்று வளர்த்தது; கூர்த்த மதிபடைத்த தீவிர நோக்குடையார் மன்னராட்சி என்ற முறைதான் எதற்கு என்றே எண்ணத் தொடங்கினர்.

சரக்குகளின்மீது ஏற்றுமதி இறக்குமதி வரிவிதித்தான் மன்னன் இது எலிசபெத் இராணியார் விதித்தபோதே சிறிதுகுமுறல் இருந்தது, மக்கள் மனக்குறையை அறிந்து, இந்த வரி முறையிலே மாறுதல் செய்ய எலிசபெத் உட்பட்டதுண்டு. ஜேம்ஸ் இந்த வரியை விதித்தும் மாமன்றத்தின் அனுமதியின்றி வரி விதிப்பது அடாது என்ற கண்டனம் பிறந்தது. மக்களின் எழுச்சியின் துவக்கக் கட்டம் அது, எனவே கண்டனம் பிறந்தபோதிலும், மன்னனுல் வரியை வசூலிக்க முடிந்தது. பேட் என்ற ஒரு வியாபாரி துணிந்து, இந்த வரியைக் கட்ட முடியாது என்று கூறி வழக்காடினுன். அரசனுடைய ஆணைக்கு அடங்கிய நீதிபதிகள், துறைமுகப் பட்டினங்களெல்லாம் அரசனுக்குச் சொந்தமானவை, எனவே அங்கெல்லாம், சரக்குகள் நுழைவதற்கும், மக்கள் செல்வதற்கும் மன்னனுடைய அனுமதி தேவை; இதற்காக மன்னன் கட்டணம் கேட்கலாம்; வரி வசூலிக்கலாம். அனுமதி தரக்கூட மறுத்தேவிடலாம், என்று தீர்ப்பளித்தனர். மன்னன் மகிழ்ந்தான். மக்கள் இந்தத் தீர்ப்பு எவ்வளவு கேடான விளைவுகளைத் தரவல்லது என்பதை எண்ணி வருந்தினர். பிரிட்டன் வெளிநாடுகளுடன் வியாபாரம் செய்துவந்தது செழிப்பான வியாபாரம்; எனவே துறைமுக வரிபோட்டால், தொகை தொகையாக வரி குவியும்; இதனை மாமன்றத்தின் உதவியின்றி மன்னன் பெறமுடியுமென்ருல், பிறகு மாமன்றத்தை ஏன் மதிப்பான், மாமன்றம் மதிப்பிழந்தால், மக்களின் உரிமை என்ன கதி ஆவது! இதை எண்ணி மக்கள் மருண்டனர், மன்னனே ஆண்டொன்றுக்கு எழுபதினுயிரம் பவுன் வரி வருமானம் கிடைப்பதறிந்து மகிழ்ந்தான்.

இந்த வெற்றி, மன்னனுடைய ஆணவத்தையும் மக்களுடைய அச்சத்தையும் வளர்த்தது, ஆனுல் பிரச்னை

திரவில்லை பணம் மேலும் தேவைப்பட்டது ஐரோப்பாவில், ஜேம்ஸ் மன்னனுடைய மருமகன், சமர்ச்சுழலில் சிக்கிக்கொண்டிருந்தான்; அவனுக்கு உதவி செய்யப் பணம் ஏராளமாகத் தேவைப்பட்டது. மாமன்றமோ மறுக்கிறது. எனவே, ஜேம்ஸ், மக்கள், கட்டாயமாகக் கடன் தரவேண்டுமென்றான்—இனும் கொடுக்கச் சொல்லி வலியுறுத்தினான்—இந்த ஆகா வழிகள் அனைத்தையும் அவனுடைய அருமைத் திருக்குமாரன் சார்லசும், கற்றுக் கொண்டான். தந்தை விதைத்தான் மகன் அறுத்தெடுத்தான்!

பணமுடையைத் தீர்த்துகொள்ள, மாமன்றத்திடம் பக்குவமாக நடந்துகொள்வது முறையாயிருக்க, மன்னன் மக்களிடம் பல்வேறு முறையில் பணத்தைப் பறித்து, அவர்களின் கோபத்தைக் கிளறியதுடன், மகனுக்குத் திருமணம் செய்வித்து, அதன் மூலம் ஏராளமான பணம் பெற முடிகிறதா என்று பரீட்சை பார்க்கலானான், இந்தச் செயலாலும், மக்களுடைய கோபம் வளர்ந்தது

பிரிட்டிஷ் மக்கள், கத்தோலிக்க மார்க்கத்தை நீக்கி விட்டு பிராடெஸ்ட்டெண்டு மார்க்கத்தை அரச மார்க்கமாகக் கொண்டிருந்தனர். எனினும், கத்தோலிக்கர்கள், இழந்த இடத்தைப் பிடிக்க எப்போது வாய்ப்பு கிடைக்கும் என்று எதிர்பார்த்த வண்ணமிருந்தனர். இதனால், பிரிட்டிஷ் மக்களில் பெரும்பாலாருக்குக் கத்தோலிக்கரிடம் கடுங்கோபம், சந்தேகம், பயமும்கூட! எனவே மார்க்கத் துறையிலே ஒரு சிறு மாறுதல் கூறப்பட்டாலும் கத்தோலிக்கரின் கரம் அதிலே இருப்பதாக எண்ணிக் கண்டிப்பர்.

கத்தோலிக்கருக்கும் பிராடெஸ்ட்டெண்டுகளுக்கும் இடையே கிலேசம் இருந்ததுடன், பிராடெஸ்ட்டெண்டுகளுக்குள்ளாகவே, பிரிவுகளும் இருந்தன.

ஆசாரக்கட்சி ஒன்று. அரசமார்க்கத்தை அப்படியே பின்பற்றும் கட்சி மற்றொன்று. இரண்டுக்கும் இடையே கசப்பு, கிலேசம் சந்தேகம்.

ஆசாரக்கட்சிக்கும் மற்றதுக்கும் இடையிலே, அடிப்படையான கொள்கை மாறுபாடு ஏதும் கிடையாது எனினும் இரு பிரிவுகளும் விரோதம் பிறிட்ட வண்ணமிருந்தது. தொழுகை முறையிலே சில வேற்றுபாடுகள், துதிபாடுவது பற்றிச் சில தர்க்கங்கள், இவைகளே வித்தியாசம், எனினும் இவை தலைபோகும் விதமானதாகக் கருதப்பட்டன. சங்கீதம், நாடகம், பொழுதுபோக்கு, வேடிக்கை, இவைகளெல்லாம் கூடாது. சன்மார்க்கத்தைக் கெடுத்துவிடும் என்பது ஆசாரக் கட்சியின் எண்ணம். எப்போதும் ஆண்டவன் நாமத்தை ஜெபித்துக் கொண்டிருக்கவேண்டும் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்து தேடிக் கெட்டலையலாகாது, அப்போதுதான் உள்ளத் தூய்மை ஏற்படும் தூய உள்ளத்திலேதான் ஆண்டவன் உறைவார் இந்தத் தூய்மையாளர்கள்! குறிப்பாக ஞாயிற்றுக் கிழமைகளிலே, வேடிக்கையான பொழுது போக்குகள் கண்டிப்பாக இருத்தலாகாது என்று வலியுறுத்தினர், அத்தகைய பொழுது போக்கிலே ஏதும் தவறு இல்லை, என்று வாதாடினர். அரசமார்க்கத்தினர், இந்த 'மாறுபாடு' ஒரு பிரிவை மற்றோர் பிரிவு, வெறுத்து, எதிர்க்கும் அளவுக்கு முற்றிவிட்டது.

இந்த மதத்துறைக் கட்சியினர் அனைவரும் ஒருவரை ஒருவர் பாபிகள் என்றும், வேதநிந்தகர்களென்றும், நாத்திகன் என்றும் கண்டித்துக்கொண்டனர்,

ஆச்சாரக் கட்சிக்காரன், பிராடெஸ்டெண்டின் மற்ரோர் பிரிவினரையும் கத்தோலிக்கரையும், நாத்திகன் என்பான், பிராடெஸ்டெண்டோ, கத்தோலிக்கரை கர்த்

தரின் அருளின் பெருமை அறியார், நாத்திகன் என்று ஏசுவாரே, கத்தோலிக்கரோ, தாம் தவிரப் பிறர் நாத்திகரே என்று கூறினர்.

இந்தச்சூழ்நிலையில் ஜேம்ஸ் ஆளவந்தான்-அவனைச் சுற்றி நின்று முகமன் கூறிய ஸ்காத்லாந்து நாட்டுக் கத்தோலிக்கர்கள் தங்கள், நிலையை உயர்த்தும்படி கேட்டுக் கொண்டனர்; அதற்கென்ன பார்க்கலாம் என்று மன்னன் உபசாரமொழி புகன்றான்.

பிராடெஸ்டெண்டுகளுக்கு இது திகில்கொடுத்தது—மன்னன் மீண்டும் நாட்டிலே கத்தோலிக்க மார்க்கத்துக்கு ஆதிக்கமளித்துவிடுவானோ—அங்ஙனம் நேரிட்டால் தங்கள் நிலை குலையுமே என்பது அவர்கள் அச்சம். மாமன்றத்திலே, இந்தப் பிரச்னை பலமான புயலைக் கிளப்பிற்று. மன்னன் எக்காரணம் கொண்டும் கத்தோலிக்க மார்க்கத்தைப் புகுத்துவதில்லை என்று உறுதி அளிக்க வேண்டும் என்று மாமன்றம் கேட்டது. மன்னனுக்குக் கத்தோலிக்க மார்க்கத்தைப் புகுத்துவதா கூடாதா என்ற சிக்கல் மனதில் எழவில்லை. நம்மை, நாடாளும் மன்னனை நாதன் அருள் பெற்றவனை, இந்த மக்கள், கட்டுப்படுத்துவதா, அவ்வளவு ஆணவமா! என்ற எண்ணம்தான் எழுந்தது.

கத்தோலிக்க மார்க்கத்தை நாட்டு மக்களில் பெரும்பாலானவர்கள் விரும்பாதபோது, மக்களின் விருப்பு அறிந்து நடக்கவேண்டும், முறைப்படி மன்னனாகியதான், அந்த மார்க்கத்தைப் புகுத்துவேனா என்று கனிவுடன் மன்னன் பேசவில்லை, இந்த மக்கள் இவ்வளவு துணிவு பெற்ற காரணம் என்ன? எனக்கல்லவா, நெறியும் முறையும் கற்றுத்தர முனைகிறார்கள்! மன்னனுக்கு மதி புகட்டுவதா மக்கள் கடமை! என்று எண்ணிக் கோபம் கொண்டான்;

கத்தோலிக்க மார்க்கம் மீண்டும் எங்கே புகுந்து விடுமோ என்ற அச்சம் மக்கள் மனதிலே அதிகமாக வளருவதற்கான ஒரு சம்பவமும் நடைபெற்றது. அது ஜேம்ஸ் மன்னன் பட்டத்துக்கு வந்து இரண்டு ஆண்டு களுக்குள்ளாகவே. ஜேம்ஸ் மன்னன் மூலம் தனியான சலுகைகள் கிடைக்குமென்று எதிர்பார்த்து, ஏமாந்த கத்தோலிக்கர் சிலர், ஸ்பெயின் நாட்டைச் சார்ந்த கைபாக்ஸ் என்பவனைக் கருவியாக்கி, மாமன்றத்தினரும் பிரபுக்கள் சபையினரும், மன்னனும் ஒன்ருகக் கூடிடும் நாளன்று, வெடிமருந்துகொண்டு, கட்டிடத்தைத் தகர்த்துவிடுவது என்று சதி செய்தனர். மன்னனும், மாமன்றத்தாரும் படுகொலை செய்யப்பட்டதும், பிரிட்டனில் இங்கும் அங்குமாக, ஆனல் செல்வத்துடன் உள்ள கத்தோலிக்கப் பிரபுகள் படை திரட்டிக்கொண்டு சென்று, அரசைக் கைபற்றி, கத்தோலிக்க மார்க்கத்தை மீண்டும் புகுத்துவது என்பது, சதித் திட்டம். இது கண்டுபிடிக்கப் பட்டது—சதிகாரர்கள் கொல்லப்பட்டனர்,

ஏற்கனவே இருந்த அச்சம் இதனல் பல மடங்கு அதிகமாகிவிட்டது, கத்தோலிக்கரைக் கருவறுக்கவேண்டும் என்ற துடிதுடிப்பு அதிகமாகிவிட்டது அந்தச் செயலில் மன்னன் இறங்கினல், அவன் பக்கம் நின்று பணியாற்றுவது என்ற உறுதியைத் தெரிவிக்கும் வகையில், மாமன்றம் மன்னன் கேட்டபடி, தாராளமாகவும் ஏராளமாகவும் பணம் தரக்கூட முன்வந்தது, மன்னனே இந்தக் குறிகண்டு மகிழ்ந்து, மாமன்றத்தைத் தன் துணைக்கருவியாக்கிக்கொள்ளக்கூட முயலவில்லை. வாதிட்டுப் போரிட்டு ஐந்துமுறை கூட்டிக் கலைத்து, மாமன்றத்தின் வெறுப்பைக் கிளறினன். அத்துடன் நிற்கவில்லை, தன் மகனுடைய திருமண பிரச்னை மூலம், மக்களுடைய மருட்சியை அதிகமாக்கினன்.

இளவரசன். எதிர்கால வேந்தன் சார்லஸ், ஒரு பிராடெஸ்டெண்டு மங்கையை மணந்துகொள்வதுதான், நாட்டிலே மதச் சீர்குலைவு ஏற்படாதிருக்கும் என்பதற்கான உறுதி தரும், என்று மக்கள் எண்ணிட, மன்னனோ, மதம் எதுவாயினும் சம்மதமே, பொருள் எவ்வளவு தரக்கூடும், அதைப் பொருத்தே பெண்கொள்ளல்வேண்டும் என்று கூறினான்—அம்முறையிலேயே 'தூதுகள்' சென்றன, வந்தன, ஏற்பாடுகள் உருவாகிக்கொண்டிருந்தன.

இளவரசனுக்குப் பெண் தர இரு பேரரசுகளிலே முன் வந்தனர்—ஸ்பெயின், பிரான்சு, பணம் உண்டு ஆனால், சில நிபந்தனைகளும் உண்டு! இரு பேரரசுகளும், கத்தோலிக்க மார்க்கம். எனவே, இரு அரசுகளும், ஜேம்ஸ் கேட்கும் தொகை தர முன்வந்தாலும், திருமணத்துக்கான முதல் நிபந்தனையாக, கத்தோலிக்க மார்க்கத்துக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கவேண்டும் என்றனர். இதிலே ஸ்பெயின் நாடு, தொகையும் அதிகமாக அளிக்க இசைந்தது, அதுபோலவே நிபந்தனைகளும் கடுமையாக இருந்தன—மக்கள் மனதிலே, இந்தக் 'கலியாணப் பேச்சு' மேலும் வேதனையை மூட்டிற்று.

மக்களின் விருப்பத்தைத் துளியாவது மதித்து நடக்கும் மன்னனாக இருந்தால்தானே, இதற்காக ஜேம்ஸ் கவலைப்படுவான்! அவன்தான் ஆண்டவன் அருள்பாலிக்கப் பெற்றவனாயிற்றே, மக்களின் துணை ஏன்! எந்தப் பெண், அதிகமான பணம் கொண்டுவருவாளோ, அவளையே தேர்ந்தெடுப்பது என்ற திட்டமிட்டான், பக்கிங்காம் இதை நிறைவேற்றிவைக்கும் பொறுப்பாளனாக்கப்பட்டான். இளவரசனே, நேரில் சென்று, ஸ்பெயின் நாட்டு இளவரசியைக் கண்டு, காதலைக் காணிக்கையாக்குவதென்றும், பக்கிங்காம் திருமண ஏற்பாட்டைத் தீட்டிக்கொண்டு வருவதென்றும், தீர்மானிக்கப்பட்டது—அதா

வது, பக்கிங்காம் தீர்மானித்தான், மன்னன் இணங்கினன் இளவரசன் பாராட்டினன், என்று பொருள்.

இளவரசனும் பக்கிங்காமும், மாறுவேட மணிந்து, ஸ்பெயின் நாடு சென்றனர். இருவரும் வாலிபப் பருவத்தினர். சார்லஸ், அழகன்! பக்கிங்காம் தன் அழகெனும் அம்பு எந்த அரண்மனையையும் துளைக்கவல்லது என்ற அபாரமான நம்பிக்கைகொண்டவன்.

"இளவரசரே! தங்களைக் கண்டதும், இளவரசி, சொக்கிப்போய்விடுவது நிச்சயம். தந்தையிடம் கெஞ்சுவாள் அந்தத் தையல். தோழிகள்மூலம் சொல்லுவாள், கடுமையான நிபந்தனை விதித்து, அந்தக் கட்டழகனை விரட்டிவிடவேண்டாம் என்று மன்றுடுவாள். தூதுவர் பேசிப் பலன் ஏற்படாது—ஓலைகள் அனுப்புவது உருப்படாது, மங்கை தன் மலர்விழியால் தங்கள் தங்கத் திருமேனியைக் காணவேண்டும், தாளில் வீழ்வாள். திருமணம் நிச்சயம்!" என்று பக்கிங்காம் எடுத்துரைக்க, வாலிப உள்ளத்துக்கு மகிழ்வளிக்கவல்ல காதல் விளையாட்டு இது என்ற சுவைமிகு எண்ணம்கொண்ட இளவரசன், எவ்வளவு பரவசமடைந்தானே, யார் கண்டார்கள்! கன்னியரைத் தன் கடைக்கண்ணல் கவரமுடியும் என்று பேசித்திரிந்த பக்கிங்காம், இளவரசனுக்குக் காதல் காட்சி காட்டச் செல்லும் அதேபோது, தனக்காக என்னென்ன இன்ப விருந்துகள் கிடைக்கும் என்று எதிர்பார்த்தானே, யார் கண்டார்கள்! மக்களோ, இந்தச் செய்தி அறிந்து பயம் கொண்டனர்.

ஸ்பெயின் போப்பாண்டவனின் பாததூளிபட்டால் புண்யம் கிடைக்கும் என்று கருதும் அளவுக்கு கத்தோலிக்க ஆர்வம்கொண்ட நாடு. ஐரோப்பாவில், அழிந்துபட்ட இடங்களிலெல்லாம், மீண்டும்கத்தோலிக்க மார்க்கத்தைப் புகுத்தவேண்டும், இந்த புனித கைங்கரி

யத்தை, எப்பாடுபட்டேனும் நிறைவேற்ற வேண்டும், என்ற எண்ணம்கொண்ட நாடு, அந்த நாட்டு இளவரசி, சார்லசின் தேவியாகிவிட்டால், பிரிட்டனில் பிராடெஸ்டெண்டு மார்க்கத்தின் கதி என்ன ஆகும், என்று எண்ணி அஞ்சினர். திருமணம், சொந்தவிஷயம், அதிலும் இதுவோ அரண்மனைத் திருமணம், எனவே, இதிலே குறுக்கிட்டு, கருத்துக் கூறல் கண்ணியமல்ல, என்ற எளிதில் புரியக்கூடிய அறிவு பெருதவர்களல்ல, மக்கள்; அவர்கள் அதனை நன்ருக அறிவர், ஆனல் மன்னனுக வேண்டிய சார்லஸ், கத்தோலிக்க மார்க்கக் கன்னியை மணந்து கொண்டு, திருமண நிபந்தனையின் காரணமாகவோ, அல்லது காதல் கணையின் விளைவாகவோ, பிரிட்டனை மீண்டும் கத்தோலிக்க நாடு ஆக்குவது என்று முனைந்தால், ஏற்படக்கூடிய விபத்துக்கள், படுகொலைகள், இரத்த வெறிச் செயல்கள், அக்ரமங்கள் இவைகளைப் பற்றி எண்ணிப் பார்க்கும் பொறுப்பை அவர்கள் அறியாமலிருக்க முடியாது! எனவேதான். நாட்டுக்குப் பெருங் கேட்டினைத் தரவல்ல திருமணம் கூடாது, என்று கூறினர் மன்னனு கேட்பான்! ஆண்டவனின் அம்சம்!!

திருமண ஏற்பாடுபற்றி, ஜேம்சும், சார்லசும்; பக்கிங்காமும் ஆவல் அதிகம் கொண்டனர்; ஸ்பெயின் அரசனே இதிலே விருப்பம்கொண்டவனல்ல, பிரிட்டனைத் தன் பக்கம் இழுக்க, இந்தத் திருமணப் பேச்சை ஒரு வாய்ப்பாக்கிக்கொண்டான். பல முறை தூதுசென்றும், ஏற்பாடு கனிவடையாததால்தான்' காதல் போர்க்களம் நோக்கி, சார்லசே புறப்பட்டான்.

"அண்ணு! நான் அந்த நாத்திகனைத் திருமணம் செய்துகொள்ள முடியாது'', என்று ஸ்பெயின் இளவரசி, உடன் பிறந்தவனிடம் கண்டிப்பாகக் கூறிவிட்ட செய்தி

மாறுவேடம் அணிந்து, மகிழ்ச்சியாகச் செல்லும் இளவரசனுக்கு என்ன தெரியும்? கத்தோலிக்க மார்க்கத்தினன் இளவரசி எனவே, அந்த மார்க்கமல்ல, பிரிட்டிஷ் இளவரசன் என்றதும், நாத்திகன் என்று கண்டிக்க நேரிட்டது —அந்த நாட்களிலே அதுதான் முறை!

ஸ்பெயின் நாட்டு அரச குடும்பம், அடைய இருக்கும் பூரிப்பையும் பெருமையையும், ஏற்பாடு செய்யப் போகும் வரவேற்புகளையும் விருந்துகளையும், அங்கு பூவையர் தர இருக்கும் புன்னகை இன்பத்தையும் எண்ணி எண்ணி மகிழ்ந்தே, இளவரசன் பக்கிங்காமுடன் செல்கிறான். ஸ்பெயின் நாட்டிலேயோ, பாதிரிகள் கவலை நிரம்பிய முகத்துடன் கூடி, ஏடு பல புரட்டியபடி உள்ளனர், இந்தத் திருமணம், சன்மார்க்கத்துக்கு உகந்தது என்பதுபற்றி. மணப்பெண்ணோ, நாத்திகனுக்கு நான் வாழ்க்கைப்பட மாட்டேன், என்று உறுதியை வெளியிட்டாகிவிட்டது— எனினும், எதற்கும் இரண்டெழுத்து ஆங்கிலம் கற்றுக்கொள்வது நல்லது என்று ஒரு ஆசிரியர் அமர்த்தப்பட்டிருக்கிறார்.

ஸ்பெயின் போகுமுன், ஒய்யார பக்கிங்காமும், உடன் சென்ற சார்லசும், பாரிசில் ஒரு நடன விழாவைக் கண்டனர்—அங்குதான், சார்லஸ், பிரன்ச்சு நாட்டு இளவரசி ஹெனிரிடாவைக் கண்டான். அழகி! பதினான்கு ஆண்டுகள் நிரம்பிய பாவை பார்த்தவரை ஈர்த்திடும் வனப்பு! எனினும், சார்லஸ், எங்ஙனம் அந்த இன்பவல்லியிடம் மனதைச் செலுத்தமுடியும்? அவன் 'தேவி' இருக்கும் திருத்தலம் 'மாட்ரிட்' ஸ்பெயின் நாட்டுத் தலைநகர். நடன விழாவிலே கண்ட நளினிதான் தான் நாயகியாகப்போகிறாள் என்பதைச் சார்லஸ் எப்படி அறிய முடியும். அழகாகத்தான் இருக்கிறாள் இந்த அரசிளங்குமரி, மனம் நெகிழத்தான் செய்கிறது, என்றாலும்,

யலன் இல்லையே, அவள் 200,000 பவுன் தானே கொண்டு வருவாள்; அதோ ஸ்பெயினில் உள்ள திருமகள் 600,000 பவுனல்லவா கொண்டு வர இருக்கிறாள்! எனவே, பிரன்ச் காரிகையைக் கொண்டு களிப்புற்றாலும் காரியம் வேறு இருக்கிறது என்ற உறுதியுடன் ஸ்பெயின் சென்றான் இளவரசன், அங்கு அவன் கண்டது வரவேற் பல்ல! காதல் பொழியச் சென்றான், கண்டிப்பான நிபந் தனைகளை அரசாங்க அலுவலர்கள் கூறுவதைக் காது கொடுத்துக் கேட்டுக்கொண்டிருக்கும் வேலைதான் அதிகம் இருந்தது.

சார்லசுக்கு, இளவரசியின் காதல் கிடைக்கவில்லை—பேட்டிதான் கிடைத்தது! உயிரற்ற பேச்சு, கனிவற்ற பார்வை, அதரம் துடிக்கவில்லை, கன்னம் சிவக்கவில்லை, கன்னியின் பார்வையிலே ஒரு செய்தியும் கிடைக்க வில்லை, மற்றோர் முறை மலர்த் தோட்டத்திலே அவள் உலவிக் கொண்டிருந்தாள்—காதலுக்கு ஏற்ற இடம் இந்த இயற்கைச் சித்திரம் என்றெண்ணி, சார்லஸ் அணுகினான் மயில் பறந்தே போய்விட்டது!

கண்டதும் காதல்கொள்ளாத காரிகை, எந்த மாளி கையிலே இருக்கிறாள் என்று கர்வம் பிடித்துப் பேசும் பக்கிங்காம் பிரபுவுக்கு, நிலாச் சோறும் கிடைக்கவில்லை! அவனுடைய ஆணவப்போக்கு அருவருப்பே உண்டாக் கிற்று பணத்தாசை கொண்டு, பல்லிளிக்க வந்திருக்கும் இளவரசன், அங்கு கேலிப் பொருளாக்கப்பட்டான் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கடுமையான நிபந்தனை எடுத்துக் கூறப்பட்டது. சார்லசுக்கு உண்மை விளங்கி விட்டது'; ஊர் சென்றால்போதும் என்றாகிவிட்டது. பிரிட் டனில், ஜேம்ஸ் மன்னனும் அச்சம் கொண்டான். காதல் பொழியச் சென்ற ஆசை மகனை, காதகர்கள், சிறைப் படுத்திவிட்டு, எல்லா நிபந்தனையையும் ஏற்றுக்கொண்

டால் தான் விடுதலையும் திருமணமும், என்றுகூறி விட்டால் என்ன செய்வது, என்ற அச்சம்,

வீண் வேலையாக முடிந்தது, இந்த இளைஞர்களின் காதல் பயணம், பிரிட்டன் திரும்பினான் சார்லஸ், மக்கள் மகிழ்ந்து வரவேற்றனராம், சார்லசிடம் புதிய அன்பு பிறந்ததால் அல்ல, ஸ்பெயின் நாட்டுப் பெண் வரவில்லை என்ற மகிழ்ச்சியால்!

பக்கிங்காம், தூபமிடலானான், ஸ்பெயினுடைய துடுக்குத் தனத்தைத் தாக்க வேண்டுமென்று, சார்லசும், துணை நின்றான், ஜேம்சுக்கும் அது நியாயம் என்று தெரிந்தது, மக்கள்கூட வரவேற்றனர். அந்த நேரத்திலாவது, ஜேம்ஸ் மக்களுடைய ஆதரவைப் பெற முயன்றிருக்கலாம், செய்தானில்லை' ஏன் செய்வான், அவன்தான், மக்களை மதிப்பது மன்னனுடைய மகிமையைக் கெடுத்து விடும் என்ற கேடான கருத்துக் கொண்டிருந்தானே!

பிரன்ச்சு நாட்டு அழகி ஹெனிரிட்டாவை, சார்லஸ், திருமணம் செய்துகொள்வது, என்று ஏற்பாடயிற்று, நிபந்தனைகளின் கடுமை ஓரளவு குறைவுதான், என்ற போதிலும், இந்தத் திருமணத்தின் விளைவாகப் பிரிட்டனில் கத்தோலிக்க ஆதிக்கம் தலைதூக்கும். என்ற அச்சம் மக்கள் மனதை வாட்டத்தான் செய்தது, கொதிப்புள்ளம் கொண்ட மக்களை, கொண்ட மட்டும் கிளறி விட்டுவிட்டு, இனி என் மகனிடம் கணக்குத் தீர்த்துக்கொள்க என்று கூறுவதுபோல, ஜேம்ஸ் இறந்து பட்டான்; சார்லஸ் பட்டத்தரசனானான், பக்கிங்காம் அரசாளத் தொடங்கினான்.

ஆக, சார்லஸ் பட்டத்தரசனானபோது, தீதான தத்துவம், தீயகுணமுடை பக்கிங்காம், தீராதபணமுடை, திகில் கொள்ளவைக்கும் மார்க்கத்தைச் சார்ந்த துணைவி, இந்த

அணிகள் அழகு செய்தன! மக்களோ மருண்ட நிலையில். மாமன்றமோ, உறுதியுடன்! மார்க்கப்பிரிவுகளோ, மல்லுக்கு நிற்பதில் போட்டியிட்டவண்ணம்! வெளி நாடுகளிலோ, பகைப்புகை! இந்தச் சூழ்நிலையில் துவக்கமாகிறது சார்லசின் ஆட்சி—ஆனால், அது ஜேம்ஸ் ஆட்சியின் தொடர்கதையாக இருக்கிறதே தவிர, புதியமுறை ஏதும் காணப்படவில்லை, ஜேம்ஸ் பிடிவாதமாக எதை வலியுறுத்தி வந்தானோ, அந்தக் கொள்கையை, விளைவு பற்றிய கவலையுமற்று வலியுறுத்துவதற்கே சார்லஸ் முனைந்தான். மன்னர் புதிது முறை எப்போதும் போலத் தான் மாமன்றத்தினரோ, புதிய வலிவுடன் தோன்றினர் மக்களிடையே, உரிமை பற்றிய எண்ணம் தெளிவாக்கப் பட்டுவிட்டதால், கிளர்ச்சிபோக்கு வெளிப்படையாகவே தெரியலாயிற்று. மக்களின் உரிமைக் கிளர்ச்சியைத் திறம்பட நடத்தும் அறிவாற்றல் படைத்தவர்களும், பிரிட்டிஷ் அரசியல் முறையைப் புதுப்பிக்கும் பேரார்வம் கொண்டவர்களுமான போக், பிம், ஹாம்டன், செல்டன், டிகிஸ், எலியட், போன்ற வீரர்கள் மாமன்றத்திலே உறுப்பினர்களாகி இருந்தனர், இது வரை எப்போதும் காணப்படாத ஆர்வம், கொழுந்துவிட்டெரியும் நேரம். அரசியல் துறையின் அடிப்படைக் கொள்கைகளை அலசும் போக்குத் தெளிவாகிக் கொண்டிருந்தது. மக்களின் உரிமையைப் பெறவும், பாதுகாக்கவும், மாமன்றம் பயன்பட வேண்டும் என்ற எண்ணம் பலமாகி விட்டது. மன்னன் அல்ல, மாமன்றமே, அரசாளும் பொறுப்பை அறிந்தொழுகும், எனவே நாம், மாமன்றத்தின் பக்கமே நிற்கவேண்டும் என்று மக்கள் கூறலாயினர் எங்கும் அரசன் செய்த அக்ரமத்தைபற்றியும் அவன் வலியுறுத்திய 'தேவாம்ச, தத்துவம்பற்றியும், நாட்டைக் கெடுக்கும் துரோகிகளுக்கு இடமளிப்பது பற்றியும்

மக்கள் கண்டித்தனர். அவன் மகன் இவன்! இவனுடன் இருப்பவனும், பக்கிங்காம்! இலட்சணம் இவ்விதம் இருக்கும்போது நிலைமை எங்ஙனம் திருந்தும் என்று ஆயாசப்பட்டனர். மாமன்றம் ஒன்றுதான், இந்த நோய்களுக்கெல்லாம் மாமருந்து. என்று எண்ணினர். பாசறை அமைத்துவிட்டது!

சார்லசுக்கு வயது இருபத்துஐந்து; அவன் மணம் செய்துகொண்ட ஹெனிரிட்டாவுக்கு, பதினைந்துவயது. காட்சிக்கு இனியவன், கற்றறிந்தவன், கலை நுட்பம் அறிந்தோன். ஒழுக்க சீலன், மக்களுடைய பாராட்டுதலைப் பெறுவதற்குத் தேவையான அருங்குணம் அவனிடம் இருக்கத்தான் செய்தது. ஆனால் மக்களை அச்சமும் அருவருப்பும் அடையச்செய்யும் 'கொள்கை'யையும் கொடியவன் என்று நாட்டினரால் கண்டிக்கப்பட்ட பக்கிங்காமையும், விடமறுக்கும்போது அருங்குணம் படைத்திருந்தாலும், பயனற்றுப் போய்விட்டது.

சார்லஸ், துவக்கத்திலேயே மாமன்றத்திடம் பணம் கேட்கவேண்டியதாயிற்று. அத்தகைய நிலைமையை உருவாக்கிக்கொண்டதும். மன்னனே!

ஸ்பெயினுடன் போர் தொடுக்கத் தீர்மானமாகிவிட்டது. ஐரோப்பாவில், உடன் பிறந்தாளின் கணவனை பலாடினேட் அரசகுமாரன் சிக்கிக்கொண்ட போருக்கு உதவி செய்யும் ஏற்பாடும் இருந்தது. ஐரோப்பிய சமரில் பிரிட்டன் பங்குகொள்ளும் நிலைமையையும் மன்னன் உண்டாக்கிக்கொண்டான். அதற்கான பெருஞ்செலவுக்குப் பணம் தேவை. டென்மார்க் நாட்டு மன்னனுக்கு மட்டும் 360000 பவுன் ஆண்டொன்றுக்குத் தருவதாகச் சார்லஸ் வாக்களித்துவிட்டான். மாமன்றத்தின் மூலம் நாட்டு மக்கள் அனைவரும் திரண்டெழுந்து, மன்

னன்பக்கம் நின்ருல்மட்டுமே நிறைவேற்றக் கூடிய மகத்தான பொறுப்புகளை, மக்களின் உரிமையை மறுப்பதையே தத்துவமாகக்கொண்ட மன்னன் மேற்கொண்டது நொடி ஓட்டப்பந்தயத்துக்கு இசைந்து, உள்ள பொருள் அனைத்தையும் பணயம் வைத்த கதைபோலாயிற்று.

மாமன்றம் கூடிற்று—மன்னன் பேசினுன்— தன் ஆட்சி முறை எங்ஙனம் இருக்கும் என்பதுபற்றி அல்ல, தனக்கு உடனடியாக எவ்வளவு தொகை தேவை என்பது பற்றி. மாமன்றம் நிதானமாகத் தன் காரியத்தைக் கவனிக்கலாயிற்று. "மன்னனுக்குத் தொகை தேவையாம் கவனிப்போம்! ஆனுல் முதலில் மக்களின் மனதை உறுத்திக்கொண்டிருக்கும் பிரச்னைகளைத் தீர்த்துவைக்க மன்னன் முனையவேண்டும்" என்று மாமன்றம் கூறிவிட்டு "உரிமைபற்றிய" அறிக்கை தயாரித்து, மன்னனிடம் தந்தது. மன்னன் வெகுண்டான். ஜேம்ஸ் மன்னன், இதுபோல நடந்துகொண்டதற்காக, ஒருமுறை மாமன்றத்தின் குறிப்பேட்டைக் கொண்டுவரச் செய்து, தன் கையாலேயே அதனைக் கிழித்தெறிந்தான், அவன் மகன் சார்லஸ்! எனினும் ஆரம்பக் கட்டமல்லவா, எனவே, 'உங்கள் குறைகளைத் தீர்த்துவைக்கிறேன், முதலில் பணம் பெற வழி செய்யுங்கள்' என்று வாதாடினுன். மாமன்றம், மன்னனின் மொழியிலே கனிவு இருப்பினும், கடுப்புக்காணினும் கவலை இல்லை, காரியம் நிறைவேற்றப்படவேண்டும் என்ற குறிக்கோளுடன், மன்னன் பிராடெஸ்டெண்டு மார்க்கப் பிரசாரத்துக்கான ஏற்பாட்டினைச் செம்மைப்படுத்த வேண்டும் என்பதையும், பிரிட்டிஷ் அரசமார்க்க முறைப்படி தொழுகை நடத்தத் தவறுபவர்களுக்கு அபராதம் விதிக்க வேண்டுமென்று, கூறினர்.

படைகளோ அமைக்கப்படுகின்றன; பணம் அவசர மாகத் தேவை. போர்வீரர்களுக்குச் சம்பளம் தரப்பட வில்லை, உடைகூடச் சரியாக இல்லை! கலங்கள் தேவை கடற்போருக்கு! ஸ்பெயின் நாட்டுடன் போரிடவேண் டும்—இந்த நெருக்கடியான நேரத்தில் மாமன்றம் உரிமை பற்றிப் பேசுவதா என்று மன்னன் கோபம்கொண் டான், மாமன்றத்தைக் கலைத்துவிட்டு வேறு வழிகளில் பணம்தேட முனைந்தான்—தந்தை சென்ற அதே, தகாத பாதை!

மன்னனுடைய சீற்றத்துக்கு முக்கியமான காரணம், பக்கிங்காம் மீது மாமன்றம் கண்டனம் தெரிவித்ததாகும். மாமன்றத்தின் துணையின்றி அரசு செலுத்த முடியும். என்ற துணிவுடன் சார்லஸ், பணம் தேடலானான். பணம் திரட்டி, கடற்படையைச் செம்மைப்படுத்தி ஸ்பெயின் மீது போர் தொடுத்தால் வெற்றி நிச்சயம் கிடைக்கும், வெற்றியின்போது, ஸ்பானிஷ் கப்பல்களைப் பிடித்தால், கொள்ளை கொள்ளையாகச் செல்வம் கிடைக்கும் என்று நம்பினான். பாவம்! மானைத் தேடிச்சென்றே, பிடித்திட முடியாமற் திரும்பினான். இப்போது புலியை வேட்டை யாடிக் கொன்று, அதன் குகையிலிருக்கும் புதையலைப் பெறக் கிளம்பினான் சார்லஸ் மன்னனிடம், இந்தக் குறை யாடு, நிரம்பி இருந்தது. தனக்கு வேண்டியவர்கள் சொல் வதை ஆராய்ந்து பாராமல் நம்பிவிடுவது, சார்லசின் சுபாவம். தானாக ஒரு முடிவுக்கு வந்தாலும், அது சரியான முடிவுதானா என்று ஆராய்வதில்லை. அதிலே அசைக் கொணாத நம்பிக்கை கொள்வான். போர் குறித்து அவன் கொண்ட நம்பிக்கையும் அத்தகையதே. போரிலே பிரிட் டன் கேவலமான தோல்வி அடைந்தது! மக்கள் ஒருபுறம் வேதனை அடைந்தனர், மற்றோர்புறம் மக்கள் மகிழவும் செய்தனர். மக்களுடைய ஆதரவை மாமன்றத்தின் மூலம்

பெருமலேயே, போரில் குதித்த மன்னன், தோல்வி கண்டதே சாலச் சிறந்தது, இதனின்றும் நல்ல பாடம் பெறுவான் என்று எண்ணி மகிழ்ந்தனர், ஆர்ப்பரித்து வந்த ஸ்பானிய கடற்படையை எலிசபெத் ராணியார் காலத்தில் தோற்கடித்த பிரிட்டிஷ் கடற்படை தோற்கிறதே, கீர்த்தி கருகிவிட்டது, கேவலமான பெயரல்லவா கிடைக்கிறது என்று எண்ணும்போது வேதனையாகத் தான் இருந்தது. ஸ்பெயின், கத்தோலிக்கக் கோட்டை—பிரிட்டன் பிராடெஸ்டெண்டு மார்க்கத்துக்குப் பாது காவலன் என்ற எண்ணம் மெள்ளமெள்ளப் பரவிக் கொண்டிருந்தது, அந்த மதிப்பு மங்கிவிட்டதே, என் பதை எண்ணி மக்கள் வருந்தத்தான் செய்தனர்—மன்னர்கள்போல, நாடு எக்கேடோ கெடட்டும், என்று இருத்துவிடுவதா, மக்கள் பண்பு! அவர்கள் இந்தத் தோல்வி கண்டு துயருற்றனர்—துயரம் பிறகு கோபமாக மாறிவிட்டது. கேவலமான பெயர்! நாட்டுக்கு!!–யாரால்? மதிகெட்டவர்களையும் மமதையாளர்களையும் சூழநிறுத்திக் கொண்டிருக்கும் மன்னனால். போர், மக்களின் சார்பிலே தொடுக்கப்படவில்லை, பக்கிங்காம், ஸ்பெயின் கொலு மண்டபத்திலே மதிப்பிழந்தான். வீம்புக்காக அவன் இந்தப் போரை மூட்டிவிட்டான்—தக்க காரணமற்றுப் போரை மூட்டிவிட்டுப் போதுமான திறமையைக் கட்டத் தவறி, நாட்டுக்குக் கேவலத்தைத் தேடிவைத்தார்கள், எப்படி இவர்களின் போக்கைச் சகித்துக்கொள்வது, எவ்வளவு காலத்துக்கு இந்தச் 'சுமை'யைத் தாங்கிக் கொள்வது, என்று பேசலாயினர்.

இந்தத் தோல்வி போதாதென்று பக்கிங்காம், வேறோர் தோல்வியையும் சிரமப்பட்டுத் தேடித்தந்தான்.

பிரான்சும்—பிரிட்டனும், மார்க்கத்தால் வேறுபட்டிருந்தாலும், திருமணத்தால் நேச நாடுகளாகிவிட்டன.

ஹென்ரிட்டாவைத் திருமணம் செய்துகொள்ளும்போது, கத்தோலிக்கருக்கு உரிமைகள் கூடுமானவரையில் வழங்குவதாக, சார்லஸ் ஒரு இரகசிய உடன்பாட்டுக்கு வந்திருந்தான். எனினும், பிரான்சு அதனைகூட அதிகமாக வலியுறுத்தவில்லை—ஆனால், பிரான்சு பிராடெஸ்ட்டெண்டுகளுக்குத் துணைநிற்க வேண்டும், பிரான்சு அரசுக்கு எதிராக, என்று, பக்கிங்காம் தூபமிட்டான். காரணம், மார்க்க நோக்கமல்ல என்பதை இரு நாடுகளும் பிறநாடுகளும் அறியும். பிரான்சு அரசியாருடன் பக்கிங்காம் தொடர்புகொண்டான் என்பதை ஊர் பேசிச் சிரித்தது. குட்டு வெளியானதும், பிரான்சிலே அவன் தங்க அனுமதி மறுக்கப்பட்டது. இதனால் கோபமூண்ட காமுகன், பிராடெஸ்ட்டெண்டுகளைக் காப்பதாகக் கூறிக்கொண்டு, பெரும் செலவில் கப்பற்படையைத் தானே தலைமைவகித்து நடத்திச் சென்று படுதோல்வி அடைந்து திரும்பினான். பணம் பாழாயிற்று; பகை வீணாக வளர்ந்தது, மதிப்பு மடிந்தது. மக்கள், இதனை எங்ஙனம் சகித்துக்கொள்வர். ஒரு தூர்த்தனுடைய போக்குக்கு, நாட்டுச் செல்வமும் செல்வத்தினும் சிறந்த தன்மானமும் பலியிடப்படுவதா என்று கேட்டனர்.

"நமது மதிப்பு அழிக்கப்பட்டுவிட்டது — நமது கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன—நமது மக்கள் மடிந்தார்கள்—எதிரிகளால் அல்ல, தற்செயலாக அல்ல, நாம் யாரிடம் நம்பிக்கை வைத்திருக்கிறோமோ, அவர்களால்!" என்று ஆவேசமுறப் பேசினார் சர்.எலியட் எனும் மாமன்ற உறுப்பினர். மக்கள் மனதிலே, இந்தப் பேச்சு எவ்வளவு ஆவேச உணர்ச்சியை ஊட்டியிருக்கும்! நாட்டு மக்கள் அனைவரும், என்ன எண்ணிக்கொண்டிருந்தனரோ, அதை எலியட், மாமன்றத்திலே முழக்கமிட்டார்! தோல்வி துயர்தரத்தான் செய்கிறது. எனினும், அதன்

காரணத்தை விளக்கி மக்கள் சார்பாக, முழக்கமிட, மாமன்றத்திலே வீரர்கள் இருக்கிருர்கள் என்பதைக் காணும்போது, துயரம் பறந்தோடுகிறது, புதியதோர் நம்பிக்கை பிறக்கிறது, என்று மக்கள் கூறி களித்தனர்.

கேவலத்துக்குரிய இந்தத் தோல்விகளைப் பெற, பெரும் பொருள் செலவிடப்பட்டது — அதைப் பெற மன்னன் கையாண்ட முறைகள், எதிர்ப்புத் தீயைக் கிளறிவிட்டது.

சரக்குகளின் மீது தீர்வை போடப்பட்டது-மாமன்ற அனுமதியின்றி, இலண்டன் நகராட்சி மன்றத்தாரை நகரிலிருந்து 100,00. கடன் பெற்றுத்தரச் சொன்னுன் மன்னன் — நகரம் மறுத்துவிட்டது — நகராட்சி மன்ற உறுப்பினரில் சிலர் 20,000 தர முன் வந்தனர்: ஐந்தில் ஒன்று கிடைக்கிறது அரசன் கேட்கும்போது! இதற்கு முன்பு இவ்விதம் நடந்ததுண்டா? எவ்வளவு தீரமாக, இலண்டன் மக்கள், மன்னன் பேச்சை ஏற்க மறுத்துவிட்டனர்! கடன்கேட்கிருன்: முடிதரித்த மன்னன்—தங்களைச் சிறையிலிடவும், தூக்கிலிடவும் அதிகாரம் படைத்தவன், தேவனருளால்மன்னனுனதாகப் பேசிக்கொள்பவன்,எனினும், தரமுடியாது என்று தீரமாகக் கூறிவிட்டனர் இந்தத் தீரம் வளரவேண்டும்! மக்கள் மண்பொம்மைகளல்ல, தலையாட்டிகளல்ல, தன்மானம் கொண்டவர்கள், உரிமை வேட்கை மிக்கவர்கள், அவர்கள், விழித்துக்கொண்டார்கள், என்பதை தெளிவாகக் காட்டும் நிகழ்ச்சிகள் இது, எனினும், வேறு எந்த முறையால் பணம் தேடுவது என்றுதான் சார்லஸ் மன்னன் யோசித்தானே தவிர, காலக் குறியைக் காணமறுத்தான், மன்னன் தன்னிடமிருந்த தங்க வெள்ளித் தட்டுகளைக்கூட விற்ருன்! மன்னன் எவ்வளவு ஆதரவற்ற நிலையில் இருக்கிருன் என்பதை மக்கள் அறியலாயினர், அகமகிழ்ந்தனர்.

350,000 பவுன், கட்டாயக்கடனுகத் தந்தாக வேண்டும் என்று தாக்கீது பிறப்பித்தான். நெறி தவறத் தொடங்கிய மன்னன், தவருன பாதையில் வேகமாகச் செல்கிருன் என்பதை இது விளக்கிற்று — கட்டாயக் கடன் என்பதற்கும் அடித்துப் பறிப்பதற்கும் சொல்லள விலன்றி, பொருளில் என்ன வித்தியாசம். நீதிமன்றம் இந்த முறை சட்டத்திற்கு விரோதமானது என்று தீர்ப் பளித்தது! "அப்படியா! யார் அந்தத் தீர்ப்பளித்தது? சர். ரண்டால்க்கு எனும் முதல் நீதிபதியா? சரி, அரச ஆணையை அவமதித்த குற்றத்துக்காக, அவரைப் பதவி யிலிருந்து நீக்கி விட்டோம்" என்ருன் மன்னன். கொடுங் கோலன், காட்சி அளிக்கிருன், என்ருகிவிட்டது நிலைமை. கட்டாயக் கடனுக்கு, நாடெங்கும் பலத்த எதிர்ப்பு. படைகொண்டும், சிறையில் தள்ளியும், உருட்டியும் மிரட் டியும், கட்டாயக் கடனை வசூலித்தனர் — கண்டனம் அலை அலையாகக் கிளம்பிற்று! மன்னனை, இனி, நாடு தாங்காது, என்பது புரியலாயிற்று. மாமன்ற உறுப் பினர்கள் மக்களிடம் நாட்டு நிலைமையையும் மக்கள் கடமையையும் எடுத்துரைத்தனர். உரிமையைப்பெற, எந்த அளவு செல்லவும் தயாராக இருப்பதை மக்கள் உணர்த்தினர்.

மன்னனுடைய சொந்த நிலங்கள் ஈடு காட்டப் பட்டு, கடன் வாங்கப்பட்டது. நிர்வாக ஊழல், எவ்வளவு பணத்தையும் கரைத்தபடி இருந்தது. மன்னன் திகைத் தான் — ஒரு யோசனை உதித்தது. கப்பல் வரி ஒன்றை விதித்தான்.

ஆபத்து நாட்டை நோக்கி இருக்கும்போது, மன்னர் கள், முன்னுளில், துறைமுகப்பட்டணங்களில், கப்பல்வரி வசூலிப்பதுண்டு; அதைக்கொண்டு கலங்கள் கட்டி, நாட்டைக் காப்பாற்றும் நோக்குடன். சார்லஸ் மன்னன்

இதைப் புதுப்பித்து, நாடு முழுவதும் 173,000 பவுன் கப்பல் வரி கட்டவேண்டும் என்று கட்டளையிட்டான்.

மாமன்றம், மன்னன் கேட்கும் பணத்தைத் தர இசையவில்லை என்றதும், இந்தவிதமாகப் பணம் 'தண்ட'த் துணிந்தது மக்களுக்கு மேலும் ஆத்திரமூட்டிற்று. மாமன்றத்திலே மக்கள் சார்பாகப் பேசுபவர்களை, ஆசைகாட்டியும் அச்சமூட்டியும் மன்னன் வளையவைக்கலாம் என்று எண்ணினன்; ஆசைக்குச் சிலர் பலியாகிப் பதவிகள் பெற்றுப் பொதுமக்களின் வெறுப்பைப் பெற்றனர், ஆனால் அச்சத்துக்கு ஒருவரும் ஆட்படவில்லை. அவர்கள் மனதிலே. தூய்மையான ஓர் போராட்டத்திலே இறங்குபவர்களுக்கு இயற்கையாக ஏற்படும் ஓர் உறுதி குடிகொண்டது. தனிப்பட்ட வாழ்விலே எத்தகைய ஆபத்துச் சூழினும் தாங்கிக்கொள்வதுதான், மக்களின் நல்வாழ்வுக்கு வகைதரும் என்ற பெருநோக்கம் கொண்டனர். அவர்களை அரசன் மிரட்டினல், மக்கள் திரண்டெழுந்து அவர்களைக் காக்க நின்றனர். மாமன்றம் யாரோ விஷயமறிந்தவர்கள் விவாதித்துக்கொண்டிருக்கும் இடம் என்பது மாறிவிட்டது—மக்களை மதிக்க மறுக்கும் மன்னனுடன் அறப்போர் நடாத்தத் திட்டம் தீட்டும் திருச்சபை என்று மாமன்றம் கருதப்பட்டது. மக்கள் அடிக்கடி பெருவாரியாகக் கூடி, மாமன்ற வாயிலுக்கு வந்து முழக்கமிடுவதும், உரிமைக்காகப் போரிடுபவர்களைப் பாராட்டி ஆரவாரம் செய்வதும், மன்னனுக்குத் தலையாட்டிகளாகிவிட்ட தர்பார் தளுக்கர்களைக்கண்டால் கண்டன முழக்கமிடுவதும், பழக்கமாகிவிட்டது. இரண்டிலொன்று தெரிந்துகொண்டாக வேண்டும் என்ற நிலை பிறந்துவிட்டது. இதனை அறியாத மன்னன், கண்களை உருட்டினல் காரியம் நடைபெறும் என்று எண்ணினன். தூக்குமேடை அமைக்கப்பட்டபோது

கண்களைக் கசக்கியும் பலன் ஏற்படவில்லை. மக்கள் துணிந்துவிட்டனர்!

நான் அழைத்தால் கூடவேண்டும், நான் கை அசைத்தால் கலையவேண்டும், மாமன்றம் என்பது இது தான்! என்று மன்னன் பேசினுன்; தனக்காக மட்டுமல்ல, எதிர்கால மன்னர்களுக்காகவும், எனவே. மக்கள், தங்களுக்கு அப்போது ஏற்பட்ட இடையூறுகளைக் களைந்து கொள்வதற்காக மட்டுமல்ல, எதிர்காலச் சந்ததிகளைக் காப்பாற்றவும், வழிவகை கண்டாக வேண்டுமென்று உறுதிகொண்டனர்.

பக்கிங்காமைக் கண்டித்து எலியட், டிகிஸ், எனும் இருமாமன்ற உறுப்பினர்கள் பேசியதற்காக, மன்னன் இருவரையும் அரண்மனைச் சிறைக்கூடமான, 'டவரில்' தள்ளினுன், மாமன்றம் இந்த அக்ரமத்தைத் தாங்கிக் கொள்ள மறுத்தது! நாடு கொதித்தது, பாதகம் புரிகிருன் பக்கிங்காம். பணம் பாழாகிறது, ஊழல் நெளிகிறது உதவாக் கரைத் திட்டமிட்டு கேவலமான தோல்வியைப் பெறுகிருன், கடல் கடந்துள்ள நாடுகளிலே பிரிட்டன் ஏளனம் செய்யப்படுகிறது, கடலிலே பிணங்கள் மிதக்கின்றன, அதனைக் கண்டித்தால் கொடுஞ்சிறையா! மாமன்றம் தன் உரிமையை இழக்க விரும்புமா? மக்கள் மாமன்றத்துக்குத் துணை நிற்கிருர்கள். மன்னன் இதனை பொருள அறிந்து கொள்ளவேண்டும். இங்ஙனம் எழுச்சியுள்ள மாமன்றம், எலியட், டிகிஸ் இருவரையும் விடுதலை செய்தாலொழிய; ஒரு செயலையும் செய்யப் போவதில்லை என்று கூறிவிட்டது! நாட்டின் உரிமை முழக்கக்கோட்டம், மாமன்றம். அது பணி ஏதும் செய்ய முடியாதென்று கூறிவிட்டது—மக்கள் மனநிலை என்ன ஆகும்? மன்னன் மிரண்டான், பணிந்தான். எலியட், டிகிஸ் இருவரும் விடுதலை செய்யப்பட்டனர்; மாமன்றம்

வெற்றி பெற்றது, மக்கள் உரிமைக்காகப் போரிட்ட வீரரை, நாடு வாழ்த்திற்று, புதிய வலிவு கிடைப்பதறிந்து மாமன்றம் பூரிப்படைந்தது.

மாமன்றமும் மக்களும் பூரிப்படையும் மற்றோர் சம்பவம் நடைபெற்றது. பக்கிங்காம் கொல்லப்பட்டான்.

ஒருமுறை தோற்றதால் மனம் உடையாத அந்த உல்லாச பிரபு மீண்டும் படை திரட்டிக்கொண்டிருந்தான் பிரான்சைத் தாக்க. அதுபோது, அவனுடைய படையி லிருந்து பணியாற்றி நீக்கப்பட்ட, பெல்டன் என்பவன், பக்கிங்காம், சில பிரான்சுக்காரருடன் பேசிக்கொண் டிருந்துவிட்டு, மாளிகைக்கு உள்ளே செல்லும்போது, கத்தியால் குத்திக் கொன்றுவிட்டு ஓடிவிட்டான். பிரபு வின் ஆட்களில் சிலர், அவனைப் பிடிக்க ஓடினர், வேறு சிலர் அவன் வீசிவிட்டுச் சென்ற, தொப்பியைக் கண் டெடுத்தனர். அதிலே! பக்கிங்காம் நாட்டுக்காகத் துரோகம் செய்தது குறித்து மாமன்றத்திலே எழுப்பப் பட்ட கண்டனக் குறிப்புச் சில எழுதிய சீட்டுக் காணப் பட்டது. சொந்த விரோதம் காரணமாக மட்டுமல்ல, நாட்டுக்குத் துரோகம் செய்பவனைத் தீர்த்துக் கட்ட வேண்டும் என்பதற்காகவும் இந்தக் கொலை, என்பதை பெல்டன் அறிவிக்கவே, அவ்விதம் செய்திருந்தான்.

"யாருடைய ஏவுதலால் இவ்விதம் செய்தாய்?" என்று விசாரணையின்போது கேட்டதற்கு, பெல்டன், "என்னை எவரும் ஏவவில்லை; நானேதான் கொன்றேன்" என்று துணிந்து கூறினன்.

பக்கிங்காம் கொல்லப்பட்டது கேட்டு மக்கள் ஒரு ஆறுதல் அடைந்தனர்—மன்னனைக் கெடுக்கும் மாபாவி ஒருவன் ஒழிந்தான், இனி ஒரு சமயம், நல்ல நிலைமை ஏற்படக்கூடும் என்றுகூட எதிர்பார்த்தனர். ஆனல்

மன்னனுடைய போக்கை ஆராய்ந்தறிந்தவர்கள், பக்கிங்காமின் மறைவால், மன்னன் திருந்திவிடமாட்டான், மனதிலே இருக்கும் ஆபத்தான தத்துவம் அழிந்துபடவில்லையே, அது இருக்குமட்டும், மன்னன் மக்களை விரோதியாகவே கருதி நடந்துவருவான் என்று கூறினர். மன்னனுடைய நடவடிக்கைகள் அவ்விதமே இருந்தன. மாமன்றத்தைத் துச்சமெனமதித்து, கப்பல் வரி வசூலிக்கும்படி, கடுமையான உத்தரவிட்டான். மாமன்றம் தந்த "உரிமை மனு"வை உதாசீனம் செய்தான், மாமன்றம் உறுதியுடன் இருக்கும்போது, அதன் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்வதாகக் கூறிவிடுவதும், கொதிப்பு குறைந்ததும், பழையபடி பிடிவாதம் பேசுவதும் மன்னனுடைய புதிய போர்முறையாகிவிட்டது. 'உரிமை மனு'வை ஏற்றுக்கொள்வதாகக் கூறி, மாமன்றத்தினர் ஒரு மகத்தான வெற்றிபெற்றதாக எண்ணி மகிழும்போது மன்னன் அந்த மனுவையும். அதற்கு மறுப்புரையும் சேர்த்து அச்சிட்டு மக்களுக்கு வழங்கினான்.

துவக்கமுதல் தூக்குமேடை செல்லும்வரையிலும், சார்லசிடம் ஒரு தவறான நம்பிக்கை குடிகொண்டிருந்தது — எதேச்சாதிகாரமாக மன்னன் நடந்துகொள்வதை மக்கள் எதிர்க்கவில்லை என்றும், உரிமை, உரிமை என்று முழக்கமிடும் மாமன்றத்தினர், துடுக்குக் குணத்தால் அங்ஙனம் செய்கின்றனரேயன்றி மக்களின் விருப்பத்தை எடுத்துரைக்கவில்லை என்றும், எதற்கும் எவருக்கும் கட்டுப்படவேண்டிய அவசியம் மன்னனுக்குக் கிடையாது, மன்னன் ஆண்டவனுக்கு மட்டுமே கட்டுப்படவேண்டியவன் என்ற பேருண்மையை மக்கள் புரிந்துகொள்ளாவண்ணம், மாமன்றத்தினர் வெற்றுரை பேசி வெறியூட்டி வருகின்றனரென்றும், விளக்கம் உரைத்தால் மக்கள் தெளிவுபெற்று, மாமன்றத்தை ஒதுக்கித் தள்ளி

விட்டு, மன்னன் பக்கம் திரண்டு நிற்பரென்றும், கருதி ஞன். மக்கள் என்ன கருதுவர் — காலம் என்னென்ன கருத்துக்களைப் பெற்றுத் தந்திருக்கிறது, என்பதைக் கணக்கெடுக்கத் தவறினுன். சவுக்கடிதான் குதிரைக்கு இன்பம் தரும் என்று எண்ணுவாருண்டா! சார்லஸ் அவ் விதம் எண்ணிக்கொண்டான்—ஏமாளித்தனத்தால் அல்ல, ஏலாத ஒரு கொள்கைக்கு அடிமைப்பட்டுவிட்ட தால். மக்களுக்கு எது தேவை, எங்ஙனம் அவர்களை நடத்திச் செல்லவேண்டும், அவர்கள் நல்வாழ்வுக்கான சட்ட திட்டங்கள் யாவை என்பன போன்றவைகளை அறியும் ஆற்றலும் உரிமையும், ஆண்டவனுல் அரச னுக்கு அருளப்பட்டிருக்கும் வரம் என்று எண்ணினுன்— கூறினுன்—நம்பித் தீரவேண்டும் என்று வலியுறுத்தினுன் நம்பாதவர்களை நாட்டுக்கும் அரசுக்கும், ஆண்டவனுக் கும் துரோகமிழைக்கும் மாபாவிகள் என்று கருதினுன். இதனுலேதான், மாமன்றத்தார் தந்த உரிமை மனுவுக்கு மறுப்புரை எழுதி வெளியிட்டு மக்களிடம் தந்தான். அதைக் கண்டதும் மக்கள் கருத்திலே தெளிவு பெறுவர், என்று எண்ணினுன். மாமன்றமும் மக்களும், மன்ன னுடைய இந்த முறைகண்டு கோபம், மட்டுமல்ல அரு வருப்பும் அடைந்தனர். கொடுத்த வாக்குறுதியைக் காற்றிலே பறக்கவிடும் மட்டரகப் போக்கினனுகிவிட் டான் மன்னன் என்று அருவருப்படைந்தனர். கடைசி வரையிலே, மன்னன் இந்த முறையைத் திறம்படு முறை எனக்கொண்டான்; எனவே, சார்லசிடம் நம்பிக்கை வைப்பதே பயனற்றது, எந்தச் சமயத்திலும், மன்னன் தன் வாக்கையும் போக்கையும் மாற்றிக்கொள்வான், நம்பி ஒரு ஏற்பாட்டையும் ஏற்றுக்கொள்வது கூடாது, ஆபத்து என்று மாமன்றத்தினர் எண்ணினர்.

மாமன்றத்துக்குப் பணிவதுபோல, எலியட், டிகிஸ் இருவரை சிறையிலிருந்து விடுவித்த மன்னன், அதனைத்

தொடர்ந்து, மக்களுக்கு மகிழ்ச்சியும் நம்பிக்கையும் வளரும் வகையாக நடந்துகொண்டிருக்கலாம்! ஆனல், அவன்தான், கருத்தறியா மக்கள், தூண்டிவிடும் தலைவர்களின் சொல் கேட்டு ஆடிக் கெடுகிருர்கள் என்று கருதுகிருனே! எனவே, இந்தச்சமயம் வாளா இருப்போம், வேருேர் வேளை வரட்டும், வட்டியும் முதலுமாகத் தீர்த்து வசூலித்துக்கொள்ளலாம் என்று எண்ணிக் கொண்டு இருந்தான்.

கட்டாயக் கடன் என்பது காட்டுமிராண்டி முறை, கள்ளன் கொள்ளைக்காரன் கையாளவேண்டிய முறையே தவிர, முறைப்படி அமைக்கப்பட்ட அரசு, இங்ஙனம், செய்தல் கூடாது என்று நாடு முழக்கமிட்டது — ஐவர், அந்தக் கடன் தரமுடியாது என்று கண்டிப்பாக மறுத்தனர், அவர்களைச் சிறையில் தள்ளினன் மன்னன்.

டார்னல், கார்பெட், வால்டர், ஹெவினிங்காம் ஹாம்டன்—எனும் ஐவர் வழக்கு தொடுத்தனர், காரணமின்றிச் சிறை வைத்தது தவறு என்று; இந்த வழக்கு, நாட்டிலே பெரியதோர் பரபரப்பை உண்டாக்கிற்று; கண்மூடி தர்பாரைக் கண்டிக்காத மக்கள் இல்லை; இந்த ஐவர், தமக்காக அல்ல, நாட்டு மக்களின் பொது உரிமைக்காகவே இந்த வழக்குத் தொடுத்துள்ளனர், அவர்களுடைய வெற்றி நமதுவெற்றி, அவர்கள் தோல்வி நமது தோல்வி, என்று மக்கள் எண்ணினர். மன்னன் எதைச் செய்தாலும் சகித்துக்கொள்ளத்தான் வேண்டும், அவன் செய்வதைத் தடுக்கும் ஆற்றலுள்ள இடம் ஏது, எனவே கசிந்துருகுவதன்றி வேறு வழி இல்லை, என்ற நிலை மாறிவிட்டது, மன்னனும் நீதிக்கும் சட்டத்துக்கும் கட்டுப்பட்டாக வேண்டும், நீதியற்ற செயலை மன்னன் செய்தால், ஏற்றுக்கொண்டாக வேண்டுமென்பதில்லை

மக்கள் மண் பொம்மைகளல்ல, உரிமை கேட்கும் வீரர் கள், என்ற புது உறுதி பொலிவுற்றது. வழக்கு மன்றத் திலே, மன்னனுடைய செயல் விவாதிக்கப்படுகிறது! முடி தரித்த மன்னன்தான், அரண்மனையில்தான் வாசம், எனினும், அவனும் தவருன முறையிலே, தன்னிச்சைப் படி நடந்துகொண்டால், நீதிமன்றம் குறுக்கிட்டு, மக்கள் உரிமையைக் காப்பாற்றத்தான் வேண்டும், என்று நாடு பேசலாயிற்று, நல்லோர் எடுத்துரைத்தனர்.

இந்த வழக்கு, பல அடிப்படைப் பிரச்னைகள் விவா திக்கப்படவும், மறைந்திருந்த பல உண்மைகள் வெளி வரவும், வாய்ப்பளித்தது. மன்னன் சார்பில் வாதாடிய வழக்கறிஞர்கள், மன்னன் சட்டம் செய்யும் ஆற்றலும் உரிமையும் படைத்தவன், என்று கூறினர். ஐவர் சார்பில் வாதாடியவர்கள், சட்டம் இயற்றும் உரிமையை மக்கள் மன்னனுக்குத் தந்தனர் என்று எடுத்துரைத்தனர். மாமன்றம் என்பதே, மன்னன் தன் இச்சைப்படி ஏற் படுத்தியது என்று மன்னன் சார்பினர் கூறினர். இல்லை, இல்லை, மாமன்றம், மக்கள் அமைத்துக்கொண்ட உரிமைக் கோட்டம் என்று கூறி, மன்னன் வாதத்தை மறுத்தனர், மக்களாட்சிக்காகப் போரிட்டவர்கள்.

இந்த வழக்கின் முடிவைப் பொறுத்தே எதிர்கால அரசியல் முறை இருக்கும், எனவே,முழுத்திறமையையும் பயன்படுத்தி, இந்த வழக்கிலே வெற்றி பெற்றாக வேண்டும், என்று இருதரப்பிலும் முனைந்து வேலை செய்தனர்.

கட்டாயக் கடன் தரத்தான்வேண்டுமா, என்று துவங்கிய பிரச்னை, இப்போது, நாட்டை ஆளும் மன்னன் எவ்வளவு உரிமை பெறலாம், என்று ஆகிவிட்டது.

பிரிட்டனிலே நடைபெற்ற பல சம்பவங்கள், சாட்சி களாக்கப்பட்டன மன்னன் பணிந்த காட்சிகள் எடுத்

துக் காட்டப்பட்டன. மக்கள் சரணடைந்த சம்பவங்களும் எடுத்துரைக்கப்பட்டன, அரசியல் அடிப்படை பிரச்னைகள் அலசப்பட்டன; நீதிபதிகள் பாடு மிகவும் சங்கடமாகி விட்டது. மன்னன் சார்பிலே வாதாடியவர்கள், அரசர்களின் பரம்பரை பாத்யதைகளைப் பற்றி விரிவுரை ஆற்றினர்; ஐவருக்காக அல்ல! அல்ல! நாட்டுக்காக வாதாடியவர்கள் அவர்கள், ஆற்றலின் பிறப்பிடமும் உரிமையின் ஊற்றிடமும் மக்களே என்று வாதிட்டனர்.

மன்னன், விசாரணையின்றி எவரையும் காவலில் வைக்கலாம், என்று மன்னன் சார்பினர் உரைத்தனர்.

அது எங்ஙனம் நீதியாகும்? குற்றமிழைத்தவனைத் தண்டிக்கத்தான், கொற்றவனேயன்றி, எவரையும் எக்காரணமுமின்றிச் சிறையில் அடைக்க ஒரு கொற்றவனா! என்று மக்கள் சார்பினர் கேட்டனர்; துலாக்கோலினர் துயருற்றனர்! வழக்கு, புதுமை நிரம்பியது மட்டுமல்ல, மக்களின் மனதிலே புதியதோர் உறுதியைக் கண்டுவிட்ட பிறகு மன்னன் யாது செய்யவேண்டும் என்ற பிரச்னையை உள்ளடக்கியதாய் விட்டது!

பிரிட்டன் இனி, ஏதேச்சாதிகார ஆட்சிக்கு இரையாவதா? அல்லது மக்களின் மாண்பினையும் உரிமையையும் மதித்து ஒழுகும் மன்னராட்சிக்கு இருப்பிடம் ஆவதா, என்பதே பிரச்னையாகிவிட்டது. சிலர் அரசன் பக்கம் தீர்ப்பளித்தனர்—சிலர் மக்கள் பக்கம் தீர்ப்பளித்தனர்! சிலர், அறநெறி நிற்கத் துணிந்துவிட்டனர், விடிவெள்ளி அழகுற ஒளிவிடுகிறது!

மன்னன் தன் இஷ்டப்படி யாரையும் காவலில் வைக்கலாம், ஆனால் காரணத்தை விரைவாகக் கூறிவிடுவதே நல்லது — என்ற கருத்தை இந்த வழக்கு, கடைந்தெடுத்துத் தந்தது. எனவே, மன்னனுடைய

முறையை எதிர்ப்பவர்களைச் சிறையிலே தள்ளிவிட்டு, இதுபற்றி யார் என்ன கேட்க முடியும் என்று இறுமாந்து கிடத்தல் இனி முடியாது! காரணம் காட்டியாக வேண்டும்!!

மன்னன் முகத்தில் உடனடியாகக் கரிபூசுவது போலாகிவிடுமே என்று அஞ்சியே, நீதிபதிகள், கைது செய்யப்பட்ட ஐவரை, ஜாமீனில்விட இணங்கவில்லை எனினும், அவர்களும், சிறைப்படுத்தப்பட்டவர்கள் என்ன குற்றம் செய்தார்கள் என்பதை மன்னன் கூறியாகவேண்டும், கூறுமலேயே, அவர்களை நெடுங்காலம் சிறையிலே தள்ளிவைப்பது முறையாகாது என்று தெரிவித்து விட்டனர்.

அவர்களை விடுதலை செய்யும்படி மன்னன் உத்தரவு பிறப்பித்தான்! வேறு வழி!! நாடு, களிப்புக் கூத்தாடிற்று. மன்னன் தோற்ருன்; மக்கள் வெற்றிபெற்றனர்; இனி 'இம்'மென்ருல் சிறைவாசம் என்பது நடவாது, மன்னன் காரணம் காட்டியாக வேண்டும்! என்று கூறிக்களித்தனர் மாமன்றமும் மக்களும், இந்தச் சம்பவத்தால் புதிய மதிப்புப் பெற்றது, மன்னன் தன்னைச்சுற்றிக் கடுவிஷம் நிரம்பிய காற்றடிக்கிறது என்று கருதிக்கொண்டான். நாடு எவ்விதம் இருக்கிறது என்பதை உணர்த்தும் சம்பவங்கள் இதுபோல, பல நடைபெற்றன.

ஒரு முறை, ஆட்சிமுறையைக் கண்டித்து மாமன்றத்தில் பேச்சு நடைபெற்றபோது, மதத்துறையில் நாடு விரும்பாத மாறுதல்களைச் செய்பவர்களைக் கண்டிக்கத் தலைப்பட்டது! மாமன்றத்தின் மூலம், மக்களுடைய கருத்து எவ்வாறு செல்கிறது என்பதைக் கண்டறிந்து கொள்வதைப் பொறுப்புணர்ச்சியுள்ள மன்னன் ஓர் வாய்ப்பாகக் கருதுவான், சார்லசோ தன் ஆதிக்கத்

தைக் கெடுக்கும் செயலாக இதனைக் கருதினான், கடுங் கோபம் கொண்டான், மாமன்றத் தலைவருக்குத் தாக்கீது அனுப்பி, கூட்டத்தைக் கலைக்கும்படி கூறினான்; மாமன்றம் மன்னனுடன் போரிட்டுத்தான் உரிமைகளைப் பெற முடியும் என்ற பாடத்தை அறிந்து கொண்டது. அதற்கான உள் உரமும் பெற்றுவிட்டது. எனவே அவைத்தலைவர், மாமன்றத்தைக் கலைப்பதற்கு அறிகுறியாக எழுந்துபோக முயன்றபோது, ஹாலிஸ், வாலன்டைன் என்று இரு உறுப்பினர்கள், சர். ஜான் பின்ச் எனும் மாமன்றத் தலைவரைப் பிடித்திழுத்து பீடத்திலமர்த்திப் பிடித்துக் கொண்டனர், பேசவேண்டியதைப் பேசினர்!

மாமன்றத்தின் ஒப்பம் பெருமல் சுங்கவரி பெறுவது குற்றம்; மன்னனை அவ்விதம் செய்யும்படி தூண்டுபவர், நாட்டுக்குத் துரோகியாவர்.

யாரேனும், அந்த வரியைச் செலுத்தினால், அவரும் துரோகி என்றே கருதப்படுவார்.

மார்க்கத்துறையிலே நாடு விரும்பாத மாறுதல்களைப் புகுத்துபவரும், பெரும் துரோகியே.

இவ்விதமான கண்டனத் தீர்மானங்களை, நிறைவேற்றிய பிறகே மாமன்றம் கலைந்தது.

மன்னன் ஆணையின்படி நடக்கத் துடித்த மாமன்றத் தலைவர், பீடத்தில்— அவர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும்!!

மன்னன் மாமன்றத்தைக் கலைந்துபோகும்படி உத்திரவு பிறப்பித்திருக்கிறார், கலைந்து செல்க! எனக் கூற வந்த அதிகாரி, வாயற்படியில்! மாமன்றக் கதவை இழுத்துப் பூட்டிக்கொண்டு, கண்டனத் தீர்மானத்தை நிறைவேற்றினர்—பிறகே கலைந்தனர்.

தன் ஆதிக்கத்தை இந்த அளவிலும் முறையிலும், எதிர்க்கத் துணிந்தவர்களை விட்டுவைப்பது, தன் தத்துவத்துக்கே இழுக்கு என்று எண்ணிய மன்னன், எலியட் உட்பட, பல உறுப்பினர்களைச் சிறைப்படுத்தினான்—வழக்குத் தொடரப்பட்டது—வழக்குத் தொடராமல் நீண்ட நாள் சிறையில் வைத்திருப்பது சட்டப்படி சரியல்ல என்று ஏற்கனவே தீர்ப்பு இருக்கிறது! எனவே மன்னன், மாமன்ற உறுப்பினர்மீது குற்றம் சாட்டித்தான் தீரவேண்டும்.

மாமன்றத்தைக் கலைந்து செல்லும்படி மன்னன் உத்திரவிட்டான பிறகு, மாமன்றத்தில் கூடிப் பேசியது கலாம் விளைப்பதாகும்—எனவே, எலியட்டும், கண்டனம் தெரிவித்த மற்ற உறுப்பினர்களும் குற்றவாளிகள், என்று மன்னன் சார்பில் வாதாடப்பட்டது. எலியட்டும் மற்றவரும், ஜாமீனில் செல்லக்கூட மறுத்து, மாமன்றத்திலே நடைபெற்ற விஷயத்துக்காகத் தங்கள் மீது வழக்குத் தொடருவது சட்ட விரோதம் என்று வாதாடினர். பன்னிரண்டு நீதிபதிகள்! ஏன் இந்த பதவியில் அமர்ந்தோம் என்று எண்ணிக் கவலைப்பட்டனர். ஒருபுறத்திலே மன்னன் உருட்டி மிரட்டிப் பார்க்கிறான், மற்றோர் புறத்திலேயோ, மாமன்றம் முழக்கமிடுகிறது! இந்த வழக்கில், எந்த பக்கம் தீர்ப்பளித்தாலும், தொல்லை தாக்கும்! எனவே நீதிபதிகள் குழப்பமடைந்தனர். மன்னன் எந்த அளவுக்கு செல்லத் துணிந்திருக்கிறான் என்பதை எடுத்துக் காட்ட விரும்பி, வழவழவென்று பேசிய தலைமை நீதிபதி வேலையினின்றும் நீக்கப்பட்டான்! நீதி கண்டறிய அல்ல, மன்னன் நினைப்பு அறிந்து நடப்பதற்கே நீதிமன்றம்! கேலிப்பொருள்!! எலியட்டும் பிறரும் தண்டிக்கப்பட்டனர். சிறையில் தள்ளப்பட்டனர். நீதிக்காகவும் நேர்மைக்காகவும், மக்கள் உரிமைக்காகவும், மாமன்றத்தின்

மாண்புக்காகவும் போரிட்டவர்களைச் சிறையிலே தள்ளி ஞன்—மக்களைச் சோகக் கடலிலே தள்ளிவிட்டான்! —எதேச்சாதிகார ஆட்சியை எதிர்த்து நின்று நமக்காக வாதாடும் நேர்மைஉள்ளம் பெற்றவர்களை, கொடுஞ்சிறை யிலே தள்ளிவிட்டானே மன்னன். முறைப்படி நடக்க வேண்டும், நெறி அறிந்து ஒழுகவேண்டும், என்று பேசி யதா குற்றம்! மக்கள் சார்பாகப் பேசுவதற்கா கடும் தண் டனை. எலியட் செய்த குற்றம் என்ன? பொதுப் பணத் தைச் சூறையாடிஞனு! போகபோக்கியத்தில் மூழ்கிஞனு! பக்கிங்காமா? உற்ருர் உறவினர்களுக்கு வேலை வாங்கித் தந்தாஞ! தனக்காகவா பணியாற்றிஞன்? மக்களுக்காக அல்லவா! கிழக்கிந்தியக் கம்பெனியாரிடமிருந்து பெரும் பொருள் கைக்கூலி பெற்றுக்கொண்ட பக்கிங்காம், அரச சபையின் மணியாஞன்! அக்ரமம் தாங்காமல், யாரோ ஒருவன் அவனைக் கொன்றுதீர்த்தான்—மன்னன் அவனை உற்ற தோழஞக அல்லவா கொண்டிருந்தான்! நமக்காகப் பாடுபடும் பிம், ஹாம்டன், எலியட் போன்ருருக்குச் சிறை! என்ன அக்ரமம்! எவ்வளவு அநீதி! என்று மக்கள் கொதித்துப் பேசினர், துயருற்றனர். சிறையில் தள்ளப் பட்டால் சித்தம் குழம்பிவிடுமா, கொண்ட கொள்கையை விட்டுக் கொடுத்துவிடுவேஞ, அறப்போர் நடாத்த முடி யும், அஞ்சேன், அஞ்சேல்! என்று எலியட் கூறிவிட்டுச் சிறையில் வாடிக்கிடந்தான், மக்கள் மனதிலே இடம் பெற்றுவிட்ட எலியட், சிறையிலேயே இறந்துபட்டான்—கொள்கைக்காக உயிரை இழந்த அந்த உத்தமனுடைய மறைவு, மக்கள் உள்ளத்தை உலுக்கிவிட்டது. இரண் டாண்டுக் காலம் சிறைக் கொடுமைக்காளாகி, எலியட் 1631ல் சிறையிலேயே இறந்துபட்டான்.

நச்சுத்தத்துவம், நச்சரவுபோன்ற நண்பர்குழாம், நாடு ஏற்க மறுக்கும் மார்க்க மாறுதல்கள், வீண் குழப்ப

மளிக்கும் திட்டங்கள், கேவலத் தோல்விகளைத் தரும் சண்டை சச்சரவுகள், பணவிரயம், மிரட்டி நீதிமன்றங்களை ஒதுக்குவது, மாமன்றத்தை ஆள்காட்டி விரலால் ஆட்டிப்படைக்க எண்ணுவது, உரிமை கேட்பவர்களைச் சிறையில் தள்ளி சாகடிப்பது, கொள்ளை அடிப்பதுபோல வரிகளைக்கொண்டு கொடுமை செய்வது, ஒன்று இரண்டா மன்னன் செய்யும் கொடுமைகள், எத்தனை காலத்துக்கு இதனைத் தாங்கிக்கொள்வது, எப்படித் தாங்கிக்கொள்வது? என்று மக்கள் மனம் நொந்து கேட்டனர். மன்னனோ, மக்களை எப்படி ஆளவேண்டும் என்பது எனக்கல்லவா தெரியும், மாமன்றம் அறியுமா அந்தத் திறமையை, ஆண்டவன் எனக்கல்லவா, ஆளும் உரிமையை, வரத்தை, அருளியிருக்கிறார்! என்று கேட்டான். புண்ணைக் காட்டினர் மக்கள், மன்னன் அதிலே வேல்சொருகினான்.

பதினோராண்டுகள், சார்லஸ் மாமன்றத்தைக்கூட்டாமலேயே ஆண்டான். மக்களின் கருத்து அறிய மாமன்றம் மக்களின் உரிமையைக் கண்டறிய மாமன்றம்! தவறும் மன்னனைத் திருத்த மாமன்றம்! இது நாடு கொண்டிருந்த கருத்து. மன்னனோ, "மாமன்றம்! அது இல்லாமல் ஆட்சி நடத்த முடியாமலா போகிறது. பார்ப்போம்" என்று சூளுரைத்தவன் போலானான்—சுகபோகிகள் அவனைப் புகழ்ந்தனர்—ஆதிக்கம் புரியும் நோக்கம் கொண்டவர்கள் அடுத்துக் கெடுப்பவர்கள், மக்களை மாக்களென்று எண்ணும் மமதையாளர்கள், ஏழையின் கண்ணீரையும் எளியோரின் இரத்ததையும் கண்டு மனம் இளகாத கொடுமையாளர்கள், மன்னனுக்குப் பக்கமேளம் கொட்டினர். பதினோராண்டுக்காலம் ராச நர்த்தனம் நடைபெற்றது. சிறையின் பசி தீருமளவுக்கு உணவு தரப்பட்டது! ஏன் என்று கேட்பவன், இழுத்துத் தள்ளப்படுவான் பதினோ

ராண்டுகள். மன்னன் தன் பரிவாரத்தின் துணைகொண்டு, நாடாண்டான்—மாமன்றம் அழைக்கப்படவில்லை, மக்களைக் கவனிக்கவில்லை கேட்கும் வரியைத் 'தரவேண்டும்' காட்டும் சிறையில் புகவேண்டும்! மன்னன் கூறுவது தான் சட்டம், அவன் கொடுப்பதுதான் நீதி! உரிமை, சாசனம், உடன்படிக்கை, ஏற்பாடுயாவும் வெற்றுரைகள்! வீணரின் கற்பனைகள்! அரசன் ஆண்டவன் அம்சம்! அவனை எதிர்ப்பது நாத்தீகம்!! இந்த முறையிலே, பதிேனாராண்டுகள் சென்றன!

மக்கள் இந்த நாட்களிலே பெரும் புரட்சி எதும் செய்யவில்லை, அரசனைத் தாக்க முயற்சிக்கவில்லை, அரண்மனையைத் தாக்கக் கிளம்பவில்லை, அதிகாரிகளை அடித்துக் கொல்லவில்லை, மாளிகைகள் மீது போர் தொடுக்கவில்லை! எனவே,மக்கள் அடங்கிக்கிடக்கிறார்கள் என்று ஆதிக்க வெறிகொண்ட அதிகாரிகள் கருதினர், மன்னனோ, "இதுதான் மக்கள் இயல்பு! மன்னன் ஆள் வதைத்தான் அவர்கள் விரும்புவர், அவர்களுக்குத் தெரியும், மன்னன் என்றால் அதற்கு உள்ள மகிமை, மாமன்றம்தான் மக்களிடம் மயக்கமொழி பேசிக் கெடுத்து வந்தது. இப்போது மாமன்றம் இல்லை, எனவே மக்கள் மனதிலே தவறான கருத்துக்கள் தோன்றுவதுமில்லை" என்று எண்ணிக்கொண்டான். பெரும் புயலுக்கு முன்பு காணப்படும் அமைதி இது. என்று எண்ணத் தோன்ற வில்லை. குறிகளைக் கண்டு குணத்தை அறிந்து கொள்ளும் திறன் இல்லை, பதினோராண்டுகள், மாமன்றம் இன்றி, மன்னன் ஆண்டான், ஆனால் மாமன்றம் மாண்டுபோக வில்லை, மக்கள் மனதிலே இருந்துவந்த உரிமைவேட்கை மடிந்துவிடவில்லை, மாறாக, அந்த வேட்கை, அடக்க அடக்க வலுத்தது.

பக்கிங்காம் இறந்ததால் ஏற்பட்ட 'காலி'யைப் பூர்த்திசெய்ய பிரபுக்கள் சிலர் கிடைத்தனர், அவர்களின்

ஹ்ராம்டன், எலியட், ஆகியோருடன் இருந்து, மக்களின் பாதுகாவலராக நடித்தவர், "மன்னன் நம்மிடமிருந்து எதை எதை எல்லாம் பறித்துக்கொண்டார் தெரியுமா? எதைப் பறித்துக்கொண்டாரா? எதை விட்டுவைத்திருக்கிருர்!" என்று பேசி, மக்களின் பாராட்டுதலைப் பெற்றவர் எனினும், வென்ட்ஓர்த், வீரனுகவே இருந்து வந்தார்— மன்னர் செவியில் தன் குரல் விழவேண்டும், மன்னன் பார்வை தன்மீது விழவேண்டும், என்ற உள் நோக்கத்துடனேயே முழக்கமிட்டுவந்தார்.

யாரார் மக்கள் உரிமைக்காக மாமன்றத்திலே தீவிரமாகப் பேசுகிருர்களோ அவர்களைப் பிடித்திழுத்து, பதவி கொடுத்து, வாயை அடைத்துவிடவேண்டும் என்ற எண்ணத்துடன், சார்லஸ், எலும்புத் துண்டுகளை வீசிய போது, அதிலொன்றைக் கவ்விக்கொண்டு, மன்னனுடைய வேட்டை நாய் ஆகிவிட்டான் வென்ட்ஓர்த்! மக்கள் துரோகி வென்ட்ஓர்த் தீப்பொறி பறக்கப் பேசினுன், உரிமைக்காக—பதவி பெற்றதும் தீயென மக்களைச் சுடலானுன்! வேக வேகமாகப் பதவி உயர்ந்தது, தக்க திறன்படைத்தவன் கிடைத்தான் என்று அறிந்த மன்னன், நிர்வாகப் பொறுப்பை வென்ட்ஓர்த்திடம் ஒப்படைத்தான்—ஒரு குறிக்கோள் மட்டும் அவனிடம் கூறிவைத்தான், அரசன் ஆணைக்கு ஈடு எதிர்ப்பு இருத்தலாகாது என்பதுதான் குறிக்கோள். வென்ட்ஓர்த், மாமன்றத்தையும் மக்களையும் ஒதுக்கிவிட்டு மன்னன் ஆட்சி செய்ய, என்னென்ன முறைகளை வகுக்கலாமோ அவ்வளவும் செய்து தந்தான். ஸ்டராபோர்டுபிரபுவானுன்! மக்கள் துரோகி, மன்னரால் பிரபு ஆக்கப்படத்தானே செய்வான்!

வென்ட்ஓர்த்தாக இருந்து ஸ்டராபோர்டு பிரபு ஆனவனும் தேவலாய அலுவலகனுக இருந்து, அரச

மார்க்கத்துறைக்கே அதிபனான, லாட் என்பானும், சேர்ந்து செய்த கொடுமைமிக்க ஆட்சி, மன்னனையும், மன்னராட்சி எனும் முறையையும், அடியோடு வெறுக்கும் நிலையை உண்டாக்கிவைத்தது. இந்த இருவருடைய வேகமான வளர்ச்சியையும், மோசமான கொடுமைகளையும் தடுக்கும் நிலையில் ஒருவரும் எழமுடியவில்லை, இருவரும் நண்பர்கள்!!

லாட், ஆணவம்மிக்கவன். யாரையும் எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசுபவன்.

வென்ட்ஒர்த், மாமன்றத்தார் என்னென்ன முறைகளைக் கையாள்வர் என்பதை அவர்களுடன் நெருங்கிப் பழகி அறிந்துகொண்டவன்; எனவே, எந்த முறைகளில் மாமன்றத்தாரின் போக்கைத் தடுக்க முடியும் என்றறிந்து காரியமாற்றினான்.

இந்த இருவரின் துணைகொண்டு, சார்லஸ், மக்களிடமிருந்து பணத்தைக் கசக்கிப் பிழியலானான்,

"மன்னர் உமக்கு 'வீரர்' என்று பட்டமளிக்க இசைகிறார்—கட்டணம் நாற்பது பவுன்" என்று ஒரு உத்தரவு.

"எனக்கேன் ஐயனே! வீரன் என்றொரு பட்டம்"

"அரசர் அழைக்கிறார், மறுக்கிறாயே!"

"சொத்து சுகம் உள்ளவர்களுக்கு விருது தேவை—மன்னர் அவர்களுக்கு அளிக்கட்டும்—நான்ஏழை—எனக்கேன் விருது, எங்கிருந்து 40 பவுன் கட்டுவேன்"

"அரசர் அளிக்க விரும்பும் விருதை ஏற்க மறுப்பது, அவரை அவமதிப்பதாகும், இதற்காக உனக்கு அபராதம் விதிக்கிறோம்"

கட்டாயப்படுத்தி 'விருது' அளித்துப் பணம் திரட்டும் முறை இதுபோலிருந்தது. 11,5000 பவுன்

இதன் மூலம் கிடைத்தது, முதலாம் எட்வர்டு மன்னன், இதுபோலக் கட்டணம் வசூலித்து, விருதுகள் வழங்கினன் இதனை முன்மாதிரியாகக்கொண்டு, பணம் திரட்ட இதனைப் பயன்படுத்தினன்; மாமன்றத்தை அழைக்காமல் நாடாள விழைந்த மன்னன்.

லாட், வென்ட்ஒர்த், ஆகிய இருவரும், மிகமிகப் பொருளற்ற காரணங்களுக்காக எல்லாம், பணம் படைத்தவர்களை வழக்கு மன்றத்திலே இழுத்து நிறுத்துவர், பத்தாயிரம், ஐம்பதாயிரம் என்று அபராதம்! இது அரசாங்கத்து வளமான வருவாய் ஆகிவிட்டது.

நெடுங்காலத்துக்கு முன்னம், அரசர்களின் சொந்தக் காடுகள் என்று ஏராளமாக உண்டு; நாளாகவாக, காடு அழிக்கப்பட்டு, வயல்களாகக்கப்பட்டன, சிற்றூர்கள் வளர்ந்தன. பணம் திரட்டுவற்கு என்னென்ன வழி என்று தேடியவண்ணம் இருந்த மன்னனுக்கு, இது ஒரு வாய்ப்பாகத் தெரிந்தது, நெடுங்காலத்துக் கணக்கைத் தோண்டி எடுத்தான், அரசரின் காடுகளை, சொந்த உபயோகத்துக்கு எடுத்துக்கொண்டவர்களைக் கண்டறிந்து, கடுமையான அபராதம் விதிக்கலாஞன். இரண்டாண்டுகளிலே 25,000 பவுன் திரட்ட முடிந்தது, அத்துடன், சிறு பிரபுக்களின் சீற்றமும் கிளம்பிற்று; மக்களை மதியாது நடத்தும் மமதை ஆட்சிக்கு எதிர்ப்பு வலுத்திடலாயிற்று.

சோப்பு, முதலிய பலசரக்குகளை உற்பத்தி செய்வதற்கு, மன்னனிடம் அனுமதி பெறவேண்டும்—அதற்குக் கட்டணம்; கொழுத்த வேட்டையாயிற்று.

சரக்கு உற்பத்தி செய்ய அனுமதி பெறுவதுடன், அதே சரக்கை வேறு யாரும் உற்பத்தி செய்யாதிருக்கும்படி தடை போடும்படி; மன்னரிடம் உத்தரவு பெற முடிந்தது—பெரும் பொருள் கொடுத்து.

இதல்லாமல், கப்பல்வரி, ஒரு முறைக்கு மூன்று முறை வசூலிக்கப்பட்டது—இலண்டன் நகரில் மட்டும், 104,000 பவுன் திரட்டமுடிந்தது.

மூன்ருவது முறையாகக் கப்பல் வரி விதிக்கப்பட்ட போது, ஹாம்டன். வரி கட்ட மறுத்தான். ஒரு பவுன் தான் வரி, எனினும் மாமன்றம் ஏற்காமுன்னம் போடப்பட்ட வரியை செலுத்த முடியாது என்று கூறினன். வழக்குத் தொடரப்பட்டது; சிக்கல் வளர்ந்தது, நீதிபதிகளுக்கு!

"மன்னனுக்கு, இவ்விதம் வரிவிதிக்க அதிகாரம் உண்டா?"

"உண்டு"

"மாமன்றத்தின் இசைவு பெற்றல்லவா மன்னன் வரி விதிக்க வேண்டும் — அதுதானே முறை. பலகாலும் இருந்துவந்த ஏற்பாடு."

"பொதுவாக அதுதான் முறை—ஆனல் கப்பல் வரி, எல்லா வரிகளையும் போன்றதல்ல. நாட்டுக்கு ஆபத்து நேரிடும்போது, மன்னன், அந்த ஆபத்தைத் தடுக்க, கடற்படையைத் திரட்டவேண்டும்—அது அவர் கடமை, உரிமை—அதற்காகும் பெரும் செலவை நாட்டு மக்களிடம் அவர் வசூலிக்க, உரிமை பெற்றிருக்கிருர். கப்பல் வரி, இந்த வகையைச் சார்ந்தது, எனவே மாமன்றத்தைக் கலந்து தீரவேண்டுமென்பதில்லை."

"சரி, நாட்டுக்கு ஆபத்து என்ன இப்போது? போர் இல்லை, எதிரியின் கலங்கள் எந்தக் கடலிலே உள்ளன?"

"அதெல்லாம், மன்னர் அறிவார்"

"மன்னருக்கு மட்டும்தான், எது ஆபத்து என்பதை

அறிந்துகொள்ள முடியுமா? மாமன்றமும் அறிய முடியுமே! ஏன் மாமன்றத்தைக் கூட்டவில்லை?"

"அது வேறு விஷயம்"

"அதுதான் முக்கியமான விஷயம்"

"கப்பல் வரி விதிக்க மன்னருக்கு உரிமை இருக்கிறது"

"காரணம் என்னவென்று கேட்க மக்களுக்கு உரிமை இருக்கிறது."

ஹாம்டன் வழக்கு, இவ்விதம் உருவெடுத்தது. மீண்டும் நாட்டு மக்களுக்கு ஓர் நல்விருந்து, நீதிபதிகளுக்கு மனக்குழப்பம், மறுபடியும், எதேச்சாதிகார ஆட்சிக்குக் கண்டனம் அலை அலையாகக் கிளம்பிற்று, மக்களை மதியாமல் ஆட்சி நடத்தக் கிளம்பிய மன்னன் பணத்துக்கு மட்டும் மக்களை நாடுவானேன்? ஆண்டவன் அருளால் அல்லவா, ஆட்சி கிடைத்தது, மக்களிடம் வரி கேட்பானேன். அதனையும் ஆண்டவன் அருளமாட்டாரா? மக்கள் விதவிதமாகப் பேசலாயினர். நீதிபதிகளோ. ஆளுக்கொரு தீர்ப்பளித்தனர். அச்சத்துக்கு ஆட்பட்டவர்கள் அரசன் சார்பிலே! மக்களின் முழக்கத்தின் பொருளை உணர்ந்தோர், மக்கள் சார்பிலே! ஹாம்டன், கப்பல் வரி கட்ட மறுத்து, நீறுபூத்த நெருப்பாக மக்கள் மனம் இருப்பதை மன்னன் அறியச் செய்தான்.

அச்சத்தால் நீதிபதிகள் தாக்கப்பட்டு, ஹாம்டனுக்கு எதிராகத் தீர்ப்பளித்தனர் எனினும், இந்த வழக்கு, மக்களை தட்டி எழுப்பிட உதவிற்று. இந்த வழக்கு பன்னிரண்டு நாட்கள் நடைபெற்றது—வழக்கு மன்றத்திலே விவாதிக்கப்பட்டதை விடத் தீவிரமாக மக்கள் வீடுகளிலும் கடைவீதிகளிலும் இதுபற்றிப் பேசினர்.

நாடெங்கும் இந்தப் பிரச்னை எழுச்சியை உண்டாக்கிற்று. மாமன்றத்தின் தொல்லை இல்லை, நமது விருப்பப்படி ஆட்சி நடத்துகிறோம். இது நிம்மதியாக இருக்கிறது என்று எண்ணிக் களிப்படைந்த மன்னன், வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் மக்கள் உரிமை முழக்கமிடத் தான் செய்கிறார்கள் என்பதை அறிந்தான்—திருந்தினாே என்றால், இல்லை, மக்கள் இன்னும் திருந்தவில்லையே என்றெண்ணி வருந்தினான்.

மாமன்றம் முதலில் உரிமை முழக்கம் கிளப்பிய போதே, மன்னன் சார்பிலே பேசும் பிரமுகர் ஒருவர். "பல்வேறு நாடுகளிலே, மன்னர்கள், மாமன்றங்கள் வரம்பு மீறி நடந்துகொள்ளத் தொடங்கியதும், கலைத்து விட்டனர்; ஆட்சி, மன்னராலேயே நடத்தப்படுகிறது; இங்குதான் மாமன்றம் இருக்கிறது, இதையும் கெடுத்துக் கொள்ளாதீர்கள்" என்று எச்சரித்தான்.

"கேட்கும் தொகையைத் தந்துவிடுங்கள்; மாமன்றம் மன்னன் சொல் கேட்டு நடந்து, மதிப்புப் பெறட்டும்; வீண்பேச்சில் ஈடுபட்டு, பணம்தர மறுத்தால், காரியம் ஏதும் கெட்டுப்போகாது, பணம்பெற வேறு வழிகள் உள்ளன,, என்று மன்னனே மிரட்டினான்.

'மிரட்டுகிறேன் என்று எண்ணாதீர்கள் — எனக்கு ஈடானவர்களைத்தான் நான்மிரட்டுவேன், உங்களைஅல்ல' என்று ஏளனமும் ஆணவமும் குழைத்துக் கூறினான். வேறோர் சமயத்தில், வேந்தன்.

இவ்வளவு வெளிப்படையாக விபரீதப்பேச்சுப் பேசியதற்கு காரணம், சார்லசின் தனிப்பட்ட குணக் கேடல்ல, அவன் கொண்டிருந்த தத்துவம், அவனை அங ஙனம் ஆட்டிப்படைத்தது.

மன்னனிடம் படை இருந்தது; ஆனால் உடைகூடச்

சரியாகக் கிடையாது, போர்வீரருக்கு; பாசறைச் செலவுக்குப் பணம் இல்லை, அவர்களுக்குச் சம்பளம் சரிவரத்தரப்படுவதில்லை, இந்நிலையில் எப்படிப்பட்ட குணமுடையவர்கள் படையில் சேருவர், சேர்ந்த பிறகு அவர்கள் குணம் மேலும் எப்படிக்கெடும்! ஓநாய்கள் போலாயினர் மன்னன், தனிப்பட்டவர்களின் வீடுகளிலே, இந்தப் படை வீரர்கள், கட்டாய விருந்தினராக இருக்கலாம், என்று அனுமதித்தான்.

கண்ணியமான குடும்பம், கடைவைத்துப் பிழைக்கும் குடும்பம், சிறு பண்ணைவைத்துப் பாடுபடும் குடும்பம், இங்கெல்லாம், பதின்மர் இருபதின்மர், ஐவர், நால்வர், அறுவர், இதுபோலப் புகுவர், படைவீரர்கள் விருந்தளிக்க வேண்டும், பணிவிடை செய்யவேண்டும், வேண்டும் பொருளைத் தரவேண்டும்; வெறியாட்டமாடுவர், அதனை வேடிக்கையாகக் கருதிக்கொள்ள வேண்டும், கன்னியரைக் கட்டித் தழுவுவர், முதியவரை எட்டி உதைப்பர், கதவுகளைத் தூளாக்குவர் கண்ணாடிச்சாமானை உடைப்பர், காகாவெனக் கத்துவர் அதனை இசை என்று கொள்ளவேண்டும்! நாடு தாங்கிக் கொள்ளுமா? நல்லாட்சியில் இங்ஙனம் நடைபெறுமா? சர்க்காரிலேயோ சம்பளம் சரிவரத்தரப்படுவதில்லை, எனவே சிப்பாய்கள், சீரழிந்த குணத்தினராயினர், குடும்பம் பல கொடுமைக்கு ஆளாயின! முதியவர் கண்ணீர் சொரிந்தனர்; வாலிபர் சச்சரவிட்டுச் சித்திரவதைக்கு ஆளாயினர்; கன்னியர் கற்பிழந்தனர்; நாடு மதிப்பிழந்தது. மன்னன் இந்தக் காட்டு முறையைப் புகுத்துவதால் விளையும் கேடுபற்றி எண்ணிப்பார்க்கவுமில்லை. மன்னன் அமைத்துள்ள படையைக் காப்பாற்ற வேண்டியது மக்கள் கடமை என்று கருதினான், இந்த

ஒரு சம்பவம் மட்டும் போதும், நாட்டுமக்களைக் காட்டு மிருகமாக்க! எனினும், மக்கள் வரம்பு மீறிவிடவில்லை பொறுத்துக்கொண்டனர், பொழுதுவிடியும், பொல்லாங்கு மடியும் என்று நம்பிக்கிடந்தனர். யாரிடம் முறையிடுவது இந்தக் கேவலமான கேடுபற்றி! மாமன்றம் கூடினால், எடுத்துரைக்கலாம். ஆனால், மன்னன்தான் மாமன்றம் கூட்டவில்லையே! என்செய்வர்! ஏங்கினர், கண்கசக்கிக் கொண்டனர்!

கட்டாயக்கடன், பலவந்தமான விருது, காட்டுவரி, கப்பல்வரி, எனும் கொடுக்குகள் கொட்டும், மக்கள் துடியாத் துடிப்பர், கையில் பொருளும் இல்லையே என்று அழுவர்' பணம்தர 'இயலாதவரை, மன்னன் கட்டாயப் படுத்திப் படையில் சேரச்செய்வான், அல்லது வெளி நாடுகளுக்குத் துரத்துவான். கலாம் விளையும் என்று குறிதெறிந்தால், அல்லது தெரிவதாக எந்த அதிகாரி யாவது சொன்னாலும் போதும் இராணுவச் சட்டம் பிறக்கும், நில் அங்கே, யார் போகிறது? என்று மிரட்டும் குரல் கேட்கும், வேட்டுச்சத்தம். கீழே பிணம்! இந்த முறை அமுலுக்கு வந்துவிடும்.

லாட், வென்ட்ஒர்த், இருவரும் வகுத்த திட்டம் இது,

மன்னன், மாமன்றத்தின் உதவியை நாடித்தான் பணம் பெறமுடியும் என்ற நிலையை மாற்றிவிடவேண்டும்.

மக்களை எந்த நேரத்திலும் அடக்கிவிடக் கூடிய அளவு படை மன்னனிடம் இருக்கவேண்டும்.

சிலகாலம் இதுபோல நிலைமை நீடித்தால், அச்சம் பிடித்துக்கொள்ளும், உரிமை முழக்கம் மடியும், மன்னன் ஈடு எதிர்ப்பின்றி இருக்கலாம், சார்லஸ் கொண்ட தத்து வம், அழிக்கப்படமுடியாததாகிவிடும்.

ஆட்சியை எதிர்ப்பது பேராபத்து என்று உணரும் வகையில், தண்டனைகள் இருத்தல் வேண்டும்.

இந்தப் போக்குடன் இருவர்; நாடு, சீரழியாது போகுமோ! ஆனால் அந்த இருவரும், மன்னரும், கொடுமைகளைத் தாங்கிக் கொள்ளும் பழக்கத்தை, உரிமையின் அருமையை அறிந்த மக்கள் பெற்று விடுவது அணைக்கமுடியாத பெரு நெருப்பாகமாறிவிடும் என்ற உண்மையை அறியவில்லை, கண்ணீரைத் துடைத்துக்கொண்டு. கரத்தைக் காட்டி மன்னரின் சிரத்தைக் கிள்ளி எறியும் ஆற்றலை மக்கள் பெறுவர் என்பதை எதிர்ப்பார்க்கவில்லை. உலைக்கூடத்திலே, களத்திலே பிணங்கள் விழவும் கழுகுகள் கொத்தித் தின்பதற்காக வட்டமிடவுமான காரியத்துக்கு ஓர் நாள் பயன் படுகிறது! மக்கள் கொடுமைக்கு ஆளானது, அவர்களை அந்த நிலைக்குக் கொண்டுசெல்லும் என்பதை அவர்களால் யூகித்தறிய முடியவில்லை. தங்கள் திட்டம் வெற்றி பெறுவதாகவே எண்ணினர், ஏமாந்தனர்.

அளவுக்கு மீறிய அட்டகாசம் நடைபெறுகிறது, இதனால் ஆபத்து விளையும் என்று பிரபுக்கள் சிலர் மன்னனுக்கு இதமாக அறிவுரை கூறிப்பார்த்தனர், தோற்றனர். மாமன்றத்தைக் கூட்டாதது, மக்கள் மனதிலே பெருங் கோபத்தை மூட்டிவிட்டது என்பதை எடுத்துரைத்தனர், ஏளனம் செய்யப்பட்டனர். சிலர். உரிமை அழிந்து படுவதற்கு நாமும் உடந்தையாக இருந்தோம் என்ற பெருங்குற்றம் தம் மீது சாராதிருக்கவேண்டுமென்று கருதினர், மக்கள் சார்பிலே நிற்கத் தலைப்பட்டனர். ஆனால் எவரும் மிரட்சி அடையக்கூடிய விதமாக அடக்குமுறை இருந்தது.

வில்லியம்ஸ், என்ற்ரேர் மத அலுவலர், இவருக்கு

லாட் நடந்துகொள்ளும் முறை பிடிக்கவில்லை, வேற்று மையை வெளியிட்டார்!

பொறி தெரியும்போதே அழித்துவிடுவதல்லவா, லாட் கையாண்ட முறை: அப்படிச் செய்தால்தானே, பெரு நெருப்பு மூளாது என்று கருதினார். எனவே, வில்லியம்ஸ் நட்சத்திர மண்டலம் கொண்டுவரப்பட்டார், வழக்கு நடந்தது. தயாரிக்கப்பட்ட தீர்ப்பு படிக்கப் பட்டது, பத்தாயிரம் பவுன் அபராதம் விதிக்கப்பட்டது; சிறையும் கூடச்சேர்த்து!

வில்லியம்ஸ், சிறையில் இருக்கும்போது, அபரா தத்தை வசூலிப்பதற்காக அவர் இல்லத்தில் அரசாங்க அலுவலர்கள் புகுந்து, சாமான்களை எடுத்தனர், அப் போது வில்லியம்சுக்கு வந்த கடிதங்கள் சில கைப் பற்றப்பட்டன.

ஒரு ஏழை ஆசிரியர், வில்லியம்சுக்கு, எப்போதோ எழுதிய கடிதங்கள் அவை. "இந்த அற்பனை" "இந்தப் பஞ்சை" — என்று அக்கடிதத்தில் யாரைப் பற்றியோ குறைகூறி அந்த ஆசிரியர் எழுதியிருந்தார். இது, லாட் பற்றித்தான் எழுதப்பட்டது; எனவே சட்ட விரோதமான கடிதம்—எழுதினவர், கடிதம் பெற்றவர் இருவருக்கும் கடுந் தண்டனை விதிக்கவேண்டும் என்று உத்திரவு பிறந்தது, அதற்காக ஒரு எட்டாயிரம் பவுன் அபராதம் வில்லியம்சுக்கு. ஆசிரியரை அவர் பள்ளிக்குஎதிரிலேயே நிறுத்தி, தொழுவத்தில் மாட்ட உத்தரவாயிற்று. கொடுங் கோல் மன்னன் போலக் கடும்புலியும் கேடு செய்யாது என்று எண்ணிய ஏழை ஆசிரியர், நாட்டைவிட்டே ஓடி விட்டார்.

அனைவரும் அந்த ஏழை ஆசிரியர்போல இல்லை; சித்தம் குழம்பவில்லை.

லில்பர்ன் என்றோர் எழுத்தாளன் 'ராஜத்துரோக' மாக எழுதினுன் என்று வழக்குத் தொடுக்கப்பட்டது. முச்சந்தியில் நிறுத்தப்பட்டு, அவன் கழுத்தை ஒரு பலகைக்குள்ளே புகுத்தித் தண்டித்தனர்! இது கேவலப் படுத்துவதற்காக இருந்துவந்த தண்டனை முறை. சிறு கூட்டம் அவன் எதிரே கூடிற்று! அந்த நெஞ்சமுத்தக் காரன் அங்கு நின்றபடியே, அரசாட்சியிலே உள்ள கேடு களையும் ஊழல்களையும் விளக்கலாஞன்! வெட்கப்பட்ட அதிகாரிகள், அவனைச் சிறைக்குள் போட்டு மூடினர். அரசாங்கத்தின் மானம் பறிபோகும் என்ற அச்சத்தால். சிறையிலே லில்பர்ன், பட்டினி கிடந்து சாகட்டும் என்று விட்டுவிட்டனர்; உடனிருந்த கைதிகள், தங்களுக்குத் தரப்பட்ட உணவில் சிறிது சிறிது கொடுத்து. உயிர் பிழைக்க வைத்தனர். இவ்வளவு கொடுமைக்கு ஆளான லில்பர்ன், இருபதாண்டு நிரம்பிய வாலிபன்! மக்கள் எவ்வளவு உருகியிருப்பர். அவன்பட்ட கொடுமை கண்டு! அந்தக் கண்ணீர், வலுவுளிக்கும் மாமருந்து. என்பதை மமதையாளர் உணரவில்லை.

பிரையின் என்றோர் வழக்கறிஞர் சன்மார்க்கத்தைக் கட்டிக் காப்பாற்ற வேண்டும் என்பது அவர் நோக்கம். சன்மார்க்கத்தை ஆடல் பாடலாகிய களியாட்டங்கள் குலைத்து விடுகின்றன. ஒழுக்கத்தைக் கெடுக்கின்றன என்று எண்ணினுர். ஆடல்பாடல் மிகுந்த நாடகங்கள். பிரான்ஸ் நாட்டிலிருந்து பிரிட்டனுக்குப் பரவின. அரச னும் அரசியும் அவைகளை ஆதரித்தனர். பிரையின். இக்காரணம் பற்றியும் வெறுப்புற்றுர். எனவே இவை களைக் கண்டித்து நூலொன்று வெளியிட்டார். அவரு டைய இந்த நூலினுல். என்ன கெடுதல் ஏற்பட்டுவிடும்! ஒழுக்கத்தை வளர்க்கும் நாடகங்கள் தேவை, வீண் -

காமக் களியாட்டங்கள் கேடானவை என்ற எண்ணம் வளரும். மனிதனைக் கெடுப்பது, ஆடல் பாடல் அல்ல; கெட்டவன் ஆடல் பாடலைத் தன் கெடுமதிக்குத் தக்க வண்ணம் பயன்படுத்திக் கொள்கிறான். மற்றவர், மன மகிழ்ச்சிக்குப் பயன்படுத்திக் கொள்வர், என்று அவருக்கு விடை அளித்திருக்கலாம். ஆனால், அடக்குமுறை ஆட்சியல்லவா!

பிரையின், வழக்கு மன்றத்தில் நிறுத்தப்பட்டார். 5000–பவுன் அபராதம்; வழக்கறிஞர் வேலைக்கு ஏற்றவராகார் என்று தண்டனை; காதுகளை வெட்டிவிடும்படி உத்தரவு; இறுதியாக, ஆயுள் தண்டனை!

அக்ரமம் இதைவிட வேறெப்படி இருக்கமுடியும்? தன் கருத்தை வெளியிட்டார். கலைத்துறை பற்றிய கருத்து! அரண்மனைக்குள் புகுந்து அக்ரமம் புரியும் மன்னனை வெட்டச் சொல்லி அல்ல, கொள்ளை அடிக்கும் அதிகாரிகளைக் குத்தச் சொல்லி அல்ல, சதிபுரியச் சொல்லியுமல்ல. சமர் மூட்டியுமல்ல, சன்மார்க்கம் தழைக்க அவர் கருதிய வழி இதுஎனக் கூறினார். இது கொலையைக் கொள்ளையை, பலாத்காரத்தை, பயங்கரத்தை, ராஜத் துரோகத்தை, மதத்துரோகத்தை மூட்டக் கூடியதல்ல, சிந்தனையைக் கிளறி, சீரழிவைத் தடுக்கக் கூடிய ஏடு. இதற்காக, ஆயுள் தண்டனை! காதுகளை வெட்டி விடுவது!

இந்தக் கடுந் தண்டனை தருவதற்காக, எப்போதோ ஒரு நாளில், மூன்றும் எட்வர்டு எனும் மன்னன் காலத்தில் இயற்றப்பட்டு, உபயோகப்படுத்தப்படாததால் துருப்பிடித்துப் போய்க்கிடந்த ஒரு சட்டத்தை எடுத்து வீசினர்.

பேசினர் எஸியட்—சிறையில் மாண்டார்! அவராவது ஆட்சியை எதிர்த்தார். இவர் ஆட்சியைக்கூட எதிர்க்க வில்லை, ஆனால் ஆயுள் தண்டனை. எவ்வளவு பேருடைய உடலும் உள்ளமும் பதறிப்போயிருக்கும், இந்தக் கடுந் தண்டனை பற்றிக் கேள்விப்பட்டபோது. இப்படியும் ஒரு ஆட்சியா! என்ற எண்ணம் எவர் உள்ளத்தில்தான் எழாமலிருக்கமுடியும்!

ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட அந்த அஞ்சா நெஞ்சினன், உறுதியைத் தளரவிடவில்லை. இந்த அக்ரம ஆட்சியில் இது எதிர்பார்க்கப்படவேண்டியதே என்று எண்ணினர். சிறையினின்றும் கூட, லாட்போன்ற மார்க்கத்துறையினர் நடாத்தும் அக்ரமத்தைக் கண்டித்து எழுதி வந்தார்!

மனமார நம்பும் கொள்கையின்படி, வாழ இது இனி இடமல்ல, என்று கருதியபலர், பிரிட்டனைவிட்டே சென்றுவிட்டனர்; சிறப்பாக, தூய்மையாளர் என்றமதப் பிரிவினர், கடல் கடந்து, தூர நாடுகள் சென்று வாழலா யினர். சிலர் மட்டும், அடக்கு முறையின் கூர்மழுங்கு மளவு, மார்காட்டி நின்றுகவேண்டும் என்ற துணிவுடன் பணியாற்றினர்.

சிறைக்குள் இருந்தவண்ணமும் எழுதிக்கொண் டிருந்த பிரையினுக்கு, மேலும் ஓர் தண்டனை தரப் பட்டது; ராஜத் துரோகி, நிந்தனை கூறுவேன் என்ற பொருள்பட எஸ். எல். என்ற எழுத்துக்கள் அவருடைய கன்னத்தில், சூடிட்டுப் பொறித்தனர்! நெடுந்தூரச் சிறைக்குத் துரத்தினர் மூவரையும்! மக்களோ அம் மூவருக்கும் தமது நெஞ்சில் இடமளித்துப் போற்றினர். சவுக்கடி தந்தனர் மூவருக்கும்; மக்கள், தங்கள் இதயத்தை மன்னன் சவுக்கால் அடிக்கிறன், எழுத்தாளர்

களை அல்ல, என்று எண்ணினர், கதறினர், பதறினர்; இந்தக் கொடுமையைக் களையும் காலம் எப்போது பிறக்கும் என்று கேட்டனர்.

கண்டவர்கள் கண்டபடி புத்தகங்களை அச்சிட்டு வழங்குவதால், அரச ஆதிக்கத்துக்கு ஆபத்து விளைகிறது என்று கூறி, அச்சகங்கங்களை அரசாங்கம் கண்காணிக்கலாயிற்று. மன்னராட்சிக்கு எதிராக ஏதும் செய்யாதவர்கள் என்று உறுதி கிடைத்த பிறகு, இலண்டனில் இருபது அச்சகக்காரர், இயங்க அனுமதிக்கப்பட்டனர். அவர்களன்றி வேறு யாராவது அச்சிட்டாலும், வேறு நாடுகளிலே அச்சடித்துக்கொண்டு வந்தாலும், கடுந்தண்டனை என்று உத்தரவு வெளியிடப்பட்டது.

மக்களிடம் உரிமைக் குரல் எந்த விதத்திலும் உலவக்கூடாது, என்று திட்டமிட்டு வேலை செய்தனர்.

கத்தோலிக்க மார்க்கத்தைச் சார்ந்த எனிரிட்டாவை, சார்லஸ் திருமணம் செய்துகொண்டதே, மக்களை ஏற்கனவே மிரட்சி அடையச் செய்தது. அந்த மிரட்சி மேலும் அதிகமாகும் சம்பவம் வேறு நடைபெற்றது.

பக்கிங்காம் இறந்த பிறகு, எனிரிட்டா கணவனுடன் குதூகல வாழ்க்கை நடத்திவர முடிந்தது. சார்லஸ் வேறு சில மன்னர்கள் போல, கட்டழகிகளைத் தேடித்திரியும் காமாந்தகாரனல்ல, துணைவியிடம் நிரம்ப அன்பு கொண்டவன், எனவே, எனிரிட்டாவின் செல்வாக்கு வளர்ந்தது. எனிரிட்டா, பதினைந்தாண்டுப் பாவையாகப் பிரிட்டன் வந்தபோது, பிரச்னைகள் புரியவில்லை, இப்போது, கூர்மையான அறிவும் அரசியலில் செல்வாக்குச் செலுத்தவேண்டும் என்ற ஆர்வமும் கொள்ளமுடிந்தது. மக்கள்; எனிரிட்டாவின் செல்வாக்கின் காரணமாக கத்தோலிக்க மார்க்கத்தை எங்கே மீண்டும் புகுத்தி

விடுகிருனே என்று கிலி கொண்டனர். மன்னனுடைய போக்கைக் கண்டுவந்தவர்களுக்கு, இதுவும் நடைபெறக் கூடும் என்றே தோன்றிற்று, அந்தத் திகில் அதிக மாவதற்குத் துணை செய்வதுபோலவே, பல நிகழ்ச்சிகள் இருந்து வந்தன.

போப்பாண்டவரால், எனிரிட்டா மூலம், பிரிட்டிஷ் கத்தோலிக்கர்களுக்குச் சில சலுகைகள் பெற்றுத் தர முடிந்தது. எனிரிட்டாவின் ஆதரவில் நடந்துவந்த தொழுகைத் தலத்தில், கத்தோலிக்கர் கூடித் தமது மார்க்க முறைப்படி தொழுகை நடத்தலாயினர். செல்வமும் செல்வாக்கும் படைத்த கத்தோலிக்கக் கனவான்கள், அரசின் துணைகொண்டு, இழந்த இடத்தைப்பெற்று போப்பாண்டவரின் 'பாததூளி' பிரிட்டிஷ் மண்ணிலே விழச்செய்ய இயலும் என்று நம்பிக்கை கொண்டனர்.

போப்பாண்டவரின் பிரதிநிதியாக பான்சானீ என்பவர் பிரிட்டனில் தங்கி, அரசியின் ஆதரவு பெற்று. கத்தோலிக்க மார்க்கத்தை மீண்டும் புகுத்த முயற்சித்தார். இந்த முயற்சியைப் பான்சானீக்குப் பிறகு கான் என்பவர் தொடர்ந்து நடத்திஞர்; மக்கள் மருண்டனர்; லாட்கூட மருட்சி அடைய நேரிட்டது; மன்னனை லாட் எச்சரித்தார், மன்னன் யார் பக்கம் பேசுவது என்று தெரியாமல் திணற நேரிட்டது, மன்னனின் எதேச்சாதிகாரத்தைத் தடுத்திடாவிட்டால், கத்தோலிக்க மார்க்கத்தையும் சுமந்து தீரவேண்டி நேரிடும் என்று மக்கள் பயந்தனர்—பெரும்பாலோர், பிராடெஸ்ட்டென்டுகள்!

வென்ட்ஒர்த், பிரிட்டனில் அமுல்செய்ததுபோலவே ஐயர்லாந்துசென்று, அரசன் ஆணையை நிலைநாட்டினன். முறைகள் ஒரேவிதம், ஆனல் கடுமை மிக அதிகம். ஐயர் லாந்திலே, குடிஏறிக் கொட்டமடித்துவந்த பிரிட்டிஷா

ருக்கும், நிலமிழந்து நொந்துகிடந்த ஐயர்லந்து வாசிகளுக்கும் பூசல், பிரிட்டிஷாருக்கும் ஸ்காத்லந்துக்காரருக்கும் சச்சரவு, கத்தோலிக்கருக்கும் பிராடெஸ்ட்டென்டுகளுக்கும் போர்! வென்ட்ஒர்த இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்திக்கொண்டு கொடுங்கோலனுனன்.

ஐயர்லாந்தில் வென்ட்ஒர்த், அடித்து நொறுக்குகிறன், அரச ஆதிக்கத்தை வளரச் செய்கிறன். மக்கள் மடிந்தாலும் மன்னனுடைய நிலை உயரவேண்டும் என்று வேலை செய்கிறன். பிரிட்டனில் லாட், மார்க்கத்துறையின் செல்வாக்கு அனைத்தையும் மன்னன் சார்பிலே திருப்பி விடுவதுடன், அடக்குமுறையால், உரிமைக் கிளர்ச்சியை கருவறுத்த வண்ணமிருக்கிறன். வேங்கைகளால் துரத்தப்படும் மானினமாயினர் மக்கள்! துள்ளி வருகுது வேல்! என்று கூறும் நாள் வரவில்லை! இரத்த வெறிபிடித்தலையும் வேங்கைகள், தம் இனத்தவரின் உடல் சின்னபின்னமாக்கப்படுவது கண்டு, மிரண்டு ஓடும் மானினம்! நாடு, காடு ஆயிற்று! இந்நிலையில், வேங்கைகளை வெந்து கருகிடச் செய்யவல்ல, பெரு நெருப்பை, மன்னனே மூட்டிட நேர்ந்தது — தெரிந்து அல்ல.

மன்னனுடைய போக்கு பிரிட்டனில் எளிதாகப் புகுத்த முடிந்ததுபோல, ஸ்காத்லாந்தில் இயலவில்லை. மலைகளும் சிறு குன்றுகளும், இவைகளுக்கிடையே அமைந்த சிற்றூர்களில் வாழ்ந்துவந்த ஸ்காட் மக்கள் வீராவேசம் குன்றமல் வாழ்ந்து வந்தனர். எளிய வாழ்க்கை கடும் உழைப்பு. சாவுக்கு அஞ்சாத நெஞ்சத்தினர், நாடு வளமாகாததால், பலர் வெளிநாடுகளில் சென்று, படை வீரராகி கீர்த்திமிக்கவராயினர். இந்த ஸ்காத்லாந்து நாட்டை, சார்லஸ் குத்திப்பார்த்தான்—குலை நடுக்கமெடுக்குமளவுக்குப் பகை கக்கினர்.

மார்க்கத் துறையிலே, மன்னன் வற்புறுத்திய முறையை ஏற்க, ஸ்காத்லாந்து மக்கள் பிடிவாதமாக மறுத்து விட்டனர். "என் ஆணைக்கா எதிர்ப்பு" என்று மன்னன் ஆர்ப்பரித்தான். "எமது கொள்கையை இழக்கமாட்டோம்" என்று மக்கள் முழக்கமிட்டனர். மன்னன், "போர்" என்ருன், மக்கள் "தயார்" என்றனர்! மன்னன் தான் தயாராக முடியவில்லை, பணமில்லை!!

ஆண்டொன்றுக்கு 835,000 பவுன் தேவை என்றனர் படைத்தலைவர்கள். 30,000 பேர் வீரர்களாவது தேவை, மலைவாசிகளான ஸ்காத்லாந்துக்காரரை முறியடிக்க! இந்தப் பெருந்தொகையைப் பெறுவது எங்ஙனம்? பழைய சங்கடம் மீண்டும் தலைதூக்கிற்று. சூள் உரைத்து விட்டான் மன்னன், ஸ்காத்லாந்துக்காரரை அடித்து நொறுக்கி அறிவு புகட்டுவதாக; பணம்? மன்னன், திண்டாடினுன்.

அங்கே, ஸ்காத்லாந்தில், தாயகத்தைக் காக்க வீரப் படை திரண்டுவிட்டது. பல ஆண்டுகள், ஸ்வீடன் நாட்டிலே போர்ப்பயிற்சி பெற்றுச் சிறந்து விளங்கிய லெஸ்லீ என்பான், தாயகத்துக்கு ஆபத்து என்பதறிந்து வெளிநாட்டிலிருந்து, தாயகம் வந்து சேர்ந்தான், தணலென்று ஆகிவிட்டது, வீரம்; எண்ணற்ற வீரர்கள்! எதற்கும் அஞ்சாத துணிவு! மக்கள், பெண்டிர் உள்பட, படை எடுப்பை முறியடிக்கக்கூடும் பணியாற்றினர்.

ஸ்காத்லாந்து நாட்டுப் பிரபுக்களில் ஒருவர், ஹாமில்டன்—இவர் சார்லஸ் சார்பில்.

இவர் ஒரு பிரிவுப்படையுடன் ஸ்காத்லாந்து செல்வது என்ருல், வேருேர் பிரிவு வேறு பக்கமிருந்து செல்வது என்றும் ஏற்படலாயிற்று. ஹாமில்டன் சென்ருர், தாயகத்தின் போர்க்கோலத்தையே கண்டார்! காலடி எடுத்து

வைத்தால் சுட்டுக் கொன்றுவிடுவேன் என்று வீரமும் நாட்டுப் பற்றும் வீறிட்டெழும் உள்ளத்துடன் கூறிக் கொண்டு, கையில் துப்பாக்கியுடன் காட்சி தந்தார், ஹாமில்டனின் அன்னை.

ஓடினான் மன்னனிடம், விபரீதமாகிவிடும், வேண்டாம் இச்சமர், பகையை விடுக, என்று மன்றாடினான், மன்னன் மயங்கினான்—சமரசப் பேச்சுக்கு இடமளித்தான். ஆனால், வென்ட்ஓர்த் விடவில்லை; தூண்டினான்; ஒரு கை பார்த்தே ஆகவேண்டும்; ஸ்காத்லாந்து மக்களுக்கு இப்போது பணிந்துவிட்டால், நாளை பிரிட்டிஷ் மக்களும் கிளம்பிவிடுவர், எனவே சமரிட்டே ஆக வேண்டும் என்று வலியுறுத்தியதுடன், மாமன்றத்தைக் கூட்டி, போர் இருக்கும் காரணத்தைக் காட்டி, பணம் பெறலாம், என்ற யோசனை கூறினான். பேழையைத் திறந்தால் பெரும் பொருள் கிடைக்கும் என்று மன்னனிடம் வென்ட்ஓர்த் கூறினான். ஆனால் அந்தப் பேழையில் இருந்தது என்ன? வஞ்சம் தீர்த்தாகவேண்டும் என்ற உறுதி காட்சி அளித்தது.

மக்கள் சார்பாகப் பேசி, வீடெல்லாம், நல்லோர் நெஞ்சமெல்லாம் நிரம்பியிருந்த பிம் ஆளும் முறையாக அமர்ந்தான் மாமன்றத்தில்; நாட்டைக் கலக்கிய வழக்குகளை நடாத்திய ஹாம்டன் அரச வழக்கறிஞர்களைத் திணறடித்த அறிவாற்றல் மிக்க செயிண்ட்ஜான், அனைவரும் மாமன்றத்தில், தேர்தல் மூலம் உறுப்பினராயினர்! மன்னனுடைய கோபத்துக்கு ஆளானவர்களை மக்கள் மலர்மாரி பொழிந்து வரவேற்கிறார்கள். மாமன்றம் கூடிற்று, மன்னனுக்கு முடிவுகட்ட! பதினோராண்டுகள் மாமன்றம் கூட்டாமலேயே ஆளமுடியும் என்று எண்ணியிருந்த சார்லஸ், நெருக்கடி நேர்ந்ததும், மாமன்றத்தைக்

கூட்டித்தான் கரைசேர வேண்டும் என்று எண்ணினன் —இஃதொன்றேபோதாதா மாமன்றத்தின் வலுவை விளக்கிட, என்று மக்கள் கூறிக்கொண்டனர். பதினோராண்டுகளாக நடைபெற்ற அடக்குமுறை ஆட்சி, மாமன்றத்தின் முன்பு விசாரணைக்குவந்து நிற்கும்! மக்களைக் கசக்கிப் பிழிந்து, சிறையில் தள்ளி, வெளிநாடுகளுக்குத் துரத்தி சித்திரவதைசெய்து, ஆட்சி தன் நிலையைக் காப்பாற்றிக் கொள்ள முனைந்தது. மக்கள் பயந்தனர், பணியவில்லை! அடக்கு முறை தலைவிரித்தாடிற்று, எனினும் அடிமை மனப்பான்மை ஏற்பட்டுவிடவில்லை. அஞ்சா நெஞ்சினர், சரண்புகுந்து வாழ்வதை, சாவைவிடக் கொடியது என்று கருதினர்—எலியட்டுகள் எத்துணை லில்பர்ன்கள் பலப்பலர்! இவர்களுக்கு ஆட்சியாளர் இழைத்த கொடுமைகளுக்கெல்லாம் பதில் கூறித் தீர வேண்டும். மாமன்றம் நோக்கிவருகிறன் மன்னன், திருவோடு ஏந்தியபடி! அவன் சிரத்தில் முடி இருக்கிறது, கரத்தில் சிறைக் கதவின் திறவுகோல் இருக்கிறது, அவரைச்சூழ இருக்கின்றன மக்களைக்கடித்துக் கொடுமை செய்யும் வேட்டை நாய்கள்! மன்னன், மாமன்றத்தை நாடுகிறன்! இந்த மன்றமின்றி ஆட்சி நடவாதோ! என்று ஏளனப் புன்னகையுடன் கேட்ட மன்னன் வருகிறன். ஸ்காத்லந்து மக்களால் கிளம்பியுள்ள கடும் போரை, லாட் அறிந்துள்ள வெறிச் செயலும், வெண்ட்ஒர்த்துக்குப் பழக்கமான அடக்கு முறையும் ஒழித்துவிடாது—மக்களின் ஒத்துழைப்பு வேண்டும், அதனைப் பெற்றுத்தர மாமன்றத்தால் மட்டுமே முடியும்! மன்னன் மாமன்றத்தை நாடுகிறன், மாமன்றம் மன்னராட்சி முறைபற்றி மக்கள் கொண்டுள்ள கருத்தை எடுத்துரைக்கும். மன்னன் தோல்விப்பாதையிலே காலடி எடுத்துவைக்கிறன், மக்களின் துணையின்றி பகைமுடிப்பது முடி

யாது என்பதை உணருகிருன். கிள்ளுக் கீரை யல்ல மக்கள், அரசுக்குப் பேராபத்து ஏற்படும்போது, அதைத் தடுக்கும் ஆற்றலைத் தரவல்லவர்கள்! அரசன் இதைச் சாதாரண நாட்களிலே ஏற்க மறுத்தான், ஸ்காத்லந்து மக்கள் போரிடத் துணிந்தனர். உண்மையை உணரவேண்டிய கட்டத்துக்கு மன்னன் வந்திருக்கிருன். வாழ்க ஸ்காத்லந்து மக்கள்! என்று கூறிப் பூரித்தனர் மக்கள். மாமன்றம் கூடுவதை, நாடு பெரியதோர் வாய்ப்பு என்று என்று எண்ணியதில் தவறென்ன!

அடக்குமுறையினுல் உள்ளம் நொறுங்கிப் போயிருக்கும், பதிஞேராண்டுக் காலம் சட்டை செய்யாதிருந்ததால் மாமன்றத்தார் மனம் உடைந்து போயிருப்பர், கேட்ட தொகை தரச் சம்மதிப்பர், போடும் வரியைக் கட்டும்படி மக்களுக்குக் கூறுவர், மேலும் நாடு போரில் ஈடுபட்டிருக்கிறது, ஸ்காத்லாந்துக்காரர் படைகொண்டு வருகின்றனர், பிரிட்டன் மீது பாய்கின்றனர், எனவே நாட்டைக் காக்கவேண்டும் என்ற ஆர்வம் காரணமாக, எவ்வளவு கஷ்ட நஷ்டமும் ஏற்க மாமன்றம் இசையும், இந்த நேரத்தில், மன்னனுக்கும் மாமன்றத்துக்கும் முன்னம் மூண்டுகிடந்த பகையை மறந்துவிடுவர், நாட்டுப்பற்று வீறிட்டெழும், என்ற எண்ணம்கொண்டான் மன்னன்— அவன் உடனிருந்து, ஊறுதேடிய உலுத்தர்கள், இக் கருத்தினையே அவனுக்கு ஊட்டினர். மாமன்றம் கூடுவது, காட்டிய இடத்தில் கையொப்பமிட அல்ல, பூட்டிய இருப்புக்கூட்டின் கதவு திறந்ததும் வெளிவரும் சிறுத்தை அது! வளைந்தும், சிறிது ஒடிந்தும், பிடி கழன்றும் முடி அற்றும் உள்ள போர்க் கருவிகள் கொண்ட படையைக் காணும், ஏமாளி, "கருவிகளின் அழகு காணீர்! ஓட்டை ஒடைசல்கள்! இப்படை என்னசெய்யும்" என்று எண்ணு

வான், ஆனால் கூர்த்த மதிபடைத்தோனோ, "இவர்கள் போர் பல கண்டவர்கள், ஆற்றல் மிக்கவர்கள், இவர்கள் கொண்டுவரும் படைக் கருவிகளே இதற்குச் சான்று" என்று கண்டறிவான். அதுபோன்ற, சவுக்கடிபட்டவனும் சொத்துப் பறிகொடுத்தவனும், தொழுவத்தில் மாட்டப் பட்டவனும், துரத்தி அடிக்கப்பட்டவனும், பெரும் பொருள் அபராதம் கொடுத்தவனும், சிறையில் உழன்ற வனும், மாமன்ற உறுப்பினரானது கண்டு, ஆட்சியாளர் என்னென்ன செய்யமுடியும் என்று தெரிந்தவர்கள் இவர் கள், அல்லலை அனுபவித்தவர்கள், நெருப்புச் சுடும் என் பதைத் தெரிந்துகொண்டவர்கள், எனவே இவர்கள் மீண் டும் வாதிட்டுப் போரிட்டு அவதியை வரவழைத்துக் கொள்ளமாட்டார்கள், நல்லவர்களாகிவிட்டவர்கள், என்று மன்னன் எண்ணியிருப்பான்; உண்மையோ அது அல்ல, கொடுமைகளைத் தாங்கிக்கொள்ளும் உள்ளம் படைத்தவர்கள், எனவே எதற்கும் இனி இவர்கள் அஞ் சப் போவதில்லை என்பதுதான் உண்மை. இதை மன்னன் உணர முடியவில்லை துவக்கத்தில்.

மாமன்றம் கூடிற்று, மன்னன் சார்பில், போர்ச் செல வுக்காகப் பெருந்தொகை தேவை என்று எடுத்துக்கூறப் பட்டது. இதைக் கேட்டுக்கொள்ளவா மாமன்றம்கூடிற்று. பதினோராண்டுகளாகச் சேர்ந்துள்ள பழங்கணக்கைக் கொண்டுவந்து, மாமன்றம், ஏடேடாகப் புரட்டி விவா திக்கலாயிற்று. பிம், மாமன்றத்திலே, உரிமைபற்றி அரிய தோர் சொற்பெருக்காற்றி, உணர்ச்சிவயத்தவராக்கினார், மாமன்றத்தை மட்டுமல்ல, மக்களையே! மக்கள் பணி யிலேயே காலமெல்லாம் செலவிட்டு, சொந்த வாழ்க்கை தொடித்துப் போயிருப்பவர் பிம். அவருடைய வீர உரை, மாமன்றத்துக்குப் புது உறுதி தந்தது.

எலியட் சிறையில் மாண்டார்! மக்களுக்காக உழைத்த மாவீரனைச் சிறையில் தள்ளிச் சாகடித்தனர். இந்தப் பாதகப் படுகொலைக்கு என்ன சமாதானம் கூற முன்வருகிறார்கள், ஆட்சியாளர்கள்.

கப்பல்வரி என்ற பெயரால் பெரும் பொருளை மக்களிடமிருந்து அடித்துப் பிடுங்கினார்கள் ஆட்சியாளர்கள்—இந்த அக்ரமத்துக்கு என்ன சமாதானம்?

கப்பல் வரி கட்ட மறுத்த ஹாம்டன் மீது வழக்கு. வழக்கிலே, மக்கள் உரிமைக்கும் நீதிக்கும் விரோதமாகத் தீர்ப்பளித்தனர் நீதிபதிகள்! நீதி இங்ஙனம் நெறி தவறுகிறது. இதற்கு என்ன சமாதானம்?

படைவீரரை, வீடுகளிலே கட்டாய விருந்தினராக்கும் முறையால் நேரிட்ட கொடுமைகளுக்கு என்ன பரிகாரம்? கண்ணீர் துடைக்கக் காவலன் முன்வருவானா?

வெளிநாடுகளுக்குத் துரத்தப்பட்டவர்கள் சார்பிலே, வெஞ்சிறையில் செத்தவர் சார்பிலே, அழுத கண்ணீருடன் நிற்கும் மக்கள் சார்பிலே, வீர மரணமடைந்த எலியட்டின் சார்பிலே, பிம் பேசினார்—அல்ல, அல்ல, எழுச்சி பெற்ற மக்கள் முழக்கமிட்டனர்.

கூட்டியது பணம் கேட்க, இவர்கள் குற்றப் பட்டியலல்லவா தயாரிக்கிறார்கள். இவ்வளவு அல்லல் பட்டும் இவர்களுடைய துடுக்குத்தனம் பட்டுப்போகவில்லையே, என்று மன்னன் எண்ணினான். கூடினோம், கணக்குக் கேட்க! பரிகாரம் தேவை! கப்பம் கட்டக்கூடவில்லை, கழுவாய் தேடும்படி கட்டளையிடக் கூடியுள்ளோம் என்று மாமன்றம் எண்ணிற்று.

பிரபுக்கள் சபைக்கும், பிம் ஒரு வேண்டுகோள் விடுத்தார்,

மக்களின் உரிமைகளை நசுக்கும் ஆட்சி முறையைக் கண்டிக்க முன்வருக! மன்னனிடம் உள்ள கொடியவர்களை அகற்றிவிடும்படி அறிவுரை தருக! என்று பிம் கூறினர்.

மன்னனோ, "பணம்! பணம்!" என்று கேட்டவண்ண மிருக்கிறான்—ஆட்கள் அவசர அவசரமாக வருகிறார்கள், "உரிமை பற்றிப் பிறகு பேசுங்கள்; இப்போது பணம் தேவை" என்கிறார்கள். "முதலில் உரிமைப் பிரச்னை" என்று உறுதியாக மாமன்றம் கூறிவிட்டது.

மன்னன் பிரபுக்கள் சபைக்குச் சென்றான், மாமன்றத்தின் போக்கைக் கண்டித்தான், "அந்த மதியிலிகளுடன் கூடி நீவிரும் பாழாகாதீர், பெரும் போருக்குத் தேவையான பணம் கிடைக்க வழி செய்யுங்கள்" என்றான். பிரபுக்கள், மன்னனே நேரில் 'பிரசன்னமாகி'க் கேட்கும்போது, மறுப்பது கண்ணியமாகாதே என்று மழுப்பினர். மாமன்றம், "இனம் இனத்தோடும் சேரும், வேறென்ன!" என்றனர். நெருக்கடி முற்றும்போது, பிரபுக்கள் அரசன் பக்கம்தான் நிற்பர் என்று மக்கள் முடிவு செய்தனர்.

கப்பல் வரி செல்லுபடியாகக்கூடியதுதான் என்று அளிக்கப்பட்ட தீர்ப்பை ரத்து செய்யவேண்டும் என்று மாமன்றம் கூறிற்று. மன்னன் அதை வேண்டுமானால் செய்கிறேன், பணம் எவ்வளவு தருகிறீர்கள்? என்று கேட்டான். "பணம் தருவதற்கும் அநீதியைத் துடைப்பதற்கும் முடிபோட்டுப் பேசலாகாது" என்று மாமன்றம் கூறிற்று. கப்பல் வரி கட்டமுடியாது என்று வழக்காடிய ஹாம்டன் இருக்கும், மாமன்றம், மன்னனுடைய மிரட்டும் மொழிக்கோ, மயக்கு மொழிக்கோ இடம் அளிக்குமா! மன்னன், மாமன்றத்தை ஏன் கூட்டினோம் என்று ஆயாசப்பட்டான். முறிந்துபோகும் நிலை நன்றாகத்

தெரியலாயிற்று, மன்னனுடைய கோபம் மேலும் வெடிக்கும்பட்டி, மாமன்றம் ஒரு தீர்மானம் நிறைவேற்றிற்று.

மாமன்றத்தை மன்னன் கூட்டியது, ஸ்காத்லாந்துப் போர் நடாத்தப் பணம் தேவை என்பதற்காக; மாமன்றம் உடனடியாக ஸ்காத்லாந்துக்காரருடன் சமாதானம் செய்துகொள்ள வேண்டும் என்று தீர்மானித்தது. மன்னனுல் இதைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

எவ்வளவு ஆணவம் இந்த மாமன்றத்தாருக்கு! என் ஆணையை மீறும் ஸ்காட் மக்களைத் தண்டிக்கப் போர் தொடுக்கிறேன், மன்னனுடைய கீர்த்தியைக் காப்பாற்றப் பொன், பொருள் தந்து, படையில் குதித்து இரத்தம் கொட்டி வெற்றி தேடித்தர முன்வர வேண்டிய மக்கள், சமர் கூடாது என்று எனக்கா புத்தி கூறுவது? எவ்வளவு மண்டைக்'கர்வம்! மன்னனின் மகிமை அறியாத மண்டூகங்கள்! என்றெல்லாம் எண்ணியிருப்பான் மன்னன், அவன்தான், பாவம், ஒரு அர்த்தமற்ற, ஆனுல் ஆபத்தான தத்துவத்தால் ஆட்டிப் படைக்கப்பட்டவனுயிற்றே! மாமன்றத்தைக் கலைத்துவிட்டான்! மூன்று கிழமைகளே மாமன்றம் நடைபெற்றது! கலைத்துவிட்டான், காவலன்! இந்தக் குறுந்தொகை பிறகு நெடுநல்வாடையாகப் போவதை மன்னன் கண்டானு!!

"கூடினுேம்—கலைந்து செல்கிருேம்; மீண்டும் கூடுவோம்; அப்போது, இழைக்கப்பட்ட கொடுமைகளுக்குச் சமாதானம் கேட்க அல்ல, பழிதீர்த்துக்கொள்ளக் கூடுவோம்" என்று எழுச்சியுடன், உரைத்தார் செயின்ட் ஜான், எனும் மாமன்ற உறுப்பினர். அவர் கூறியது உண்மையாயிற்று.

மாமன்றம் கூடுகிறது, கொடுமை களையப்படும் என்று எதிர்பார்த்திருந்த மக்களுக்கு, மன்னன் செயல்

மிகுந்த கோபத்தை மூட்டிற்று. தலைவர்கள் முன்வந்தால், இரத்தப் புரட்சிக்கே மக்கள் தயாராகிவிடுவர். நிலைமை அங்ஙனம் இருந்தது. ஆத்திரங்கொண்ட மக்கள் சிறுசிறு கலாம் விளைவிக்காமல் இல்லை. ஆத்திரத்தைக் குறைத்துக்கொள்ள, வேறு மார்க்கமில்லை. ஐந்நூறுக்கு மேற்பட்ட மக்கள், லாட் மாளிகையைச் சூழ்ந்துகொண்டனர்; துருப்புகளைவிட்டுத்தான் அடக்க முடிந்தது.

ஆயிரக் கணக்கானவர்கள் அரசன் ஆணையை நிறைவேற்றும் நீதிமன்றத்திலே புகுந்து கலாம் விளைத்தனர். நாடு, வெடிமருந்துச் சாலையாகிவிட்டது.

மன்னனோ, மாமன்றத்தைக் கலைத்துவிட்டு, பொருள் திரட்ட வேறு வழி என்ன என்று யோசிக்கலானான்.

இலண்டன் நகரப் பிரமுகர்களைக் கடன் தரும்படி கேட்டான்—மறுத்தனர் பலர்.

லாட், "இவர்களுக்குத் தக்கபாடம் கற்பிக்கவேண்டுமானால், சிலரையாவது தூக்கிலிடவேண்டும்" என்று கூறினான். மன்னன் அந்த அளவு செல்ல விரும்பாமல் சிலரைச் சிறையில் அடைத்தான். தூக்குமேடை, மன்னர்களால்தான் அமைக்க முடியும் என்று லாட் எண்ணிக்கொண்டான்!

படை கூடி நிற்கிறது—பணம் தேவை, சம்பளம் தா! போர் என்றால் வீரமுழக்கம் மட்டுமா! ஆண்டவன் அருளால் அரசனானேன் என்று தத்துவம் பேசினான், போர் நடத்தப் பணத்துக்கு! அருள் போதுமானதாக இல்லை. முறை தவறிய செயல்களில் ஈடுபட்டாவது பணம் திரட்டியாகவேண்டும், எதிரிகள், பிரிட்டன் மீது பாய்ந்து வருகிறார்கள், பிரிட்டிஷ் மக்களோ ஸ்காட்படையை எதிரிப் படை என்று கருத மறுக்கிறார்கள், ஆணவம் பிடித்த

அரசனுக்கு நல்ல பாடம் கற்பிக்க வருகிருர்கள் நம் நண்பர்கள் என்றே எண்ணிக்கொண்டனர்.

ஸ்காட் படையிலே எழுச்சி, உறுதி; மன்னன் படைவரிசையிலே பிளவு, பணமுடை, குழப்பம்!

இந்நிலையில் மன்னன், ஸ்பெயின் நாட்டு வணிகர்கள், பாதுகாப்புக்காக அரசாங்கத்திடம் ஒப்படைத்திருந்த தங்கப் பாளங்களைக்கூட எடுத்துக்கொண்டான். கிழக்கிந்தியக் கம்பெனியாருக்குச் சொந்தமான மிளகு முழுவதையும், பணம் கொடுக்காமல் எடுத்துக்கொண்டு, அதை விலையைத் தள்ளிவிற்றுப் பணம் திரட்டினன். உடன் இருந்த உல்லாசப் பிரபுக்களிடமெல்லாம் பணம் திரட்டினன்.

ஸ்காட் படை முன்னேறியவண்ணமிருக்கிறது! மன்னனைக்கண்டு எமது மக்களின் குறையை எடுத்துக்கூறச் செல்கிருேம், எம்மைத் தடைசெய்யாதீர்; என்று மன்னர் படையினருக்குக் கூறியவண்ணம் முன்னேறுகிறது. எதிர்த்துப் பார்த்த மன்னன் படை தோல்வியே கண்டது! முன்னேற்றத்தைத் தடுக்க முடியவில்லை! நகரங்கள் ஸ்காட் படைகளிடம் சிக்குகின்றன, ஓரிடம்விட்டு மற்ருேர் இடம் பின்னேக்கி ஓடுகிறது மன்னன் படை! தோல்வி! கேவலமான தோல்வி! மன்னன், இனி நிலைமை மிக மோசமாகிவிடும் என்றறிந்து, சமரசத் தூது அனுப்பினன். சமாதானம் நிறைவேற்றப்படும் வரையில் மன்னன் தன் படைக்கும், ஸ்காட் படைக்கும், சேர்ந்து பணம் தரவேண்டுமென்று ஏற்பாடாயிற்று. இதற்காகப்பெரும் பொருள் தேவைப்படுகிறது, என்ன செய்வான் வேந்தன்! நாட்டிலுள்ள பிரபுக்களை எல்லாம் கூட்டிக் கேட்டான், அவர்களோ, நெருக்கடியைப் போக்க மாமன்றத்தால்

மட்டுமே முடியும், எனவே மன்னன் மாமன்றத்தைக் கூட்டியாகவேண்டும் என்று கூறிவிட்டனர்.

எங்கு சுற்றி வந்தாலும், மீண்டும் மீண்டும், மாமன்றத்துக்கே வந்து சேரவேண்டி இருப்பது கண்டு மன்னன் வாட்டமடைந்தான்—தேர் தன் நிலைக்குவந்து தீரவேண்டியதுதானே, என்று மக்கள் எண்ணி மகிழ்ந்தனர்.

மாமன்றம் கூடிற்று! பிரிட்டிஷ் வரலாற்றை மாற்றி அமைக்கும் ஆற்றலைக்கொண்ட மாமன்றம் கூடிற்று! மன்னராட்சி முறையின் கேடுகளைக் களைந்து தீருவது என்று உறுதி பூண்ட மாமன்றம் கூடிற்று! மன்னன், வாயடைத்துக் கிடந்தான். தன் ஆதிக்கம் அழிந்துபடும் என்று அச்சம் குடிகொள்ளலாயிற்று. நாட்டை ஆளும் மன்னன், நடுச்சந்தியில் நிற்பவன்போலாகிவிட்டான்; இரு படைகள், ஒன்றை ஒன்று தாக்க வேண்டியவை, ஆனால் அவை இரண்டும் சேர்ந்து மன்னனைத் தாக்குகின்றன, பணம், பணம் என்று! மக்களோ, தங்களுக்கு ஒரு மன்னன் உண்டு என்பதை எண்ணவும் வெட்கமும் வேதனையும் அடைகின்றனர், மாமன்றமோ, நாட்டு மக்களின் முழு நம்பிக்கைக்கும் இருப்பிடமாக விளங்குகிறது.

மாமன்றம் கூடியதும், மன்னனிடம் மனுச்செய்து கொள்ளும் நிலை கூட அல்ல; கண்டிக்கும் நிலை பிறந்தது.

கெஞ்சினோம், மிஞ்சினான்; பணிவு தெரிவித்தோம், பஞ்சைகள் என்றான்; அன்பு குழையச் சொன்னோம், அலட்சியமாக நடத்தினான்; கோரிக்கைகளை விடுத்தோம் கொடுமைகளை ஏவினான்; இனி மாமன்றம் மன்னனுக்கு மனுச்சமர்ப்பிக்காது, மக்களின் தீர்ப்பை வழங்கும். நிலை இதுவாகிவிட்டது.

மாமன்றம், மக்கள் இல்லம், தேவாலயம், சிறைக் கூடம், பாசறை, வணிகர்கோட்டம், கப்பல் தட்டுகள் எங்கும், கண்டனம்!

"யோசனை கூறும்படி மன்னன் நம்மை அழைத்திருக் கிருர்.

மக்களோ, தங்களுக்கு உற்ற குறைகளை எடுத்துரைக் கும் கட்டளையிட்டு நம்மை மாமன்றத்துக்கு அனுப்பி யுள்ளனர்.

அச்சம் கூடாது! நாம் நமது கடமையைச் செய்யத் தவறக் கூடாது" என்று ஒருவர் கூறினார்.

"பெர்ஷியாவிலே ஒரு காலத்திலே உருட்டி மிரட்டி ஆண்டுவந்த மன்னன் ஒருவன் இருந்துவந்தான். அவன் காலத்தில் நீதிபதிகள் நடுங்கும் குரலில் பேசினர். சட்டம் இருக்கத்தான் செய்கிறது, ஆனால் மன்னன் தன் விருப் பம்போல நடந்துகொள்ளலாம்—அவர் உரிமை அது என்றனர். நாம் அத்தகைய கேடான பேச்சுப் பேச லாகாது. நடுங்கும் குரல் கொள்ளக்கூடாது, நாம் நாட் டின் உறுப்பினர், மக்களின் உரிமைக் குரல்!" என்று எடுத்துரைத்தார் வேருேர் உறுப்பினர்.

"உயிர், உடைமை, யாவும் பறிபோகிறது. வாளா இருப்பவன் மனிதனாகான்!" என்று இடித்துரைத்தார் இன்னொருவர்.

"அரசியல் முறைக்கு ஒரு திட்டம், சட்டம்! உறுப் பினர்களைத் தேர்ந்தெடுக்கும் ஒரு ஒழுங்கு முறை! நீதி வழங்கும் இடங்கள்! இவைகளெல்லாம் இருக்கின்றன நமக்கு! ஏன், இவைகள்? இவைகளால் இம்மி அள வேனும் பலன் உண்டா? மன்னன்தான் இவைகளை எல் லாம் கேலிக் கூத்தாக்குகிருனே. நமக்கேன் இந்த காகி

துக் கேடயங்கள்!" என்று கேலியைக் கொட்டினர் மற்றோர் உறுப்பினர்.

ஒருவருக்கொருவர் போட்டியிட்டுக்கொண்டு பேசுபவர்போல, உரிமை முழக்கமிட்டனர். ஒன்று, இரண்டு, மூன்று என்று, பட்ட கஷ்டங்களைக் கணக்கெடுத்தனர். எல்லோரும் இருவரைச் சுட்டிக்காட்டி, அகற்றப்பட வேண்டிய விரோதிகள் என்றனர்; அவர்கள் குறிப்பிட்டது லாட், ஸ்டாராபோர்டு எனும் இருவரையும்.

மன்னன் அரண்மனையில்தான் இருக்கிறான்! அவனைச் சுற்றிப் பிரபுக்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். கோலும் முடியும், கொலுமண்டப உடையும் அழகு குன்றாமல்தான் உள்ளன. இங்கே மாமன்றம், அரசனின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் பணியில் ஈடுபடுகிறது. 'கூடு' என்றால் கூடி, 'கலை' என்றால் கலைந்துபோக வேண்டியதல்லவா, மாமன்றத்தின் கடமை, மன்னன் தத்துவத்தின்படி. இந்தமுறை கூடிய மாமன்றம், வேலையை முடிக்காமல் கலைந்துபோவதில்லை என்ற சூள் உரைத்துவிட்டது.

ரோம் நாட்டிலே ஒரு விழாவாம்! ஆண்டுக்கோர் நாள் அடிமைகள் அனைவரும் கூடுவராம். மனதிலே குமுறிக்கொண்டிருக்கும் குறைகளை எல்லாம் எடுத்துப் பேசுவராம். தங்களைக் கொடுமை செய்யும் 'எஜமானர்களை'க் கண்டித்துப் பேசுவராம்! எஜமானர்கள் அதற்கு உரிமை தந்தனராம்! ஒருநாள்! கூடிப்பேசுவர்! மறுநாள், பழையபடி! அடிமைகளாவர்!! குறைகளுக்குப் பரிகாரம் கிட்டாது—இதுபோல, மாமன்றம் எப்போதாவது கூடுவது, இதயத்தில் உள்ளதை எடுத்துரைப்பது, பின்னர் கலைவது என்பது இனி முறையாக இருத்தலாகாது; கூடி—

ளேம், கொடுமை களேவோம்! என்று முழக்கமிட்டார், ஓர் உறுப்பினர்.

அரண்மனைக்குச் செய்தி சென்றது, மக்கள், மாமன்ற நடவடிக்கைகளை மகிழ்ச்சியுடன் கவனித்துக்கொண்டிருந்தனர். எல்லா வேலைகளையும் மறந்தனர், மாமன்ற அலுவலைக் கவனிப்பதே, வேலையாகிவிட்டது மக்களுக்கு திரள் திரளாகக் கூட்டம், மாமன்ற வாயலில்! பிடிவாதம் பேசும் பிரபுவைக் கண்டால், ஆர்ப்பரிப்பர், மக்கள் சார்பாகப் பேசுபவரைக் கண்டால் வாழ்க என்று முழக்கமிடுவர்! அமுல் செய்யும் அதிகாரிகள், வெளியே உலவ அச்சம் கொண்டனர்! அரண்மனைக்குள்ளேயே, அச்சம் படை எடுத்தது. போர்க்கள வாடை நாட்டிலே வீசலாயிற்று! நடைமுறைத் திட்டங்கள் தீட்டக்கூடியதல்ல இந்த மாமன்றம், மன்னராட்சி முறையே தேவைதானு, என்ற பெரும் பிரச்னைக்கு முடிவு கூறவே வந்திருக்கிறது என்று மக்கள் கூறினர்.

கொடுமைகளேத் தாங்கிக்கொண்ட காலம் மலேஏறி விட்டது; இப்போது தியாகத் தழும்புகளேத் தடவிப் பார்த்தபடி, தருக்கருக்குத்தக்க தண்டனே தரும் நாள் பிறந்துவிட்டது! எங்கே அந்தக் கொடியவர்கள்? ஏன் இனியும் அவர்களே விட்டுவைப்பது? என்று முழக்கம் கிளம்பிவிட்டது, மாமன்றத்தின் வலுவு முழுவதும் தெரியும் நாள் அது.

மக்கள் துரோகி ஸ்டாராபோர்டு கண்டிக்கப்பட வேண்டும்!—என்று பிம், கூறினுர், "இழுத்து வருக" என்று உடன் முழக்கமிட்டனர் மாமன்றத்தார்! மன்னன்? அரண்மனையில்! ஆனுல் ஏதும் செய்ய இயலாத நிலே! நாட்டு மக்களே அடக்குமுறைக்கு ஆளாக்கி, மக்களின் வலிப்பணத்தை பாழாக்கி, மன்னனே ஆகா வழிபுகுத்தி

அவதியை உண்டாக்கிய, லாட், ஸ்டாபோர்டு, இருவரும் சிறையில் தள்ளப்பட வேண்டும்! என்று தாக்கீது பிறந்தது. அதனைத் தடுக்கும் சக்தி, மன்னனுக்கு இல்லை! தடுக்க முயன்றிருந்தால், அரண்மனை தரைமட்டமாகி விட்டிருக்கும், மக்கள் அவ்வளவுக்குத் துணிந்திருந்தனர்.

இரு கொடுமையாளர்களும், இந்தப் புயல் நீண்ட காலம் அடிக்காது, அடங்கிவிடும், என்று எண்ணியபடி சிறை சென்றனர், அடங்கக்கூடியதல்ல; இந்தப் புயல்! அடக்கும் ஆற்றல் எவருக்கும் இல்லை!!

இரு கொடுமையாளர்களைச் சிறைக்கூடத்துக்கு மாமன்றம் அனுப்பிய செய்தி, மக்கள் உள்ளத்திலே என்றுமில்லாத களிப்பை உண்டாக்கிற்று! நீதி வெல்கிறது! மக்கள் வெல்கிறார்கள்! மமதை அழிந்து படுகிறது! மாண்பு வெற்றி பெறுகிறது என்று மகிழ்ந்தனர். குட்டிக் கொடுமையாளர்களுக்கெல்லாம், குலைநடுக்கம். அரசை ஆட்டிப்படைத்த இருவர், சிறையிலே தள்ளப்பட்டனர், நமது கதி யாதோ என்று எண்ணினர், பயத்தால் பாதி உயிர் போயிற்று! பலர், வெளிநாடுகளுக்கு ஓடினர். சிலர், சரண் புகுந்தனர், சிலர், மன்னனைச் சுற்றி வட்டமிட்டனர்—மன்னனே தன் ஆதிக்கம் 'மடியக் கண்டு, மனம் உடைந்துபோயிருந்தான்.

நெடுங்காலமாக ஏறிக்கொண்டு வந்த கறைகளை மாமன்றம் கழுவித் தள்ளலாயிற்று.

ஹாம்டனுக்கு விரோதமாகத்தீர்ப்பளித்த நீதிபதிகள், வேலையினின்றும் விரட்டப்பட்டனர்; மாமன்றம் திரும்பித் தாக்கத் தொடங்கியதும், தீயோர் திகில்கொண்டனர்.

உரிமைக்குரல் எழுப்பியதற்காகச் சிறையிலே தள்ளப்பட்டுக்கிடந்த இலட்சிய வாதிகள் விடுதலை செய்யப்பட்டனர்; நாடு, விழா கொண்டாடிற்று.

பர்ட்டன், பிரைன், லில்பர்ன் ஆகியோர் விடுதலையை மக்கள் பெருந்திருவிழாவாகக் கொண்டாடினர்; இலண்டன் நகருக்கு அவர்கள் ஊர்வலமாக அழைத்துவரப் பட்டனர்; பாதையில் மலர் தூவி மக்கள் அவர்களை வரவேற்றனர். கண்ணீர் துடைக்கப்படுகிறது! கடுந்தண்டனை பெற்றவர்கள் விடுதலை பெறுகின்றனர்!

மக்கள் இயக்கத்தை நசுக்க முற்பட்டவர்கள், தெருவில் செல்ல அஞ்சுகிறார்கள். முச்சந்திகளிலெல்லாம் மூழக்கமிடும் மக்கள் கூடி, இன்றைய விருந்து என்ன? இன்று யார் விடுதலை? இன்று எந்தக் கொடுமையாளனுக்குத் தண்டனை? இன்று மாமன்றம் எந்தப் பிரச்னை குறித்து முடிவெடுத்தது? என்று கேட்கின்றனர். அரசியல் பிரச்னை தவிரப் பிறிதொன்றிலும் மக்களின் மனம் செல்ல மறுத்தது.

இராணி எனிரிட்டாவின் தாயார், பிரான்சிலே அடைந்த அல்லலை ஆற்றிக்கொள்ளலாம் என்று எண்ணிப் பிரிட்டன் வர, அங்கு பெரும்புயல் வீசக் கண்டு, எந்த நேரத்தில் என்ன ஆபத்து நேரிடுமோ என்று திகில்பட வேண்டி இருந்தது. நூறு துப்பாக்கி வீரர்கள் காவலுக்கு அமர்த்தப்பட்டனர்; பிரபுக்களிடம் அம்மை முறையிட, அவர்கள், மாமன்றத்தைக் கேட்டிட "கேடு வராமல் பார்த்துக்கொள்கிறோம்; எனினும் கத்தோலிக்க மார்க்கத்தவர் நாடு இப்போதிருக்கும் நிலையில், அம்மை, இதை விட்டுச் செல்வது நலம்" என்று மாமன்றம் கூறி விட்டது.

ஏய்த்துப் பிழைத்தவர்கள், அடக்கி அழித்தவர்கள், ஆணவக்காரர்கள், அனைவரும் அஞ்சுகின்றனர், மக்கள் கண்ணில் கசியும் கண்ணீரானதும்! அனுஷ்டானல் நிரம்

பிய கண்ணினராக மக்கள் இருந்தபோது, யார் ஆறுதல் கூற முன்வந்தனர்? கேலி பேசினர்!

பதின்மூன்று பேர் கொண்ட கமிட்டி நான்கு திங்கள் பணியாற்றி இருபத்து எட்டு குற்றங்களைப் பட்டியலாக்கித் தந்தது, ஸ்டாபோர்டுக்கு எதிராக.

நாடு நன்கு அறியும் அந்தக்கொடியவன் செய்ததை, எனினும் முறைப்படி காரியமாற்ற வேண்டும் என்பதற்காக, குற்றப் பட்டியலைத் தயாரித்து, மாவீரன் பிம், வீர உரை ஆற்றினன்.

மக்களின் உடைமைக்கும் உயிருக்கும், இரண்டினும் மேலான உரிமைக்கும், ஸ்டாபோர்டு உலை வைத்ததை விளக்கிப் பேசினர், பிம்.

அவன் கூறியதை மறுத்துரைக்க ஸ்டாபோர்டுக்கு வாய்ப்பும் அளிக்கப்பட்டது.

ஸ்டாபோர்டு மீது வெகுண்டெழுந்தவர்கள் பிரிட்டிஷ் மக்கள் மட்டுமல்ல, ஸ்காட் மக்கள் சீறினர், அயர் மக்கள் கொதித்தனர், அனைவருக்கும் கேடு பல செய்தவன் இந்தக் கொடுங்கோலன்.

மாமன்றத்தைப் பதினோராண்டுகள் கூட்டாமல் மன்னன் இருந்தது, இந்த மமதையாளன் தூண்டுதலால் தான்.

ஸ்காட் மக்களிடம் சமரசம் பேச மன்னன் முற்பட்டதைக் குலைத்து மீண்டும்போர் மூட்டிவிட்டதும், இவனே

அயர் மக்களோ, இவனுடைய அழிவுத் திட்டத்தால் மிகவும் நொந்து போனவர்கள். மாளிகைகளிலும் சிறு குடில்களிலும், பண்ணைகளிலும் பட்டி தொட்டிகளிலும், இவன் நடத்திய பயங்கர ஆட்சியின் விளைவுகள், நெஞ்சை உலுக்கும் காட்சிகளாக இருந்தன—கருகிய

பிணங்கள், தீய்ந்துபோன வயல்கள், இடிந்த மாளிகைகள், ஒடிந்த உள்ளங்கள்!

மூன்று நாடுகளிலும், கொடுமைகள் புரிந்தவன்—பதினோராண்டுகள் மக்களைப் பதறப்பதறத் தாக்கினவன், மாமன்றத்தினிடம் சிக்கிக்கொண்டான்; இருபத்து எட்டு வகையான குற்றங்கள். ஒவ்வொன்றும் நாட்டுக்குப் பெருங்கேடு விளைவித்தவை. மனித வேட்டையாடுவதிலே மட்டற்ற மகிழ்ச்சி காட்டிய அந்த மாமிசப்பிண்டத்துக்கு, மறுத்துப் பேசவும் வாய்ப்பளித்தது, மாமன்றம். மக்களுக்கு இது பிடிக்கவில்லை! ஆரவாரம் செய்தனர். அக்ரமக்காரனைக் கொன்று போட்டாகவேண்டும், அவனிடம் வாதிடுவது கூடாது, அவன் செய்த கொடுமைகளுக்குச் சாட்சிகள் தேடி அலைவானேன், நாடு நன்கு அறியும்; எனவே அவனைக் கொன்றுவிடுக, என்று மக்கள் முழக்கமிட்டனர்.

அயர்லாந்தில் ஸ்டாபோர்டு செய்த அக்ரமத்தை விவரமாக எடுத்துக்கூற அங்கிருந்த ஒரு குழு பிரிட்டன் வந்தது.

பிரபுக்கள் சபைக்குச் சென்றது விசாரணை! ஸ்டாபோர்டு, தன் திறமை முழுவதையும் காட்டினான்—குற்றச்சாட்டுகளை மறுத்தான், ஆட்சியை வலுவாக்கத் தான் எடுத்துக்கொண்ட பல நடவடிக்கைகளை மாமன்றத்தார் அக்ரமம் என்று கூறுவது பொருளற்றது என்று வாதிட்டான். துரோகம் இழைத்ததாகக் கூறுகிறார்கள், ஆனால் துரோகம் என்பதற்கு என்ன விளக்கமளிக்கிறார்கள் என்று கேட்டான். மாமன்றத்தின் சீற்றம் இங்ஙனம் வரம்புமீறி, அதிகாரிகள் மீது பாய்வது சட்டத்தையும் ஒழுங்கு முறையையுமே கெடுத்துவிடும் என்று பயமூட்டினான். என் கதி எதுவோ அது, மற்றப் பிரபுக்

களுக்கும் பிறகு வந்து சேரும் என்று எச்சரித்தான். ஒரு மாமன்ற உறுப்பினர் கூறியபடி, "தேர்ந்த நடிகன் போல், விசாரணைக் கூடத்தில் ஸ்டாபோர்டு அற்புதமாக நடித்தான்" எனினும், நாடு அவன் குற்றவாளி கொல்லப் படவேண்டியவன் என்று தீர்ப்பளித்துவிட்டது. விசார ணைக் கூடத்தைவிட்டு அவன் வெளியே செல்ல அனு மதிக்கப்பட்டிருந்தால்போதும், ஆத்திரம்கொண்ட மக்கள் கல்லால் அடித்துக்கொன்று இருப்பார்கள்.

மாமான்றம் இதை அறிந்து, சம்பவத்தை நீடித்துக் கொண்டு போவதால் விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நேரிடும் என்று கருதி, ஸ்டாபோர்டு தண்டிக்கப்பட வேண்டும் என்ற சட்டம் இயற்றினர் — 59 பேர் இதை எதிர்த்து ஓட்டளித்தனர், மக்கள் இவர்களின் பெயரை துரோகிகளின் பட்டியலில் சேர்த்து, சதுக்கத்தில் தொங்க விட்டனர்.

விதவிதமான வதந்திகள் பரவின. மன்னனுக்குத் துணைபுரிய பிரான்சிலிருந்து படை வருகிறது! கத்தோலிக் கர் கூடிச் சதிசெய்கிறார்கள், மாமன்றத்தைத் தாக்கக் காலிகள் படை தயாராகிறது என்றெல்லாம் வதந்திகள் உலவின. மக்கள், கோபம்கொண்டனர்.

பலிபீடம் தயாராகிவிட்டது. ஸ்டாபோர்டுகொலைத் தண்டனை விதிக்கப்பட வேண்டியவனே என்று மாமன் றம் கட்டளையிட்டுவிட்டது. காவலன் கசிந்துருகினான். நண்பன் உயிரைக் காப்பாற்றும் ஆற்றலும் அற்றுப் போயிற்றே என்று அலறினான். "இனி எந்த வேலை யிலும் அவனை அமர்த்துவதில்லை என்று உறுதி கூறு கிறேன், கொல்லாமல்விட்டுவிடுக!" என்று மன்றாடினான். மாமன்றம் இணங்கவில்லை, மக்களோ, "கடமையை, அச்சம் தயை தாட்சணியமின்றிச் செய்க," என்று

கட்டளையிட்டனர். மன்னன் ஏதேனும் சூழ்ச்சி செய்து ஸ்டாரபோர்டை தப்பி ஓடச்செய்துவிடுவானோ என்று சந்தேகம்கொண்ட ஆறுயிரவர், கிடைத்த ஆயுதம் தாங்கிக்கொண்டு, மாமன்றத்தைச் சூழ்ந்துகொண்டனர்.

நீதி வேண்டும்! கொடியவன் தண்டிக்கப்பட வேண்டும்! என்று ஒரே முழக்கம்,

அரண்மனை அருகேயும் பெருந்திரள் — அரசனைக் கண்டிக்கிறது—அரசியின் கண்களிலே நீர் — பரிவாரம் பயத்தால் நடுங்குகிறது; ஸ்டாரபோர்டு சிறையிலே பலி மேடை தெரிகிறது!

முறைப்படி இந்த விசாரணை நடைபெறவில்லை என்று சிலர் முணுமுணுத்தனர், செயின்ட்ஜான் "முயலையும் மானையும் வலைபோட்டுப் பிடிக்கவேண்டும், வாட்டி வதைக்கக்கூடாது என்று வேட்டைமுறை உண்டு; ஆனால் ஓநாயையும் நரியையும் கண்ட இடத்தில் கிடைத்ததைக் கொண்டு சாகடிப்பர்" என்று கூறினர். மக்கள் கொண்ட கருத்தைத்தான் அவர் எடுத்துரைத்தார்.

"என்னைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம் இறையே! எனக்காகச் சிரமம் எடுத்துக்கொள்ள வேண்டாம்" என்று ஸ்டாரபோர்டு உபகாரத்துக்காக ஒரு கடிதம் அனுப்பினன்—மன்னன் கண்களைத் துடைத்துக்கொண்டான். பெருமூச்சுடன், மாமன்றம் அனுப்பிய ஓலைக்கு ஒப்பமளித்தான்,

மரண ஓலை தயாராகிவிட்டது, மன்னன் ஒப்பமும் கிடைத்துவிட்டது என்பதறிந்த ஸ்டாரபோர்டு பதறினன், "மன்னனை நம்பாதீர்!" என்ற முதுமொழிகூறிக் கசிந்துருகினன்.

எப்படிப்பட்ட மன்னனை நம்பினன் இந்தப் பிரபு! எதன் பொருட்டு நம்பினன்!

மக்களைப் பூச்சிப் புழுக்களென எண்ணும் ஒரு மன்னனை நம்பினான், மக்களை எப்படி வேண்டுமானாலும் அடக்கி ஒடுக்கலாம் என்று மன்னனை நம்பச் செய்தான். பதைக்கப் பதைக்கத் தாக்கினான், பழிதீர்த்துக்கொள்ளும் நாளன்று, பாகாய் உருகிப் பயன் என்ன. கண்ணீர் உகுத்துக் காணப்போவதென்ன, ஸ்டாபோர்டு பலியிடப்பட்டான். முதல் முரசு! என்றனர் மக்கள். பலிபீடம் முதல் காணிக்கை!

மன்னன் சார்பினர், ஸ்டாபோர்டு வீழ்ந்துபட்டது கண்டு, விலாவில் வேல் பாய்ந்தவரராயினர். பெரும் முயற்சி செய்து இந்த மாமன்றத்தை அழித்தாலொழிய, மன்னன் பாடு ஆபத்துதான் என்பது புரிந்துவிட்டது!

படைகொண்டு தாக்கினால் என்ன? எண்ணம் ஏற்பாடாக உருவெடுத்தது, பயர்சி, ஜெர்மின், கோரிங், எனும் படைப்பிரிவுத் தலைவர்கள், பல்லிளித்தனர். சதி பிறந்தது.

மன்னனுக்காகப் படை கிளம்புவது என்று ஏற்பாடு வகுக்கப்பட்டது. ஆனால், சதியை உடனிருந்து வகுத்துக்கொடுத்த கோரிங் என்பானே, மாமன்றத்துக்கு இரகசியத்தைக் கூறிவிட்டான் — சதிகாரர்களை மாமன்றம் துரத்திற்று — சிலர் ஓடிவிட்டனர், சிலர் பிடிபட்டனர், கருவில் சிதைந்தது காதகம். காவலன் மீது கடுங்கோபம் கொண்டனர் மக்கள்.

மாமன்றம், மக்கள்மீது பூட்டப்பட்டுள்ள தளைகளை ஒடித்தெறிகிறது, கொடுமையைக் களைகிறது, இனி மன்னன் பயங்கரத் தாக்குதலால், தன் நிலையைப் பலப்படுத்த முயற்சிப்பான், கண்காணிப்பாக இருக்க வேண்டும், எந்த நேரமும் ஆபத்து மூளக்கூடும், எதற்கும் தயாராக இருக்கவேண்டும் என்று நாட்டினர் கருதினர்.

நிழலுருவில், இரு முகாம்கள் தெரியலாயின.

பதறிப்போன பிரபுக்கள், பரிவாரம் சூழ, மன்னன் ஓர் முகாமில். ஆணவம் குறைந்திருக்கிறது, எனினும் ஆசை அழிந்துபடவில்லை; தத்துவம் மேலோங்கியே நிற்கிறது.

வெற்றிக் களையுடன் மாமன்றத்தார், வீர முழக்க மிடும் மக்கள், மற்றோர் முகாமில்.

கூலி கொடுத்தால் வேலை செய்யலாம் என்பதன்றி வேறு குறிக்கோளில்லாமல் ஒரு பகுதி மக்கள் உள்ளனர்; படையில் சேர விழைவோர்.

அரசனுடைய ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்கென்றே ஏற்பட்ட தனி நீதிமன்றங்கள், நட்சத்திர மண்டபம் போன்றவைகளை, மாமன்றம் கலைத்தது.

படைவீரர்களைக் கட்டாய விருந்தினராக்கும், கயமைக்கு, சாவுமணி அடித்தது.

கட்டாய கடன் போன்ற வரிமுறைகளை ஒழித்தது.

காட்டுச் சட்டத்தை அழித்தொழித்தது.

மாமன்றத்தின் ஒப்பம் இன்றி வரி வசூலித்தும் போது, மன்னனுடன் ஒத்துழைத்தவர்களுக்கெல்லாம், சீட்டுக் கிழிக்கப்பட்டது; எதிர்த்து நின்றோருக்கு நஷ்ட ஈடு வழங்கப்பட்டது.

அரண்மனையில் மன்னன் இருக்கிறான், மாமன்றம் அரசோச்சுகிறது. கணக்குத் தீர்க்கும் காரியம், தீவிரமாக நடைபெறுகிறது. மாமன்றத்தின் ஒவ்வொரு நடவடிக்கையும், மக்கள் உள்ளத்திற்கு தென்றலென இனிக்கிறது, மன்னனுக்கோ வாடை எனவாட்டுகிறது. இந்த நெடுநல் வாடை கண்டு ஐரோப்பிய நாடுகள் எல்லாம் ஆச்சரியமடைகின்றன,

நெருக்கடியின்போது மாமன்றத்தைக் கூட்டுவதும்—பிறகு கலைந்து போகச்சொல்வதும், எதேச்சாதிகாரத்தை வளர்க்கும் செயலாகும். இதனாலேயே, சார்லஸ் பதினோராண்டுகள் மாமன்றம் கூட்டாமலேயே ஆதிக்கம் புரிந்தான். இந்தக் கேடுகளைய முனைந்தது மாமன்றம் மூன்றாண்டுக் காலத்துக்குமேல், மாமன்றம் கூட்டாமலிருப்பது சட்ட விரோதமாகும் என்றும், கூடிய மாமன்றத்தை அதன் சம்மதம் பெறாமல் ஐம்பது நாட்களுக்குள் கலைப்பது கூடாதென்றும் சட்டம் இயற்றினர். இனி மன்னன், மாமன்றம் என்ன செய்யும் என்று ஆணவம் பேச முடியாது! தன் செயல்களுக்கு கணக்குக் காட்ட வேண்டிய காலம், மூன்றாண்டுகளில் வந்து தீரும். மக்களின் உரிமையைப் பாதுகாக்கும் இந்தப் புதிய ஏற்பாடு பெரிதும் முக்கியத்வம் வாய்ந்ததாகும்.

மார்க்கத்துறையினர் அரசியலில் அதிகாரம் செலுத்துவதை அறவே ஒழித்தாக வேண்டும் என்ற எண்ணம் மாமன்றத்தில் வலுத்தது. 'வேரறக்களைவது' என்ற திட்டம் வலியுறுத்தப்பட்டது.

மன்னன் தன் கண்முன் செய்யப்படும் காரியங்களைத் தடுக்கும் சக்தியற்று இருந்தான். இவைகளுக்குச் சம்மதம் தந்தால்தான், மாமன்றம், பணம் தருகிறது—பணமோ தேவை; செய்துகொண்ட ஏற்பாட்டின்படி இரு படைகளுக்கும் செலுத்துவதற்கு.

மன்னன் உள்ளம் இவைகளை ஏற்றுக்கொள்ளவில்லை; கரத்திலே வலு இல்லை; எனவே சமயத்தை எதிர்நோக்கியபடி இருந்தான்.

முயற்சிகள் ஒருபுறம் நடைபெற்றவண்ணம் இருந்தன. மன்னனிடம் கெஞ்சிப் பேசிப் பிழைத்து வந்த கும்பல், இந்த ஆபத்தை நீக்கினால், இலாபம் பிறகு

கிடைக்கும் என்று அறிவர். எனவே அவர்கள், மன்னனை மாமன்றத்தார் தலையாட்டியாக்க விரும்பும் கொடுமைப் பற்றி உருக்கமாகக் கூறி ஆதரவு திரட்டி பார்த்தனர். படை வரிசையிலேயும் இந்தப் பிரசாரம் நடைபெற்றது

ஆனால் அரண்மனை, மாளிகை, பாசறை எங்கு இவ் விதமான சதி உருவாலும், உடனுக்குடன், மாமன்றத் துக்கு விஷயம் எட்டிவிடும்—மாமன்றத்தின் சார்பினர், எங்கும் இருந்துவந்தனர். ஒரு சதியும் கருவிலிருந்து வெளிவர இயலவில்லை, சிதைக்கப்பட்டது.

போப்பாண்டவரிடம் உதவி கோரி எனிரிடாராணி புதிய முயற்சி செய்துவந்தார். பிரிட்டனில் கத்தோலிக்க ருக்குச் சலுகைகள் அளிக்கப்படும் என்று வாக்களித்து இந்த உதவி கோரப்பட்டது.

மக்கள் வீரமாகத் திரண்டு நின்றனர், மாமன்றம் விழிப்புணர்ச்சியுடன் இருந்துவந்தது என்றாலும், சிறிது அயர்ந்தால், மன்னன் சதிபுரிவான் எனற அச்சம்விட்ட பாடில்லை. ஆதிக்க காலம் போய்விட்டது, மக்கள் விழித் துக்கொண்டனர், இனி அவர்களிடம் ஆட்சிப்பொறுப்பை ஒப்படைத்துவிட்டு, அலங்காரச் சின்னமாக இருந்து விடுவோம் என்று தீர்மானிக்கக் கூடியவனல்ல, சார்லஸ் தத்துவவாதி!

படைகளை மாமன்றத்தின் விருப்பமின்றி அமைத்தல் கூடாது, போர் தொடுத்தல் மன்னனுடைய தனித் தீர் மானமாக இருத்தலாகாது, வரிகளை, மாமன்ற ஒப்பமின்றி விதித்தலாகாது — என்று இந்த "கூடாது—ஆகாது" என்ற அந்தாதி குறையவில்லை.

மன்னன் இந்நிலையில், ஸ்காத்லாந்துசெல்ல வேண் டியதாயிற்று-சமரசத் திட்டம் வகுக்க. மன்னன் ஸ்காட் மக்களுக்குச் சலுகைகள் தருவதென்றும், அதற்கு ஈடாக

அவர்கள் அரசனுக்குத் துணை நின்று, பிரிட்டிஷ் மாமன்றத்தை ஒடுக்குவதென்றும் ஒப்பந்தமாகிவிட்டது, அதன் பொருட்டே அரசன் அங்கு செல்கிறான் என்று பேச்சுக் கிளம்பிற்று. முன்னேற்பாடு குறையின்றி இருக்கவேண்டும் என்பதற்காக; ஒரு குழுவினரை, மன்னனுடன் செல்ல மாமன்றம் அமைத்தது. மாமன்றத்தின் அரிமா நோக்கு அரசன்மீது எப்போதும் இருத்தல்வேண்டும். சிறைக் காவலர்கள் கைதியைக் கண்காணிப்பதுபோல, மன்னன் ஆகிவிட்டான்; மறுப்பதற்கில்லை. இந்தக் குழுவில், ஹாம்டன் இருந்தார்.

மாமன்றம், பல்லாண்டுகளாகக் குவிந்துகிடந்த குப்பையைக் கூட்டித் தள்ளிற்று—பட்ட கஷ்டத்தைப் போக்கிக்கொள்ள ஓய்வு தேவைப்படவே பிறகு கூடுவதெனக் கலைந்தது.

மாமன்ற உறுப்பினர்கள் தத்தமது வட்டம் சென்றனர், அங்கெல்லாம் அவர்கள் மக்களிடம், பூத்து வரும் புது மலரின் அழகு குறித்தும், மணம் பற்றியும் எடுத்துரைத்தனர். வெற்றி வீரர்களாக வீடு திரும்பினோரை மக்கள் வாழ்த்தி வரவேற்றனர். "பெற்றோம் வெற்றி, பெருமைக்குரியதே! எனினும் பெற்ற வெற்றியை அழித்திட மன்னன் புது முயற்சிகள் செய்யக்கூடும் எனவே நாம் எதற்கும் தயாராக இருக்க வேண்டும்" உறுப்பினர் அறிவுரை கூறினர்.

மாமன்றம் கூடாதிருக்கும் நாட்களில் இன்றியமையாத ஏற்பாடுகளைக் கவனிக்கவும், நிலைமைகளுக்கேற்ப கட்டளை பிறப்பிக்கவும், ஒரு கமிட்டி அமைக்கப்பட்டது. இந்தக் குழுவில், பிரபுக்கள் சபையினரும் உண்டு. மாமன்றம், பிரபுக்களை வீணாக எதிரி முகாமுக்குத் துரத்த விரும்பவில்லை. மக்களாட்சியை மதிக்கும் பிரபுவை,

தங்கள் ஸ்காமுக்கு அழைத்துக் கொள்வதே அறிவுடைமை என்று எண்ணினர். அல்லலும் ஆபத்தும் விளையும் வகையில் ஆட்சிமுறை செல்வதைத் தடுத்தாக வேண்டும் என்ற பெருநோக்கம் கொண்ட பிரபுக்கள் சிலர், மாமன்றத்துடன் தோழமை பூண்டனர்.

மன்னன் ஸ்காத்லாந்திலிருந்து கொண்டு, தன் துணைக்குப் பலம்தேடிப் பார்த்தான், சில பிரபுக்கள் முன் வந்தனர், எனினும், தாக்குதலுக்குத் தேவையான அளவிலும் வகையிலும் துணைதிரளவில்லை. மன்னன் மீண்டும் இலண்டன் மாநகர் வந்தான்—வரவேண்டிய நிலைமை, புதியதோர் ஆபத்தால் ஏற்பட்டது.

அயர்லாந்திலே புரட்சி மூண்டுவிட்டது! அயர் மக்கள் நீண்ட காலமாகக் கொடுங்கோலால் தாக்குண்டு தவித்தவர்கள். மேலும், அங்கு சென்று குடி ஏறிய பிரிட்டிஷ் மக்கள், அயர் மக்களை அடிமைகளாக்கினர், அக்ரமம் புரிந்தனர். ஸ்டாபோர்டு காலத்தில் சகிக்கொணுக் கொடுமைகளைக் கண்டனர் அயர் மக்கள். பிரிட்டனிலும் ஸகாத்லாந்திலும் கொந்தளிப்பு இருக்கக் கண்டு, தளைகளை அறுத்துக்கொள்ள, புரட்சி செய்தனர். இதனை அடக்கப் படை வேண்டும், படை பயன் பட, பணம் வேண்டும். மன்னனுக்கு வாய்ப்பாகவும் இது அமைதல் கூடும். அயர் புரட்சியை அடக்க, மாமன்றம் முன்வந்து பணம் தந்தால், அதைக்கொண்டு அமைக்கப்படும் படையைக்கொண்டு, மன்னன் மாமன்றத்தை தாக்கித் தகர்க்கக் கூடுமல்லவா! நல்ல வாய்ப்பு! இந்த நெருக்கடி என்று தோன்றிற்று.

இலண்டன் நகரில் நடைபெற்ற வரவேற்பும் உபசாரமும் கண்டு மன்னன் புதிய நம்பிக்கைகூடப் பெற்றான்.

மக்கள்—குறிப்பாக பிரமுகர்கள் மாமன்றத்தார்

போலத் தன்னிடம் அருவருப்பு கொள்ளவில்லை, 'ராஜ பக்தி' இருக்கத்தான் செய்கிறது, என்று எண்ணி, ஓரளவு களித்தான்.

அந்த வரவேற்பின் பொருளை மன்னன் உணர வில்லை. மக்கள் உரிமையை மன்னன் வற்புறுத்தலால் வழங்கினன் எனினும்; அதைச் செய்ததற்கு மகிழ்ச்சி தெரிவிக்கவும், இதுபோல மக்களின் உரிமையை வழங் கும் மன்னராட்சிக்கே ஆதரவு கிடைக்கும் என்பதை அறிவிக்கவுமே, வரவேற்பு நடைபெற்றது. மன்னன் இதை மறைந்து கிடக்கும் ஆதரவு என்று தவருகக் கணக்கிட்டான்.

மாமன்றம் நிலைமையை விளக்கிவிட்டது. அயர் புரட்சி பற்றிய பிரச்சனையைக் கவனிக்கக் கூடிய மாமன்றம், படை திரளட்டும், ஆனல் அதன் தலைவராக யார் இருத்தல் வேண்டும் என்பதை மாமன்றமே தீர் மானிக்கும் என்று முடிவெடுத்தது. மன்னன், இதற்கா இணங்குவான்!

படையைத் தலைமைதாங்கி நடத்தும் உரிமை முற்றி லும் மன்னனைச் சார்ந்தது என்று வாதிட்டான். வம்பு வளருகிறது என்று மாமன்றம் எச்சரித்தது; இந்த மூலா தார உரிமையை ஒருக்காலும் இழக்க இணங்கேன் என் ருன் மன்னன்—பிளவு தெரியலாயிற்று.

அயர் புரட்சியை அடக்க நாஞேர் தொண்டர்படை திரட்டுவேன், பதிஞயிரவர் முன்வருக! என்ருன் மன் னன் படை திரளவில்லை, மாமன்றம் தடைவிதித்தது.

மன்னன் மீண்டும் தத்துவம் பேசிஞன்—கேட்பார் இல்லை.

மாமன்றம், பழைய ஏட்டைப் புரட்டிப்பார்த்தது, செய்யாது வைத்திருக்கும் காரியம் எது இருக்கிறது

என்று அறிய. மக்களால் வலியுறுத்தப்பட்டுவரும் மத அலுவலர்களில் உயர் நிலையில் உள்ளவர்கள் அரசியலில் இடம் பெற்று, செல்வாக்குடன் இருந்தனர். 'அந்த உலகம்' குறித்து அரும் உபதேசம் ஆற்றவேண்டியவர் களுக்கு இந்த உலக' அரசியலில் அக்கரை ஏன் என்று புதுக் கருத்தினர், கேட்டனர். ஜேம்சும் சார்லசும் உறுதி யுடன் மத அலுவலர் சார்பில் வாதாடினர். "பாதிரி இல்லையேல் பார்த்திபனும் இல்லை!" என்று ஜேம்ஸ் கூறினன் சார்லசுக்கும் அதே கொள்கை. அந்த மத அலுவலர்களும், பிரபுக்கள் சபையிலே இடம் பிடித்துக் கொண்டு, எதேச்சாதிகாரத்தை ஆதரித்து வந்தனர். எனவே மக்கள் அவர்களுடைய செல்வாக்கைச் சிதைத் தாகவேண்டும் என்று மன்றம் கூறிற்று. மாமன்றத்திலே, இந்தப் பிரச்னை எடுத்துக்கொள்ளப்பட்டது. மத அலுவலர்களின் செல்வாக்கு, எளிதிலே அழிக்கக் கூடிய தல்ல—காரணம் காட்டுபவர்களல்லவே, கர்த்தரைக் காட்டுபவர்கள்! எனவே பிரச்னை காரணமாக இருபிரிவு கள் தோன்றிவிட்டன; ஒன்றை ஒன்று கேலிபேசவும் தலைப்பட்டன.

மாமன்றத்தின் சார்பினருக்கு, ரவுண்டுஹெட்ஸ் என்றும் மன்னன் சார்பினருக்குக் கவாலியர் என்றும் பெயரிடப்பட்டது; குட்டைமுடியினர், குதிரைப்படை யினர், என்ற பொருள்படும், ஏசலுரைகள் வீசப் பட்டன.

அரசக் கருவூலக் காப்பாளர் பதவி அளித்து, மக்கள் நண்பன் பிம் என்பவரை மயக்கி மடக்கலாம் என்று மன்னன் எண்ணினன், இயலவில்லை.

மாமன்றம், அடுத்த கட்டம் சென்றது. கத்தோலிக் கரை ஏவிவிட்டுக் கலாம்விளைவிக்கவும், போர்ப்பாண்ட

வரிடம் உதவிபெற்றுத் தாக்குதல் நடத்தவும் முயன்ற தாக, ராணி எனிரிடாமீது குற்றப்பத்திரிகை தயாரிக்கலா யிற்று, மன்னன் நடுங்கினன். எனிரிடாவிடம் நிரம்ப அன்பு கொண்டவன் மன்னன். தன் ஆசைக்கினியா ளுக்கே ஆபத்து என்றதும் மன்னனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை, இவ்வளவு துடுக்குத்தனத்துக்கும் காரண மாக உள்ள, பிம், ஹாம்டன், ஹாலிஸ், ஆஸ்லிரிக், ஸ்ட்ரோட் எனும் ஐவரையும், கைதுசெய்ய உத்தரவிட் டான்.

ஐவர்மீது, நாட்டைத்தாக்க வேறு நாட்டவரைத் தூண்டியதாகக் குற்றம் சாட்டப்பட்டது.

மரணதண்டனை தான் கிடைக்கும் இந்தத் துரோகத் துக்கு!

மன்னனை எதிர்ப்பது மட்டுமல்ல, வெளி நாட்டைத் தூண்டிவிட்டுத் தாயகத்தைத் தாக்க ஏற்பாடு செய்வது மாபெருங் குற்றம்.

கோபத்தைவிட அதிகமாக மக்களுக்குச் சிரிப்புதான் பொங்கியிருக்கும், இந்தக் குற்றச்சாட்டு கேட்டு.

தாயகத்தின் தன்மானத்தைத் தழைத்திடச் செய் வதற்காக, தன்னலத்தை மறந்து, பொதுப்பணியில் ஈடு பட்டு, சிறையை ஏற்று, ஆபத்துகளைத் துரும்பென எண்ணிப் பணியாற்றி வரும் மக்கள் விடுதலைப் படை யின் முன்னணியில் உள்ளவர்கள் இந்த ஐவர்! இவர் களைத் துரோகி: என்று மக்களை வாட்டி வதைக்கும் மன் னன் குற்றம் சாட்டினால், சிரிப்புப் பொங்கத்தானே செய் யும்.

எங்கள் பிம், எமது ஹாம்டன், துரோகிகளா! யாருக்கு? என்ன துரோகம் செய்தனர்? மன்னனை மக்க

ளாட்சி நடத்துக என்று எச்சரித்தனர் ஐவர்! துரோகமா இது? எதேச்சாதிகாரத்தை ஏற்காதீர் என்று எமக்கு அறிவுரை கூறினர் அது துரோகமா? அடக்குமுறைக்கு அஞ்சேல்! என்று வீர உரையாற்றினர். துரோகமா? அரண்மனையில் நச்சரவம் இருக்கிறது, அதன் விஷப்பல்லைப் பெயர்த்தாக வேண்டும் என்று கூறினர்! இதில் என்ன துரோகம்! பொதுப் பணத்தைச் சூரையாடினவன், போக போக்கியத்தில் மூழ்கினவன், காமக் களியாட்டக்காரன், காதம் புரிந்தோன். பக்கிங்காமுகள், லாடுகள், ஸ்ட்ரா போர்டுகள், இவர்கள் துரோகிகள்! இந்த ஐவர், எமது தோழர்கள், உரிமைப்போர் வீரர்கள், அவர்கள் மீது சிறு விரல்பட்டாலும், சிரம் அறுப்போம்! என்று மக்கள் முழக்கமிட்டனர். பல ஆண்டுகளாக அவர்கள் மக்கள் பணியாற்றி வந்ததால் ஏற்பட்டிருந்த ஆதரவு, சாமான்யமானதல்ல! மன்னன் அவர்கள் மீது பாய்ந்தது, மதியற்ற செயலாகும். எண்ணற்ற மக்களின் நெஞ்சிலே இடம்பெற்ற அவர்களின் சொல் படைகளைத் திரட்டக் கூடிய வலிவு பெற்றுவிட்டது. அடக்க முடியாதது என்று எண்ணி மக்கள் ஆயாசப் பட்டபோது துணிந்தால் அடக்கலாம் என்று எடுத்துக்கூறி, எதேச்சாதிகாரத்தை அடக்கிக் காட்டிய அம்மாவீரரை இழக்கத் துளியும் சம்மதியோம், என்று மக்கள் கூறி, வீறுகொண்டெழுந்தனர்! அந்த ஐவர், நாட்டின் இதய நாடிகள்—கரம் வைத்தால் சிரம் போகும் என்றனர் மக்கள்.

இராணி எனிரிடா கண்ணீர் உகுத்துக் கண்ணாளனை வேண்டி நிற்கிருள் வேந்தன் ஐவரைச் சிறையிலிட உத்தரவிட்டான்.

உத்தரவைத் தாங்கிக்கொண்டு அதிகாரி வந்தான்—உயிர் பிழைத்துக்கொள்ள வேண்டுமானுல் ஓடிப்போ! என்று மாமன்றம், அதிகாரியை விரட்டி அடித்தது.

ஐவரின் இல்லங்களிலே அரசன் சார்பினரான படை வீரர் புகுந்தனர்—இழுத்துப் பூட்டினர். மன்னன் தவறு மேல் தவறு செய்தவண்ணம் செல்கிருன். நாடெங்கும் கொதிக்கிறது,

ஐவரைக் கைது செய்ய நானே செல்கிறேன், என்று கூறினுன் மன்னன். 300 போர் வீரர் புடைசூழ, சில பிரபுக்கள் உடன்வர, மாமன்றம் வந்தான்.

உள்ளே மாமன்றம் நடைபெறுகிறது, வெளியே மன்னன் முன்னூறு பேருடன், ஐவரைக் கைது செய்ய!

ஐவர், மாமன்றத்தில் இல்லை! அவர்களை நண்பர்கள் வேறிடம் அழைத்துச் சென்றுவிட்டனர். மன்னன் மாமன்றத்துக்குள் நுழைந்தான், என்பது வீரர் அவனுடன் உள்ளனர், நாடாளும் மன்னன், நாலாந்தர ஐந்தாந்தர அட்டகாசக்காரன்போல, வருகிருன் கண்டறியாத காட்' கேட்டறியாத சம்பவம்! இத்தனைக்கும் விலா நொறுங்கியிருக்கும் வேங்கையின் நிலையை எய்தியிருக்கிருன் வேந்தன்.

மாமன்றத்தினர், மரியாதையுடன், எழுந்து நின்று, மன்னனை வரவேற்றனர். அவனுடைய கண்கள் 'ஐவரை தேடின. "பறவைகள் பறந்துவிட்டன! சரி, நான் வந்தது பலன் தரவில்லை. ஆனுல் கபர்தார்! அந்த ஐவரை எப்படியும் என்னிடம் பிடித்து ஒப்படைக்க வேண்டும், அவர்கள் துரோகிகள்! இது உங்கள் அரசன் ஆணை" என்று கூறிவிட்டு வெளிக்கிளம்பினுன்.

"உரிமை! உரிமை!" என்று முழக்கமிட்டனர் மாமன்றத்தார்.

மன்னன், மாமன்றத்தைத் தாக்க பலாத்காரத்தைக் கையாளத் தொடங்கிவிட்டான்—சிறு படைதான் நூறு பேர்கள்—எனினும் படைதானே! எனவே, இனி படை

நான் பேசவேண்டும் போலிருக்கிறது! போர்! ஆம் மன்னன் நம்மைப் போருக்கு அழைக்கிறான்! அவன் போர்க் கோலம் பூண்டுவிட்டான்! இனி நாமும் அதற்கு தயாராக வேண்டியதே, என்று தீர்மானித்தனர்.

அந்த ஐவர், துரோகிகள் என்றால், நாம் எல்லாம் யார்? என்று கேட்டுக்கொண்டனர், மாமன்றத்தார்: உடன் பணியாற்றும் தோழர்களாகிய நாமும், துரோகிகளே!! என்று கூறவேண்டுமா! ஐவரைக் காட்டி நம் அனைவரையும்தான் மன்னன் பழிக்கிறான். நாட்டு மக்களின் சார்பிலே நாம் உறுப்பினரானோம், நம் சார்பிலே ஐவர் அரசனுக்குப்பலியாகவேண்டும்போலும்! என்றனர்.

நாடு பதைத்தெழுந்தது. ஐவரைக் காப்போம் அவர் மீது அரசன் ஆணை பாயச்சம்மதியோம் வன்று ஆர்ப்பரித்தனர். எந்த நேரத்தில் அரசன் படையினர்: ஐவரைக் கைது செய்யவருமோ என்ற எண்ணத்தில், அன்று இரவு முழுவதும் இலண்டன் நகரமாந்தர், போர்க்கோலத்துடன் விழித்தவண்ணம் இருந்தனராம். வெளி நகர்களிலிருந்து நாலாயிரம் குதிரை வீரர்கள், லண்டன் வந்து சேர்ந்தனராம். கடுமையாகப் போரிட்டு, மக்களைக் கொன்று குவித்த பிறகே, ஐவரைச் சிறைப்படுத்த முடியும், என்று நாடு கூறி விட்டது. நாடாளும் மன்னனால், ஐவரைச் சிறைப்படுத்த முடியவில்லை, மக்கள் ஐவருக்கு அரண் அளிக்கிறார்கள்!

வெடிமருந்துச் சாலைக்கருகே தீக்குச்சிபோலாகிவிட்டது ஐவரைக் கைதுசெய்ய மன்னன் முனைந்தது. அடுத்த கட்டம், போர்! வேறில்லை என்பது விளக்கமாகி விட்டது.

மன்னன் தாக்கீது அனுப்பினான் ஐவரைக் கைது

செய்யும்படி, மாமன்றம் மன்னன் செயல் சட்ட விரோத மானது என்று தாக்கீது பிறப்பித்தது.

இரு அரசுகள்! நாடு, எதை ஏற்றுக்கொள்வது என்பதை இனிக் களம்தான் தீர்மானிக்கவேண்டும்.

ஐவருக்கு வந்த ஆபத்து, நாட்டு மக்களைப் போர்க் கோலத்தில் கொண்டு வந்து விட்டது. நகரம், புயலுக் குரியநிலைமையில் இருந்தது. ஆபத்து தன்னை அணுகும் என்ற அச்சம் மன்னனுக்கு! மன்னன் தன் குடும்பத் தாரை அழைத்துக்கொண்டு, ஊரார் அறியா வண்ணம் இலண்டன் நகரைவிட்டு, வேறிடம் சென்றுவிட்டான்.

ஐவர், மன்னனைவிரட்டி விட்டனர்!மக்கள் மகிழ்ச்சிப் பெருக்குடன் ஐவரை வரவேற்றனர்.

தேம்ஸ் ஆற்றிலே, படைக்கலங்கள்! கரையெல்லாம் உறுதி படைத்த வீரர்கள்! ஐவர் வருகின்றனர், மாமன்றம் நோக்கி, ஊரே திரண்டு வருகிறது! வெளியூர் இருந் தெல்லாம் மக்கள் கூட்டம்.

மன்னன், மக்கள் சீற்றத்திற்கு இடம் தராத இடம் நாடினான்—விண்சர் எனும் ஊர் போய்ச் சேர்ந்தான். ஐவர் மாமன்றத்தில் எப்போதும் போல் அமர்ந்தனர். போர் மூண்டால், வெற்றி எவர் பக்கம் என்பதை அறி விக்கும் சம்பவமாகி விட்டது, ஐவர் வெற்றி.

இனிப் போரிட்டுத்தான் பிரச்னையின் முடிவு காண வேண்டும், என்ற கட்டம் தோன்றிவிட்டது.

ராணி எனிரிடா, குடும்ப நவமணிகளையும் அணி களையும் எடுத்துக்கொண்டு, ஐரோப்பா சென்று, விற்று, ஒரு கலம் நிறைய போர்க் கருவிகளை அனுப்பியாகிவிட் டது! மன்னன், தன்னை அண்டிப் பிழைக்கும் பிரபுக்களு டன், மந்திராலோசனை நடத்தி, போர்த் திட்டம் தீட்டி

ளுன். மாமன்றம், செயலாற்ற௫மலில்லை! துன்றமுகப பட்டினங்களிலே, மாமன்றச் சார்பினர். திரண்டனர்.

ஹல் என்ற ஊரிலே குவித்து வைக்கப்பட்டிருந்த வெடிமருந்துக் கிடங்கு, மாமன்றத்தார் வசமாயிற்று, அதைக் கைப்பற்ற வந்த மன்னனை கிடங்குக்குள்ளே நுழையக்கூடாது என்று காவலாளிகள் தடுத்து நிறுத்தினர். இனியும் என்ன செயல் வேண்டும்! மாமன்றத்தின் கட்டளையின்படி நடந்துகொள்பவர்கள், மன்னனைத் தடுத்து நிறுத்த முன்வந்துவிட்டனர்!

மன்னன் நாட்டிங்காம் எனும் நகர் சென்று போர்க் கொடி உயர்த்தினுன்.

மக்கள்மீது மன்னன் போர் தொடுத்துவிட்டான்! எனவே மன்னன், மாபெரும் துரோகியாஞன்'' என்று மாமன்றம் அறிவித்தது. நாடு அறைகூவலை ஏற்றுக்கொள்வோம் என்றது. படைகள் களம் புகுந்தன உள்நாட்டுப்போர் துவங்கிவிட்டது. தத்துவம் பேசிப் பயன்காணுத மன்னன், இனி இரத்தம் கொட்டி, வெற்றிதேடக் கிளம்பிவிட்டான்.

மக்கள் ஆர்வத்துடன் மாமன்றம் திரட்டிய படையில் சேர்ந்தனர். வெள்ளிச் சாமான்கள், தங்க நகைகள், பணம், கொண்டுவந்து குவித்தனர் மக்கள். அவைகளை வைத்திருக்கப் போதுமான இடம்கூட இல்லையாம். அளவு அவ்வளவு, ஆர்வம் அத்துணை! கிழமைக்கு ஒரு நாள், உணவருந்தலாகாது, அதனுல் மிச்சப்படும் பணத்தைச் சேர்த்து, மாமன்றத்திடம் தரவேண்டும் என்றுகூட மாமன்றத்தார் ஒரு ஏற்பாடு செய்தனராம். போர்ச்செலவுக்கான பணம் குவிந்தது மட்டுமல்ல, ஒரு உயரிய கொள்கைக்காகப் போரிடுகிறேம், உயிர் இழப்பினும்

கவலையில்லை, என்ற தூய எண்ணம்; வீரம், ததும்பும் மக்கள் குவிந்தனர்.

இலண்டன் வியாபாரக் கோட்டம்—மாமன்றத்துக்குப் பெருந்துணையாக நின்றது.

கடற்படை பெரிதும் மாமன்றத்தை ஆதரித்தது.

துறைமுகப்பட்டினங்கள் பலவும் மாமன்றச் சார்பில் இருந்தன.

எனவே வெளிநாடுகளிலிருந்து ஆள் அம்பு, மன்னனுக்காக வரவழைப்பது கடினமான காரியமாகிவிட்டது.

பிரபுக்கள் புடைசூழ நின்ற மன்னனிடமும், பணம் திரண்டது, படையும் அமைந்தது. ஆனால் கொள்கை மட்டுமே தரவல்ல நெஞ்சுஉரம் மன்னன் படை வரிசையில் இல்லை. ரூபர்ட் என்பவர் போன்ற திறமிகு தளபதிகள் இருந்தனர். எனினும் படைவீரரிடம் ஆர்வம் இல்லை

1642-ம் ஆண்டு துவங்கிய உள்நாட்டுப் போர், 1645—வரையில் நடைபெற்றது. பயங்கரமான சண்டைகள். இருதரப்பிலும் கொட்டப்பட்ட இரத்தம் கொஞ்சமல்ல! வீரச் செயல்களுக்கும் குறைவில்லை. இருதரப்புக்கும் வெற்றி தோல்வியின்றிச் சிலகாலம் நடைபெற்றசமர் மாமன்றப் படைவரிசையிலே பணியாற்றிய மாவீரன் ஆலிவர்கிராம்வெல் என்பவரின் திறமையாலும் தீரச் செயலாலும், களம் அமைக்கும் முறையாலும், தாக்குதலை வகுத்திடும் திட்டத்தின் நேர்த்தியாலும், மாமன்றத்துக்குச் சாதகமாகத் திரும்பிற்று. மார்ஸ்டன் மூர், நியூபரி, நேஸ்பி, எனும் இடங்களில், மாமன்றத்துக்கு மகத்தான வெற்றிகள் கிடைத்தன. கிராம்வெலின் கீர்த்தி பரவிற்று. மன்னன் படை வரிசையில் பிளவும், போரிடுவோர் உள்ளத்தில் கிலியும் ஏற்பட்டது.

வெற்றி கேட்டு மகிழ்ந்த மக்கள், மனவேதனை கொள்ளும் சம்பவமும் இதுபோது நடைபெற்றது. 1643-ல் ஹாம்டன், தீரமாகக் களத்தில் போரிட்டு கொண்டிருக்கையில், இறந்து விட்டார்! வாழ்நாள் முழுவதும் மக்களுக்காகப் பாடுபட்ட மாவீரன் மறைவு, நாட்டுக்கு ஈடு செய்ய முடியாத பெரு நஷ்டம் எனினும், வரலாற்றுச் சுவடியில்மட்டுமல்லாமல், மக்கள் உள்ளத்திலே இடம்பெற்று, ஹாம்டன் நிலைத்து நின்றார். மாமன்றம் இறுதியில் வாகைசூடும், மக்களின் சக்தியை இனி மன்னன் மாய்த்திடுவது முடியாத காரியம் என்பதற்கான நல்ல குறிகளைக் கண்டானபிறகே ஹாம்டன் மாண்டார். அவர் ஆற்றிய பணி அளப்பரிது. அவர் காட்டிய வீரம், மக்களை ஈர்த்தது. மாவீரன் மறைந்தான், கடைசிச் சொட்டு இரத்தத்தையும், மக்கள் பணிக்கே தந்தான்.

மக்களுக்கு மகிழ்ச்சியும் மன்னன் சார்பினருக்கு, மருட்சியும் தரத்தக்க மற்றோர் சம்பவம் இதுபோது நிகழ்ந்தது. நாட்டை அடக்கி ஆண்ட அக்ரமக்காரரில் ஒருவனான லாட் தூக்கிலிடப்பட்டான்.

மக்களை துக்கத்திலாழ்த்திய மற்றோர் சம்பவம் பிம் மரணம். ஹாம்டன்போலவே, முன்னணி நின்று மக்கள் பணியாற்றிய பிம், விடுதலை விளக்கை ஏற்றிவைத்தான். ஆனால் அதன் முழு ஒளியைக் காணும்முன்னம், இறந்துபட்டான். ஓயாத உழைப்பு உடலைத் துளைத்துவிட்டது. நோய்வாய்ப்பட்டு, பிம் இறந்தான், இறவாப் புகழ் பெற்றான பிறகு, மக்கள் பணிக்காகத் தன்னை ஒப்படைத்த பிறகு இம்மாவீரன், சுகமிழந்தான், சொத்திழந்தான், ஓய்விழந்தான், ஓட்டாண்டியுமானான். மக்கள் உரிமை பெறவேண்டும் என்பதன்றி வேறோர் குறிக்கோள் கொண்டானில்லை. நுண்ணறிவும், பொங்கும் ஆர்

வமும், பொல்லாங்கைப் பொசுக்கும் தீரமும் படைத்த பிம், கடைசிக் காலம் வரையில், மக்களுக்காகவே உழைத்தான் — வெற்றி கிட்டுவது உறுதி என்ற நிலை பிறந்த பிறகே மறைந்தான்; மறைவதற்கு முன்புகூட, மக்களுக்கு மகத்தானதோர் நலன் தந்தான்.

எட்வர்டுவாலர் என்றோர் கவிஞன் — கலை உள்ளம் கொள்ளவேண்டியவன், சதிச்செயலில் ஈடுபட்டான்.

இனிக்கப் பேசுவான், எவரிடமும் சாதகமாகப் பழகு வான், தோழமைகொள்வான். இக்கவிஞன் மன்னனுக் காக 'சதி' புரியத் திட்டம் வகுத்தான்.

தித்திக்கும் பேச்சில் வல்ல இவனிடம் ஆடவரும் பெண்டிரும் நேசம் கொண்டனர், படை வரிசையில் பிளவு உண்டாக்குவது, மாமன்றத்தின் வலுவைக் குலைப் பது, மன்னனை அரியாசனம் அமர்த்துவது என்பது கவிஞன் திட்டம். ஆஸ்தானக் கவிஞன் ஆகலாம் என்று கனவு கண்டிருப்பான் போலும்!

டாம்கின்ஸ், என்பான் வாலருக்கு உறவினன். தன் கற்பனைமிக்க கவிதைகளைப் பாடிக் காட்டவேண்டிய கவிஞன், தன் சதித்திட்டத்தை அவனிடம் கூறினான், அவன் ஆதரவு பெற.

மாமன்றத்தின், சம்பளமில்லாத ஒற்றர்கள் எல்லா மாளிகையிலும் இருந்தனர், டாம்கின்ஸ் மாளிகையிலும்!!

சதித்திட்டம் பேசப்படுவதைக் கேட்டுக்கொண் டிருந்த பணியாள், சேதியைப் பிம்முக்கு அறிவித்தான்— மாமன்றத்தார் பாய்ந்தனர், காதகர் சிக்கினர், பத்தாயிரம் பவுன் அபராதம் செலுத்தி, கவிஞன் உயிர் பிழைத்துக் கொண்டான்; சிலர் கொல்லப்பட்டனர்; சதி சிதைக்கப் பட்டது.

மறையுமுன் பிம் ஆற்றிய தொண்டு இது.

மக்கள் அவனுக்கு வீரவணக்கம் செலுத்தினர்—அவன் பட்டிருந்த பத்தாயிரம் பவுன்கடனையும், அவன் சார்பில் மாமன்றமே செலுத்திற்று.

இரு மாவீரர், பிம், ஹாம்டன் மறைந்தனர்—ஆனால் அவர்கள் ஊட்டிய ஆர்வம் வளர்ந்தது; மாஸ்டன் மூர், நியூபரி, நேஸ்பீ, என்று வெற்றிக்கீதம், மக்களுக்கு விருந்தளித்தது. மிரண்ட மன்னன், ஸ்காட்லாந்துக்காரரிடம் தஞ்சம் புகுந்தான்!

படைபலம்—கடைசி முயற்சி—அதிலேயும் மன்னன் தோற்றான்.

இதற்குப் பிறகு, மன்னன் நிலைமை, கைதியின் நிலைமைதான்—ஆனால் கட்டுக்கு அடங்கிய கைதி அல்ல தப்பி ஓட முயற்சித்தபடி உள்ள, கைதியின் நிலைமை.

நேஸ்பீ களத்திலே, மன்னன் தோற்றோடியபோது, அவனுடைய கடிதக்கட்டு, மாமன்றப் படையிடம் சிக்கிற்று—மன்னன், வெளிநாட்டவரைக் கொண்டு வரச் சதிபுரிவது, சாகசமாக மாமன்றத்தாரை ஏய்க்க விரும்புவது, பிரான்சு சென்றிருந்த தன் துணைவிக்கு எழுதி படையும் கருவியும் சேர்த்திட முனைந்தது, ஆகியவைகள் அம்பலமாயின. எழுபத்து இரண்டு பக்கம் கொண்ட துண்டு வெளியீடு மூலம் மாமன்றம் மக்களுக்கு இதனை அறிவித்தது.

தோல்வியை ஒப்புக்கொள்ளவோ, துயரால் தாக்குண்டு தலைகுனியவோ, மக்களிடம் மல்லுக்கு நின்றது போதும், இனி ஒழுங்கான ஆட்சி நடத்துவதாக உறுதி கூறிச் சமரசம் கோருவோம் என்ற விழைவோ, மன்னனிடம் இருப்பதாகத் தெரியவில்லை. தப்பிச் செல்ல மார்க்கம் கிடைத்தால் மீண்டும் ஓர் முயற்சி செய்யலாம் என்பதே மன்னனுடைய எண்ணமாயிற்று.

நாடு, பெரும் போரிலே சிக்கிற்று—பொருள் சேதம், உயிர்ச்சேதம் ஏராளம்—வரிச்சுமையும்—அதிகம் இந் நிலையில், மாமன்றத்தின் பக்கம் நிற்பவர்கள்கூட, சிறிது சலிப்படைந்திருக்கக் கூடும். இந்த நிலைமையைத் தனக் கேன் வாய்ப்பாக்கிக் கொள்ளக்கூடாது என்பது மன்னன் கருத்து.

சிறைப்பட்டது முதல் சிரம் இழக்கும் வரையில், மன்னன், தப்பிச்சென்று தன் ஆதிக்கத்தைத் திரும்பப் பெற எடுத்துக்கொண்ட முயற்சிகளில் முக்கியமான முறை ஒன்று இருந்தது—தன்னை எதிர்த்து நிற்கும் அணி யில் பிளவு ஏற்படவேண்டும் என்பதுதான் அம்முறை.

ஸ்காத்லாந்துக்காரரை அடுத்து அவர்களின் ஆதர வைப் பெற்றால், அவர்கள் மூலம், பிரிட்டிஷ் மக்களை வீழ்த்தலாம்.

அயர் மக்கள் திரண்டால், அவர்களைக் கொண்டு மாமன்றத்தாரை ஒழிக்கலாம்.

மாமன்றத்திலேயே, பிரிவு தெரிகிறது, அதைப் பயன் படுத்தினால், பலன் காணலாம்.

மாமன்றத்துக்கும் படையினருக்கும் பிளவு வெடிக் கிறது, இதனைப் பயன்படுத்தலாம்.

இன்னபிற எண்ணங்களே மன்னன் மனதில்! தத்து வம் குடைகிறது, என்செய்வான்!

ஸ்காத்லாந்துக்காரர், மன்னனை மீண்டும் ஆதிக்கம் செலுத்தத் துணைபுரிய விரும்பவில்லை; மன்னன் கிடைத் திருக்கிறான், இவனைக் காட்டி மாமன்றத்திடம் பெரும் பொருள் பெறவேண்டும் என்று எண்ணினர்;

400,000 பவுன்தர மாமன்றம் இசைந்தது, மன்னனை ஒப்படைக்க ஸ்காத்லாந்துக்காரர் இணங்கினர்.

மன்னன் முறியடிக்கப்பட்ட நேஸ்பீ, களத்தருகே,

மன்னனுக்குச் சொந்தமான மாளிகையில், சார்லஸ் சிறை வைக்கப்பட்டான்.

மன்னனை அப்போதும் மாமன்றத்தார் மரியாதைக் குறைவாக நடத்தவில்லை, உரிய மதிப்பளித்தனர்—வசதிகள் யாவும் செய்தனர்.

மாமன்றப் படைத் தலைவராக இருந்த பேர்பாக்ஸ், என்பவரே, மன்னனை எதிர்கொண்டழைத்தார்.

மக்கள், சிறைப்பட்ட மன்னனைக் காண வழி நெடுக நின்றனர்—காணக்கிடைக்காத காட்சி அல்லவா!!

சார்லஸ் மன்னன், முரட்டுத் தோற்றமும், பொறி பறக்கும் பேச்சினனுமல்ல, பார்ப்பதற்குப் பரமசாதுவாக இருப்பவன்—கனிவு வழியப் பார்ப்பான். கண்ணியமாகப் பழகுவான். எனவே, அவனைக் கண்ட மக்கள் தோற்றத்தையும் செயலையும் ஒப்பிட்டுப் பார்த்துத் திகைத்திருப்பர். இவ்வளவு நல்லவனாக இருக்கிறான், எத்துணை தீய காரியம் செய்தான்! என்று எண்ணியிருப்பர்.

ஐந்து திங்கள் இந்த மாளிகையில் அரசன், மாமன்றத்தின் கைதியாக இருந்தான். எந்த மாமன்றத்துக்குள்ளே நுழைந்து ஐவரைக்கைதுசெய்ய வந்திருக்கிறேன் என்று அதிகாரம் பேசினனோ, அதே மன்னன், அதே மாமன்றத்தின் கைதியானன். வரலாறு இது போன்ற சம்பவத்தை அடிக்கடியாகப் பொறித்திட முடியும்!

மன்னனிடம், சமரசம் காணவேண்டும் என்ற நோக்கமே மாமன்றத்துக்கு இருந்தது—ஆனால் காட்டு மிருகத்தை வீட்டில் கொண்டுவந்து பழக்கினலும், அதன் காட்டுக் குணம் போவதில்லை என்பதுபோல, மன்னன், மாமன்றம் காட்டிய நட்புமூலம், தன் தீய எண்ணத்தை விட்டுவிடவில்லை.

அண்டை அயலில் இருந்த பிரபுக்களின் மாளிகைக்கு, மன்னன் செல்லலாம், விருந்து உண்டு மகிழலாம், வேட்டை ஆடிக் களிக்கலாம், தடை ஏதும் இல்லை. ஆனால் இது எதற்குப் பயன்பட்டது? ஒற்றர்களிடம் பேசி, ஓட வழிதேடுவதற்குத்தான்!

மீன்பிடித்துக் கொண்டிருந்தான் ஒருவன். மன்னன் உலவச் சென்றான். மீன்பிடித்தவன், மெள்ள மெள்ள மன்னனை அணுகி, இரகசியமாக ஒரு சுருளைத் தருகிறான் - பிரான்சிலிருந்து, எனிரிடா அனுப்பிய கடிதம் அது!

இப்படிப்பட்ட சம்பவம் கண்டபிறகே, மாமன்றம், கண்காணிப்புத் தேவை என்ற முடிவுக்கு வந்தது. மன்னனுக்கு ஊழியம் செய்பவர்கள், ஒற்றர்கள் என்பதறிந்து, அவர்களை நீக்கிவிட்டு, மாமன்றம் வேறு ஆட்களை அமர்த்திற்று.

மன்னன் இவ்விதம்! மாமன்றமோ, பிளவுக்கு இடமளித்துவிட்டது. நீண்ட காலமாக ஓயாது உழைத்து வந்தவர்களுக்கிடையே, கருத்து வேற்றுமை, பல பிரச்னைகளில், முளைத்தன. எதிர்கால ஏற்பாடு பற்றி, முரண்பாடான எண்ணங்கள் உலவின. கேட்டது கிடைத்துவிட்டது என்ற திருப்தி சிலருக்கு; கேடு களையப்படவில்லை என்ற எண்ணம், சிலருக்கு; அரசன் மீண்டும் அரண்மனை புகவேண்டும் என்று எண்ணியவர்களுக்கும் அருமையான வாய்ப்பாகிவிட்டது, இந்தக் கருத்து வேற்றுமை.

மாமன்றத்திலிருந்து மணி விளக்குகள் அணைந்துவிட்டதுபோல, பிம், ஹாம்டன் மறைந்துவிட்டனர்.

களம் புகுந்து கடும் போரிட்டோருக்கும், கருத்துப் போரில் காலமெல்லாம் செலவிட்டு, மக்களைப் போர் வீரராக்கியோருக்கும் இடையே மனக்கசப்பு வளர்ந்தது.

மாமன்றம் அரசாளவிழைந்தது; படையினர், எமது கரம் வலுவுடையது என்று வாதாடினர்.

கிராம்வெல், இதுபோது, கீர்த்திமிக்க நிலைபெற்று, மாமன்றத்தை மங்கவைக்கும் மாவீரனானான்.

கனி கிடைத்துவிட்டது, சாறு பிழிந்து பருகுவதா துண்டுகளாக்கித் தின்பதா என்பதுபோல, வெற்றி கிடைத்துவிட்டது, இனி அதனைப் பயன்படுத்துவது எம் முறையில், என்பதுபற்றிக் கருத்து வேற்றுமை முளைத்தது.

அந்த நேரத்தில், குழப்பத்தைத் தவிர்க்கவும், சதிகளைச் சாய்க்கவும், வெளிநாட்டினர் விபரீதப் போக்கு ஏதும் கொள்ளாமலிருக்கச்செய்யவும், மீண்டும் மன்னன் சார்பிலே எத்தகைய இரத்தக்களறியும் எற்படாது தடுக்கவும், கிராம்வெல்லுக்குத்தான் ஆற்றலும் வாய்ப்பும் இருந்தது.

கிராமத்துக் கனவான், கடும் உழைப்பால் உயர்ந்தவன், படையினருக்கு நண்பன், தூய நடத்தையாளன், கிராம்வெல். அவன் களத்திலே காட்டிய வீரமும், படை வரிசைகளிலே புகுத்திய புது முறைகளும், தன்னல மறுப்பாளர்களைத் திரட்டிய நேர்த்தியும், தலைமை இடத்துக்கு அவனைத் தகுதியுள்ளவனாக்கிற்று.

சார்லசுக்குத் தீர்ப்பளிக்கும் பொறுப்பை ஏற்க கிராம்வெலே தகுதி வாய்ந்தவன்—மற்றோர் காரணத்தால்.

சார்லஸ், ஆண்டவன் எனக்கு அருள்பாலித்திருக்கிறார், அதனாலேயே நான் மன்னனானேன்—என்று தத்துவம் பேசினான்.

கிராம்வெல் தான்பெற்ற வெற்றிகள் அனைத்தும், ஆண்டவன் அருளாலே கிடைத்தன என்று நம்பிக் கூறி வந்தவன்.

"அவன்விட்ட வழிப்படி நடக்கட்டும்!" என்பது, இருவருக்கும் எப்போதும் எண்ணம்.

'வெற்றி தருபவன் அவனே! வேந்தனை நம்மிடம் ஒப்படைத்தவனும் அவனே!' என்று பக்தி மேலிட்டுத் தான் கிராம்வெல் பேசுவான். களத்திலிருந்து அவன் வெற்றிச் செய்திகளை அனுப்பிய ஓலைகள் முதற்கொண்டு துணைவிக்கு அனுப்பிய காதல் கடிதம் வரையில், இந்த "பக்தி" ததும்பிற்று.

சார்லசும், எந்தக் கஷ்டம் நேரிடுகிறபோதும், எந்தக் கொடுமை செய்கிற சமயத்திலும், "அவன்" பெயர் கூறத் தவறியதில்லை.

எனவே, "அவன்" அருள் பெற்ற அவ்விருவரும் தான், ஒருவருக்கொருவர் கணக்குத் தீர்த்துக்கொள்ள வேண்டியது, பொருத்தம்!

பொருத்தம் இருப்பினும் இல்லாது போயினும் நிலைமை கிராம்வெல் பக்கம் இருந்தது.

மாமன்றத்தில், முணுமுணுத்தவர்களை, விரட்டினான்—முன்னின்று காரியமாற்றும் நிலை பெற்றான்.

மாமன்றத்துக்கும் படையினருக்கும் ஏற்பட்ட இந்தப்பிளவு, மன்னனுக்கு வாய்ப்பாகிவிடாமலிருக்க, இருசாராரும், தனித்தனியே மன்னனிடம் சமரசம் செய்து கொள்ள முயற்சித்தனர். மன்னனோ, 'இதைக் காட்டி அதை' ஏய்க்கும் போக்கில் ஈடுபட்டான்.

படையினர், மன்னனைத் தங்கள் வசம் கொண்டு வந்து வைத்துக்கொள்வதுதான் நலன் பயக்கும் என்றனர்; எனவே மாமன்றத்தாரிடம் சிறைப்பட்டிருந்த மன்னனைத் தங்கள் மேற்பார்வையில் உள்ள சிறைக்குக் கொண்டுவரத் திட்டம் தயாராயிற்று. மன்னன் இப்போது சிறை எடுக்கப்பட வேண்டிய பொருளானான்!

ஜாயிஸ் என்ருேர் படைவீரன்—சிறு பி ரி வு க் கு த் தலைவன், மன்னன் இ ரு க் கு ம் மாளிகையைச் சுற்றி வளைத்துக் கொண்டான். மாமன்றச்சார்பிலே காவலிருந்த வர்களின் கரம் ஒடுங்கி விட்டது. கரத்தில் துப்பாக்கி யுடன், சென்ருன் மன்னனிடம்.

"புறப்படுக!"

"எங்கே?"

"இந்த இடத்தைவிட்டு"

"யார் நீ?"

"ஜாயிஸ்! படைவீரன்!"

"யார் உத்திரவுமீது வந்தாய்?"

"நானேதான்!"

"எங்கே உத்தரவு"

"உத்தரவைக் காட்டத்தான் வேண்டுமா! சரிஅதோ பாரும், உத்தரவு."

வெளியே நிற்கும் சிறு படையைக் க ண் ட ா ன் மன்னன், சீறிப் பயனில்லை, ஜாயிசுடன் கிளம்பினன்.

ஜாயிஸ், இங்ஙனம் மன்னனை முரட்டுத்தனமாக அழைத்துச் செல்ல முற்பட்டாலும், மன்னன் உடன்வர இணங்கிய பிறகு, மரியாதையாக நடந்துகொள்ளலானுன் மன்னனுடைய விருப்பப்படியே, நியூமார்க்கட் எ னு ம் இடம் நோக்கிச் சென்றனர். அங்கு போய்ச் சேருமுன், ஓர் இரவு வழியில் உள்ள கிராமத்தில், ஓர் மாளிகையில் தங்கினர். அந்த மாளிகை மு ன் ன ம் கிராம்வெலுக்குச் சொந்தமாக இருந்தது!

பேர்பாக்ஸ், கிராம்வெல், ஆகியோர், ம ன் ன னை மரியாதையாகவே நடத்தினர்—அவன் விருப்பப்படியே வசதிகள்-உபகாரத்துக்கு ஏற்பாடுகள்-வின்சர் நகரிலே மன்னன் சிறை வைக்கப்பட்டான்.

மாமன்றம் அனுப்பிய சமரச ஏற்பாடு ஒருபுறம், படையினர் அனுப்பிய ஏற்பாடு மற்றொருபுறம்; மன்னனிடம் வந்தன.

மக்கள் உரிமையை மதித்து ஆட்சி செய்யவேண்டும். அதற்காக மாமன்றம் இயற்றிய சட்டங்களின்படி ஒழுக வேண்டும், எதேச்சாதிகார ஆட்சிக்குத் துணையாக இருந்த துரோகிகளின் மீது மாமன்றம் நடவடிக்கை எடுக்கும்போது குறுக்கிட்டு அவர்களை மன்னிக்கக் கூடாது, மாமன்றத் தேர்தலுக்கு, மன்னன் முகாமில் இருந்தவர்கள் நிற்கலாகாது, என்பன நிபந்தனைகள்.

"மிச்சம் என்ன இருக்கும், முடிதானே!" என்று அலட்சியமாகக் கூறிச் சார்லஸ், உடன்பாட்டுக்கு வர மறுத்தான்.

படை வரிசையினரோ இதனினும் குறைந்த அள விலேயே நிபந்தனைகள் விதித்தனர். துரோகிகள் பட்டியல் தயாரிக்கப்படும்போது, முக்கியமானவர்கள் வரையிலாவது மன்னன் குறுக்கிடாமலிருக்க வேண்டும்என்று கேட்டனர். இதற்கு மன்னன் இணங்கவில்லை.

அரியாசனத்தைத் தூசி துடைத்து அலங்காரம் செய்து, மன்னனை அமரச்செய்து, அவன் எதிரில் கை கட்டி வாய்பொத்தி மாமன்றத்தார் குற்றேவல் புரியக் காத்துக் கிடக்கவேண்டும். அக்ரம ஆட்சிக்குத் துணை நின்றவர்கள் பழையபடி துதிபாடித் தூபமிட்டு, பதவி பெற்றுக் கொழுப்பர்—இதற்கா களம் புகுந்தனர், கஷ்ட நஷ்டம் ஏற்றனர், குருதி கொட்டினர்! மன்னன், எந்தச் சமயத்திலும், இழந்த ஆதிக்கத்தைத் திரும்பிப் பெற ஒரு துரோகக் கும்பலை நம்பி இருந்தான், எனவே தான் துரோகிகள் தண்டிக்கப்பட்டாக வேண்டும் என்ற நிபந்தனையை ஏற்க மறுத்தான்.

ஸ்காத்லாந்திலிருந்தாவது, அயர்லாந்திலிருந்தாவது உதவி கிடைக்கும் என்ற ஆசை அகலவில்லை. இராணி எனிரிடாவும் முயற்சியைக் கைவிடவில்லை. இந்நிலையில் உடன்பாட்டுக்கு வராமல், ஆனால் அதேபோது உடன் பாடு குறித்துப் பேசிக்கொண்டு காலத்தை ஓட்டுவதே சாலச் சிறந்ததென மன்னன் எண்ணினான்.

படையினர் அமைத்திருந்த கட்டுககாவலை ஏய்த்து விட்டு மன்னன் வெயிட் தீவு எனும் டம் சென்றான். இங்கு கவர்னராக இருந்த இ ஊ ஞ ர், கண்ணியமாக, ஆனால், கண்டிப்புடன் மன்னனை நடத்தி வந்தார்.

இராணி எனிரிடாவின் முயற்சியால், கலம் ஒன்று தாயராகிவிட்டது. மன்னன் அதிலேறி பிரான்ஸ் செல்ல லாம். பிறகு ஐரோப்பிய நாடுகளிலே, மன்னராட்சியை ஆதரிப்பவர்களின் துணையைத் திரட்டி, பிரிட்டன் மீது பாயலாம். மாமன்றம் அரும்பாடுபட்டுப் பெற்ற வெற்றியை, அழித்திடலாம். வாய்ப்புக் கிடைக்கிறது என்று மன்னன் சார்பினர் எண்ணிக்கொண்டனர். ஆனால் மன்னன் உடனடியாக ஓடிவிட விரும்பவில்லை. ஸ்காத்லாந்துக்காரரிடம் 'பேரம்' பேசிக் கொண்டிருந் தான்.

இதற்கிடையில், மன்னன் தங்கியிருந்த இடத்தி லேயே குழப்பம் உண்டாக்கி, மன்னனைத் தப்பிவிடச் செய்வதற்குச் சிறு சிறு முயற்சிகள் நடைபெற்ற வண்ண மிருந்தன. மாமன்றம் அமைக்கும் புதிய அரசியல் திட்டம் தங்கள் சுகபோக வாழ்வைக் குலைக்கும் என்று எண்ணிய சுயநலமிகள், இத்தகைய முயற்சிகளைத் தூண்டிவந்தனர்.

"மன்னனைக் காக்க மாவீரரே வாரீர்!
வேந்தனை விடுவிக்கத் திரண்டு வாரீர்!
புரட்சி பொங்குக! மன்னன் வாழ்க!

மன்னருக்காகப் போரிட வருக!"

முரசறைகிருன் காப்டன் பர்ஸி என்பான் வெளிப்படை யாகவே!

மன்னனே மாமன்றப் படையிடம் தோற்ருேடினுன் —சரண் புகுந்தான் — சிறைப்படுத்தப்பட்டிருக்கிருன். எனினும், மன்னனுக்காகப் போரிடக்கிளம்புக என் முரசு அறைகிருன்.

மக்கள் முரசு கேட்டனர், கேலி பேசினர்.

பெண்கள் சிலரும் துப்பாக்கி தூக்கி ஒருவனும் தான் இந்த அறப்போருக்குக் கிளம்பினர்! மன்னனுக்கு இருந்த ஆதரவுக்குத் தக்க எடுத்துக்காட்டு!

கலாம் விளைவித்தவன் கூண்டில் தள்ளப்பட்டான்.

பதினெரு திங்கள் இங்கு இருந்தான் மன்னன்— மனதிலே, மக்களை மகிழ்விக்கத்தக்க எந்த முடிவும் கொள்ளவில்லை. இப்பக்கமும் அப்பக்கமும் பார்த்த வண் ணம், தப்பி ஓடத் துணைதேட.

கலம் கடலில் தயாராக இருக்கிறது! கடற்கரை போகக் குதிரையும் தயாராகிவிட்டது! ஆட்கள் வந்து விட்டனர், துணை நிற்க.

மாளிகை மாடியிலிருந்து, பலகணி வழியாகக் கயிறு கட்டி மன்னன் கீழே இறங்கி, தப்பிச் செல்வதென்று திட் டம். இதனை பயர்பிரேஸ் என்பவன் வகுத்துத்தந்தான். பலகணியின் இரும்புக் கம்பிகளின் இடுக்கிலே புகுந்து செல்ல மன்னன் முயற்சித்தான்—தலை நுழைந்தது, உடல் சிக்கிக்கொண்டது, உடன் இருந்தோர் காப்பாற்றினர், தப்ப முடியவில்லை.

இலண்டன் நகர் சென்று இரும்பைத் துளைக்கும் கருவி கொண்டுவர ஏற்பாடாயிற்று.

இரகசியம் வெளியாகிவிட்டது, காவல் பலமாகி

விட்டது. மன்னனே தியானம்—தொழுகை, தவருமல் செய்த வண்ணம் இருக்கிருன்.

எத்தன் ஒருவனுடைய துணைகொண்டு, ஜேன் ஹோர்வுட் எனும் மாது, மன்னன் தப்பிச்செல்ல வழி கண்டாள். இரகசியக் கடிதங்கள் பல மன்னனிடமிருந்து ஜேன் பெற்ருள். இந்தச் சதியும் அம்பலமாகிவிட்டது—தப்பிச் செல்லும் வழி அடைக்கப்பட்டுவிட்டது.

“மன்னவா! விடைபெற்றுக்கொள்ளட்டுமா! தாங்கள் இங்கிருந்து சென்றுவிடத் திட்டமிட்டிருக்கிறீராமே!” என்று கேலிபேசி, எச்சரித்தான், கோட்டைக் கவர்னர்.

மன்னன் சீறவில்லையாம், சிரித்தானும்!

மாறுவேடம் புனைந்துகொள்வது, மறைந்திருப்பது, காட்டு வழிகளைக் கண்டறிவது, பலகணிக்கம்பிகளை அகற்றுவது, போன்ற சாகசச் செயலெல்லாம், மன்னன் செய்துபார்த்தான். திறமையை இந்தத் துறைக்கே செல விட்டானே தவிர, காலத்தின் குறியை அறிந்து, மக்களிடம் தோழமைகொள்வோம் என்ற எண்ணத்தைப் பெற்ருனில்லை.

கரம் எக்காரணத்தாலோ வலுவடைந்துவிட்டது. அதனுலேயே, நாம் இவர்களிடம் சிக்கிவிட்டோம், அவர்கள் தம் வலுவை இழந்துவிடுவர், விரைவிலில்லாவிட்டாலும் சிலகாலம் சென்ருன பிறகு, அப்போது மீண்டும் தர்பார் நடத்த இயலும், புரட்சிக்காரரைப் பொசுக்கிவிடலாம் என்று பகற்கனவு கண்டபடி இருந்தான் மன்னன். கருத்து, சதித்திட்டம், சாகசம் இவற்றிலேயே படிந்திருந்தது.

மன்னன் நிலை இவ்வாறிருக்க, மாவீரன் கிராம்வெல் ஸ்காத்லாந்துக்காரர் எதிர்ப்புரட்சி நடத்தக் கிளம்பியதை அழித்தொழித்து வெற்றிகண்டான்.

மன்னன் எந்தத் திக்கிலெல்லாம், உதவிகிடைக்கு

மென்று எண்ணிக் கொண்டிருந்தானே, அங்கெல்லாம் கிராம்வெலின் வெற்றி முரசும் கேட்கலாயிற்று. இடி கேட்ட நாகமாயினர் சதிகாரர்கள். கடைசிகட்டம் வந்து விட்டது; இனி மன்னன் தன் ஆதிக்கத்தை மீட்டுக்கொள் வது இயலாத காரியம் என்பது விளக்கமாகிவிட்டது. நாட்டுக்கு தக்கதோர் ஏற்பாடு செய்யும் தகுதி படைத்த தலைவன் ஆலிவர் கிராம்வெல் என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்ளவேண்டியதாகிவிட்டது. படையிலே வீரம், நிர்வாகத் துறையிலே திறம், பொதுவாகவே தன் னல மறுப்பு, இவைகள், கிராம்வெலின் அரண்களாயின.

மாமன்றத்திலே, முணுமுணுப்பாளர்கள், முன்னை நினைவுகளைவிட மறுப்போர், ஆகியவர்கள், விரட்டப் பட்டனர் — மாமன்றம் பணியாற்றவேண்டிய அளவு முடிந்துவிட்டது. இனி ஒரு பலம் பொருந்திய அரசு முறை வகுத்தாகவேண்டும், அந்தப் பணிக்காக, கிராம் வெலுடன் ஒத்துழைக்கக்கூடியவர்களுக்கு மட்டுமே, மாமன்றத்தில் இடம்! ஐம்பதின்மரே, இதுபோது மாமன்ற உறுப்பினர்கள்.

மன்னனை என்ன செய்வது? பெரும் பிரச்னையாகி விட்டது. மறப்போம், மன்னிப்போம்! என்று கூறிட மக்களில் ஒரு பகுதியினர்; மற்றோர் பகுதியினரோ, குறிப்பாக, படையினரோ, "மன்னன் மக்கள் துரோகி! ஒழித்துக் கட்டத்தான் வேண்டும்" என்று கூறினர்.

"அவன்" வழி காட்டுவான் என்றான் மன்னன். "அவன்" கட்டளைப்படி நான் நடந்துகொள்வேன் என் றான் கிராம்வெல்.

பிரிட்டனில், சிறையில் மன்னன் — சொந்த அரண் மனையில்தான், ஆனால் பல்லும் நகமும் போன புலி.

விசாரம், வேந்தனைக் கிழவனாக்கிவிட்டது — தலை மயிர் நரைத்துவிட்டது—கண்ணொளி குறையலாயிற்று—

அழகழகாகச் சுருளை சுருளையாக இருந்த முடி, பொலி விழந்துவிட்டது. எந்த மன்னனும் பெறத் துணியாத பெருநிலை கேட்டவன் சார்லஸ்! ஆண்டவனுக்குச் சமம் அரசன் என்ற தத்துவம் பேசினவன், மக்களுக்கு, எது உரிமை, எது நன்மை என்பதை அறியும் ஆற்றலே மன்னனுக்குத்தான் உண்டு என்று வாதாடியவன், அந்தத் தீதான தத்துவத்துக்காக ஒரு நாட்டையே படுகளமாக்கி விட்டவன், பதினோராண்டுகள் மாமன்றம் கூட்டாமல் அரசு புரிந்தவன். பிரபுக்கள் பலர் பணிவிடை செய்வர் பிரதாபம் கூறிடுவோர் பலர்! அவனை எதிர்த்தோர், சிறையிலும் தூக்குமேடையிலும் உயிரிழந்தனர்! அப்படிப் பட்ட சார்லஸ் மன்னன் அடைப்பட்டுக் கிடக்கிறான்; ஆலிவர் கிராம்வெல்லின் பேனா முனையில், மன்னன் எதிர்காலம் இருக்கிறது.

கணவனுக்கு உற்ற கதியை எண்ணிக் கண்ணீர் வடித்தவண்ணம் எனிரிட்டா அரசி; பிரான்சில்.

இடையே கடல், ஒருபுறம் மன்னன் சிறையில், மற்றோர்புறம் சிறையிலும் கொடிய நிலையில் ராணி பிரான்சில்.

இளவரசன், தந்தையுடன் இல்லை. கடைசி மகனும்; மகளும்மட்டுமே பிரிட்டனில் உள்ளனர்.

"என் தலையைவெட்டிவிடுவார்கள், மகனே! வெட்டி விடுவார்கள்!" என்று மகனிடம் மன்னன் கூறுகிறான். மன்னனிடம் கடைசி நாள்வரை பணியாளராக இருந்தவர்கள் கசிந்துருகி அழுகிறார்கள். மன்னன் சாகத் துணிந்துவிட்டான்; படையினரின் போக்கை ஆதரித்த மாமன்றம் மரண ஓலை தயாரிக்க இணங்கிவிட்டது.

ஜான்பிராட்ஷா என்ற வழக்கறிஞரைத் தலைவராகக் கொண்ட ஒரு விசாரணைக் குழு அமைக்கப்பட்டது.

133 உறுப்பினர்கள். வெஸ்ட்மினிஸ்டர் மண்டபத்தில் கூடிய இந்த விசாரணைக் குழுவுக்கு, மன்னன் அழைத்து வரப்பட்டான்.

"நான் உங்கள் மன்னன்! என்னை விசாரிக்கும் தகுதி இந்தக் குழுவுக்குக் கிடையாது. எந்த அதிகாரத்தின் பேரில், என்னை விசாரிக்க முற்பட்டீர்கள்" என்று கேட்ட ன் மன்னன்.

"மக்கள் தந்த அதிகாரத்தால்!" என்று பதிலிறுத்த ர் பிராட்ஷா. மன்னன்தான், மக்களுக்கு அந்தத் த ,தி கிடையாது என்ற தத்துவம் கொண்டவனாயிற்றே, வி ாரணைக் குழுவின் தகுதியை ஏற்றுக்கொள்ள மறுத்தா ன்.

கு ழு வி ன் கேள்விகளுக்குப் பதில் தருவதில்லை; கு று க் கு க் கேள்விகளும் எழுப்புவதில்லை, "என்னை வி சாரிக்கும் தகுதி உங்களுக்கு இல்லை" என்றே கூறி வ ்தான்—மூன்று நாட்கள்.

முடிவில், மக்கள் உரிமைகளைப் பறித்து, எதேச்ச ் கார ஆட்சி நடத்தி, இறுதியாக மக்கள் மீதே போர் ெ ாடுத்த மாபெரும் துரோகத்துக்காக, ம ன் ன ன் சா லசைத் தூக்கிலிடுவது என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

மன்னனைத் தூக்கிலிட மக்கள் தீர்ப்பளிக்கிறார்கள்! ம ள்! வெடிமருந்துக் கிடங்கோ? பசும் புற்றரை மேலே, கீ ழ வெடிமருந்துக் கிடங்கு என்பதுபோல, அஞ்சி அஞ்சிச் சாகிறவர்களாக, ஆளடிமை செய்பவர்களாகத் தோற்றமளிக்கும் மக்கள், தாங்கக்கூடிய அளவு தாங்கி யான பிறகு வெடிமருந்துச் சாலை போலாகிவிடுகின்றனர் —அரியாசனங்கள் ஆடுகின்றன, மணி முடிகள் சிதறு கின்றன—முடிமட்டுமா! முடிதரித்த சிரமே, இ தோ வெட்டப்படுகிறது.

ஓராண்டு ஈராண்டுக்கு முன்பு கூறியிருந்தால் நம்பி

இருக்கமாட்டார்கள்—பத்தாண்டுகளுக்கு முன்பு சொல்பவன் பிணமாக்கப்பட்டிருப்பான்—ஆனால் இதோ 1649-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் முப்பதாம் நாள், மன்னன் சார்லஸ், அவன் அரண்மனைக்கு எதிரே அமைக்கப்பட்ட தூக்குமேடைக்கு அழைத்துக்கொண்டு வரப்படுகிறான்.

எதிரே மக்கள் திரளாக, ஆனால் கண்டனம் இல்லை, கலகம் இல்லை, இந்த நிலைக்குத் தன்னைத்தானே துரத்திக் கொண்டானே மன்னன், என்ற வருத்தம் தோய்ந்த முகத்துடன் உள்ளனர்.

மன்னன் வருகிறான், படை வீரர்கள், முரசுகளைக் கொட்டுகிறார்கள்.

மன்னன் தூக்குமேடை ஏறுகிறான்-உடன் இருக்கும் உற்ற நண்பர்கள் அழுகிறார்கள்—ஒருவர் மயக்கமுற்றுக் கீழே சாய்கிறார்.

மன்னன் பதறவில்லை, கதறவில்லை, சிரத்தைச்சாய்க்கிறான்—ஒருவெட்டு—சிரம் துண்டிக்கப்பட்டுவிட்டது—"இதோ துரோகியின் தலை" என்று ஒருவன் எடுத்துக் காட்டுகிறான், தத்துவத்தால் தன்னைத்தானே அழித்துக் கொண்ட சார்லசின் சிரத்தை!

மக்கள் கரம், மன்னன் சிரத்தையும் கொய்துவிடும் வலுப்பெற்றது.

அது ஏர்பிடிக்கும், துலாக்கோல் பிடிக்கும், கூப்பும், தழுவும், வரிசெலுத்தும், வணக்கம் கூறும்,—ஆனால் தாங்கொணாத கொடுமை செய்து, உரிமையைப் பறித்திடக் கொடுங்கோலன் கிளம்பினால், அந்தக் கரம், அவன் சிரம் அறுக்கும். சார்லஸ் சம்பவம் இதைக் காட்டும், பயங்கரப் பாடம்! பாராள்வோர் எப்போதும் நினைவில் வைத்திருக்கவேண்டிய பாடம்!!